# வெள்ளிமலை

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்
## உலக புத்தக தினம்
## ஏப்பிரல் 23.2008




சித்திரை 2008
இதழ் 03

திருக்குறள் சிலப்பதிகாரம் நாலடியார்


50/=

- வெளிநாட்டிலுள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம் மூலமாக பணத்தை அனுப்புமாறு கூறுங்கள்.
- பணத்தை அனுப்பியவுடன் உங்களுக்கு பணத்தை அனுப்பும் கட்டுப்பாட் டிலக்கத்தை (MTCN) அறிவிப்பார்.
- அருகிலுள்ள எமது நிறுவனத்துக்கு நேரில் வந்து இலக்கத்தை அறிவித்து உங்கள் பணத்தைப் பெறலாம்.
- பணம் பெற வாங்கிக்கணக்கு தேவையில்லை.
- பணம் பெறும்போது சேவைக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

உங்கள் பணத்தை பாதுகாப்பாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள

உலகின் எப்பாகத்திலிருந்தும் பணத்தினை அனுப்ப இலகு வழி

MMBL Sub Agent




WESTERN UNION | பணப் பரிமாற்றம்

இப்பணத்தினை பாதுகாப்பாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள

யாழ் நகரில் MMBL உப முகவர்

சாங்கீதா ஏஜென்ற்

இல. 412, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
மத்திய பஸ்நிலையம்,
முன்பாக (HNB அருகாமை)

021 222 8590
021 222 8591


# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை


மலை : 01 | சித்திரை 2008 | வெள்ளி : 03


இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -


வலிகாமம் தெற்கு பிரதேச
வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
கு. பா. விஜயகுமார்

ஆசிரியர் குழு
திரு. அ. தற்பரானந்தன்
திரு. ஐ. இராமசாமி
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. ப. சிவானந்தசர்மா
திரு. சி. றமேஷ்
திரு. கு. றஜீபன்
செல்வி. ஸ்ரீ. ஸ்ரீரங்கநாயகி

தொடர்புகளுக்கு:-
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு:
கிருஷ்ணா பிறின்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.


இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர்.

## மலைமீதிலே


எண்ணச்சாரல் 02
உள்ளூராட்சி மன்றங்கள் 04
- திருமதி. சு. சொக்கலிங்கம்
நூல் - பா. பாலச்சந்திரன் 06
நூலின் பரிணாமம் - பா. ஜசோதா 09
21ம் நூற்றாண்டு நுழைவாயில் 12
- க. சௌந்தரராஜன்
பயிலரங்கு. பண்பட்ட வாசிப்பு 15
- சு. விஸ்வரத்தினம்
5வது அகவையில் HNB சுன்னாகம் 16
- மகேசன் தயாகரன்
சுன்னாகம் முருகேசபண்டிதர் 20
- சி. ரமேஷ்
வில்லியம் ஷேக்ஸ்பியர் 24
- விழிசிட்டி கா. சுப்பிரமணியம்
கவிதைகள் - இலட்சுமி புத்திரன் 27
- சு. நளாஜினி
வேட்ஸ்வேர்த் - B.B சந்திரன் 29
முதியோரை அலட்சியப்படுத்தாதீர் 31
- ம.க. ஸ்ரீதரன்
அச்சுப்பதிப்பு 34
விண்ணின் அமுதம் 38
- ம.பா. மகாலிங்கசிவம்
வலி தெற்கின் சுற்றுச்சூழல் பிரச்சனை 41
- ச. பாலகௌரி
சூரிய வழிபாடு - S.T. குமரன் 45
ஸ்கந்தா நூலகம் - ஆறு. திருமுருகன் 47
சிறுகதை: தரிசனம் - ஆ. ரவீந்திரன் 49
ஞானவிலாசம் - 53
வாசிப்பும் சமூக மேம்பாடும் 58
- ஸ்ரீ அருளானந்தம்
பிரதேச பாடசாலை நூலக விபரம் 63

## ஏண்ணச்சாரல்
## உலக புத்தக நாள் ஏப்பிரல் 23

வணக்கம் வாசக நெஞ்சங்களே!

உங்களின் அரவணைப்பாலும் அனுசரணையாளர்கள், விளம்பர தாரர்களின் ஊக்குவிப்புகளினாலும் இலக்கியத் துறையினரின் பங்கேற்புகளாலும் வெள்ளிமலை 3 வது இதழ் உலக புத்தக நாளாகிய இன்று உங்கள் கரங்களில் தவழ்கின்றது. சஞ்சிகை உலகினிலே 'வெள்ளிமலை' யின் வரவினைப் பல்வேறு துறையினரும் பாராட்டி வரவேற்று வருகின்றார்கள். யாவர்க்கும் நன்றிகள்.

இவ்விதழ் உலக புத்தக நாளை முன்னிட்டு நூல், நூலகம், அச்சுத்துறை சார்ந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது. வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள பாடசாலை நூலகங்களினதும் சனசமூக நிலையங்களினது நூலகங்கள், மற்றும் நிறுவனங்களின் நூலகங்கள் சார்ந்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அச்சிட்ட பின்னர் கிடைத்தவை அடுத்த இதழ்களில் சேர்த்துக் கொள்ளப்படும். தகவல்களை வழங்கிய பாடசாலை அதிபர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு நன்றியுடையோம்.

அண்மையில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பொறுப்பேற்றிருக்கும் திரு.பி.ஜோன்சன் அவர்கள் நூலகஞ் சார்ந்து பல நல்ல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முயற்சியெடுத்து வருகின்றார். அவ்வாறே யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் அவர்களும் நூலகப் பணிகளுக்கு புத்துயிர் ஊட்டி ஊக்கப்படுத்தி வருகின்றார். யாழ். மாவட்ட அரச அதிபர் திரு.கே.கணேஷ் அவர்களும் மாவட்டச் செயலக அதிகாரிகளும் மாவட்ட கல்விவலயப் பணிப்பாளர்களும் கல்வி அதிகாரிகளும் பொதுமக்களினதும், மாணவர்களினதும் நூலகப் பாவனைக்குத் தேவையான செயற்திட்டங்களை நடைமுறைபபடுத்தி உறுதுணையாக விளங்குகின்றார்கள்.

இன்று வாரத்தில் இரு நூல் வெளியீடுகள், பலதுறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், செய்திமடல் வெளியீடுகளென புத்தூக்கம் காணப்படுகின்றது. பத்திரிகைத் தாள் தட்டுப்பாட்டு நிலைமாறியதும், இலக்கியப் பக்கங்களுடன் புத்தெழில் காட்டி பிரதேச பத்திரிகைகள் ஆக்க இலக்கியத்துறைக்கு இடமளித்து வருகின்றன. வாசிப்பு கலாசாரம் பரவ இவ்வாறான சகல துறையினரின் பங்களிப்புகளும் அவசியம்.

பிரதேச நூலகங்களுக்குத் தேவையான ஆளணி நியமனங்கள் செய்யப்பட்டு, நூலகக் கட்டிடம், தளபாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, தகவல் தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, நூல்களின், சஞ்சிகைகளின் விலை யேற்றத்துக்கு ஏற்ப போதிய நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு கிராம மட்டம் வரை நூலக சேவை ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊக்குவிக்கப்பட "மாவட்ட நூலக அபிவிருத்தி ஆண்டு" செயற்றிட்டம் வகுக்கப்பட வேண்டும்.

நல்ல நூலகச் சூழமைவில் நூலக சேவைகள் சிறக்கட்டும்!
வாசிப்புப் பண்பாடு தழைக்கட்டும்!



உள்ளூராட்சித் திணைக்களம், வட மாகாணம்
Department of Local Government, Northern Province
கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை.
Website : www.npc.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee.

## வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் ஆசியுரை

வலி. தெற்கு பிரதேச சபையினர் உலக புத்தக தினத்தையொட்டி வெளியிடும் இச் சிறப்பு மலர் ஆக்கபூர்வமான செயற்பாட்டின் வெளிப்பாடாக நாம் கொள்கிறோம்.

நூல்களின், அறிவுத் தேடலின் அவசியம் பல்துறையிலும் மாணவர் முதல் அறிவுஜீவிகள் வரை மிக அவசியமாக வேண்டப்படும் இந்நிலையில் காலத்திற்கேற்ற, தேவைக்கேற்ற ஓர் செயற்பாடாக இவ் வெளியீட்டைப் பெருமையுடன் போற்றலாம்.

நூல்களும் நூலகங்களும் அறிவு ஜீவிகளின் இன்றியமையாத் தேவையாய் நாட்டின் பல்துறை வளர்ச்சிக்கு உதவும் பொக்கிஷங்களெனலாம்.

நேர விரயமின்றி வேண்டும் பொருளை ஆய்ந்து பெற்றுப் பயன்பெற உதவுபவை நூல் நிலையங்களே. தரமிக்க நூல்களால் அவை பெருமை பெறுகின்றன.

'வெள்ளிமலை' யின் உள்ளடக்கம் சிறந்ததோர் நூலைத் தொகுத் தளித்த சிறப்பைச் சபைக்கு வழங்கியுள்ளது. இத்தகைய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எம்மால் என்றும் வரவேற்கப்படும் எனக் கூறுவதுடன் நற்பணி சிறக்க மனம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

என்றும் நன்றே செய்க
நன்றும் இன்றே செய்க

(பி. ஜோன்சன்)
உள்ளூராட்சி ஆணையாளர்
வடமாகாணம்.

# பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளின் ஒன்றான நூலக சேவைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் 'வெள்ளிமலை' சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும். பிரதேச வாசகர்களின் ஆக்கங்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் இதன் உள்ளடக்கம் அமைதல் போற்றப்படும் விடயமாகும்.

இச்செயற்பாட்டிற்கு அயராது உழைக்கும் செயலாளர், நூலகர், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். இவர்களது இச்செயற்பாடு தொடரவும் 'வெள்ளிமலை' சஞ்சிகை அனைவரது தேடலுக்கும் விருந்தளிப்பதாக என்றென்றும் வெளிவரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி . ம. வசந்தகுமார்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# உள்ளூராட்சி மன்றங்கள் – மக்களின் பங்கேற்பும், சமூக அபிவிருத்தியும்

**திருமதி. ச. சொக்கலிங்கம்**
**செயலாளர், வலி. தெற்கு பிரதேச சபை**

உள்ளூராட்சி மன்றம் என்பது தமது அதிகாரப் பிரதேசத்தில் "சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட சமூகமொன்றைக்" கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.

இம்மன்றங்களினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் யாவும் பொது மக்களின் ஒத்துழைப்பு, ஆசீர்வாதம், பாதுகாப்பு, பங்களிப்பு, என்பவற்றினாலேயே சிறப்பானதாக அமைகின்றன. சகல விடயங்களையும் சட்டத்தினால் மட்டும் செய்ய முடியாது. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக பொது மக்கள் மத்தியிலுள்ள மரபு ரீதியான கடப்பாடுகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் சட்டத்தினால் விதித்துப் பெற்றுக்கொள்ளும் அளவிலும் பார்க்க அதிக அளவிலான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கிராமசபை முறை அமுலில் இருந்த காலத்தில் பொது மக்களின் பங்கேற்பு மிக உயர் மட்டத்தில் காணப்பட்டது. வீதிகள், மயானங்கள், வடிகாலமைப்பு, வடிகால்களைச் சுத்தம் செய்தல், புதிதாக வீதிகளையும், மதகுகளையும் நிர்மாணித்தல் போன்ற கிராமத்தின் பல்வேறு நடவடிக்கைகள் உள்ளூராட்சி மன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளினது உதவியுடன் பொது மக்களினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டன. தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமையால், பொது மக்களின் பங்கேற்பும் இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. இந்நிலையில் கிராமிய மட்டத்திலான தலைவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அத்துடன் 1970 ம் ஆண்டில் நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்ட திறந்த பொருளாதார முறையும் இந்நிலைமை ஏற்படக் காரணமாக இருந்ததெனலாம். காரணம் பொது மக்கள் கூட்டாகச் சேர்ந்து செயற்படும் தன்மை மாறி, தனிப்பட்ட வாழ்க்கை முறையில் சுயநலத்தை நோக்கமாகக் கொண்டு வாழ முற்பட்டனர். இதனால் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தொண்டர் அமைப்புக்கள் என்பவற்றின் செயற்பாடுகள் நலிவடைந்து மக்களின் பங்கேற்பைப் பலவீனப்படுத்தின. அத்துடன் மக்கள் வசதியான, சொகுசான வாழ்க்கையில் கவனம் செலுத்தினர்.

மாவட்ட அபிவிருத்திச்சபை ஒழிக்கப்பட்டு, பிரதேசசபை முறை ஆரம்பமானபோது, விகிதாசாரத் தேர்தல் முறை ஏற்பட்டமையால், பொது மக்களின் பங்கேற்பு பெரிய அளவில் இடம்பெறவில்லை. உள்ளூராட்சி மன்றத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குகளைப் பயன்படுத்துவதும், மன்றத்திற்கு வரி செலுத்துவதும் தவிர மன்றத்தின் நடவடிக்கைகளுக்கு பொது மக்களின் பங்களிப்பு இருக்கவில்லை. வரவு செலவுத்திட்டமும் நிறுவன மட்டத்திலேயே வகுக்கப்பட்டது. தற்போதய தேர்தல் முறையின் விளைவாக உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும், உறுப்பினர்களும் வரி செலுத்துவோரை விடத் தமது அரசியல் கட்சி குறித்து அதிக அக்கறை செலுத்துகின்றனர். இதனால் அவர்கள் கணக்கீட்டுப் பொறுப்பு, தெளிவுத் தன்மை மற்றும் சிறந்த ஆட்சியின் ஏனைய அடிப்படை விடயங்கள் குறித்து அதிக அக்கறை காட்டுவதில்லை. இந்நிலையில் மக்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழப்பதுடன், உரிய உதவியையும், ஒத்துழைப்பையும் வழங்குவதிலிருந்து விலகிவருகின்றனர்.



எனவே, உள்ளூராட்சி மன்றங்களை மக்களுக்கு நேரடியாகப் பொறுப்புச் சொல்லக் கூடிய, பயன்வாய்ந்த நிறுவனமாக மாற்றியமைப்பதற்கு மக்களின் பங்கேற்பு அத்தியாவசியமாகும். மக்களின் முறையான பங்கேற்பின்றிச் சேவைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவது கடினம். உதாரணமாக பொதுச்சந்தையைக் கூறலாம். பொது மக்களின் சகல ஒத்துழைப்பும் கிட்டினால், சிறந்த முறையில் சந்தை முகாமைத்துவத்தை ஏற்படுத்தலாம். ஆகவே பொது மக்களின் பங்கேற்புச் சம்பந்தமாகப் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

01. பொது மக்களின் நன்மதிப்பை ஏற்படுத்தவும், அவர்களை உள்ளூராட்சி மன்ற விடயங்களில் பங்கேற்கச் செய்யவும் ஒழுங்கமைப்பொன்றை ஏற்படுத்தல்
02. ஆலோசனைக்குழு அமைத்தல் – உள்ளூராட்சியல் அனுபவமுள்ள பிரஜைகள், விடய ரீதியான நிபுணர்கள் உட்பட
03. பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் – வருகை தரும் பொது மக்களின் பிரச்சனைகளைச் சிறந்த முறையில் அணுகி, தேவையான அறிவுறுத்தலை வழங்குதல்.
04. பிரிவுக் குழுக்கள் அமைத்தல் – மன்றத்தின் பிரதேசம் கூடிய நிலப்பரப்பைக் கொண்டது. எனவே பிரிவுகளுக்கேற்றவாறு குழுக்களை அமைத்தல்.
05. வரியிறுப்பாளர் சங்கம் – மன்றத்தின் வரவு செலவுத்திட்டத்தை திட்டமிடுதல், தயார் செய்தல், பொதுசனத் தொடர்பை ஏற்படுத்தல்.
06. திட்டமிடுதல் – கீழிருந்து மேல் நோக்கிச் செல்லல்
07. சமூக நிலையங்கள் – இளைஞர்களின் ஒத்துழைப்பைப் பெறுதல்
08. இன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல் – வளங்களை இன, மத பாகுபாடின்றி எல்லோருக்கும் ஒரே விதத்தில் பயன்படுத்துதல்.

மேற்காட்டப்பட்ட விடயங்களை அதிகளவு பயன்படுத்தி மக்களின் பங்கேற்புடன் கூடிய சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

ஆதாரம் – உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை

## களை களைவோம்

### பாத்தீனியம் விழிப்புணர்வு அவசியம்

உயிர் கொல்லி பாத்தீனியம் களையைக் காணுமிடங்களில் எல்லாம் அழித்தல் வேண்டும். பாத்தீனியம் களை ஒருவரது காணிக்குள் காணப்பட்டு, அதை அழிக்க அவர் நடவடிக்கை எடுக்காவிடின், தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாத்தீனியம் களைக் கட்டுப்பாடு சம்பந்தமான 1163/23 - 2000ம் இலக்க 20.12.2000 திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, அவருக்கு ஒரு மாதத்துக்குக் குறையாததும் ஆறுமாதத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபாவுக்கு குறையாததும் ஒரு இலட்சத்துக்கு மேற்படாததுமான தண்டப் பணம் அறவிடப்படும்.

இதைக் கருத்திற் கொண்டு பிரதேச எல்லைக்குள் வாழும் மக்களை பாதீனிய விழிப்புணர்வுடன் செயற்படுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.


– **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை.**



# நூல்

B.B. சந்திரன்

**“வி**த்தை விரும்பு” என்று ஆத்திசூடி சொல்கிறது. அந்த வித்தையை எமக்குத் தருவது நூல் ஆகும். “நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு” என்பது பெரியோர் வாக்கு. நூல் என்பது என்ன? என்பதற்கு பவநந்தி முனிவர் இரு வெண்பாக்கள் மூலம் இவ்வாறு கூறுகின்றார். பவணந்தி



**“ பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்**
**செஞ்சொற் புலவன் சேயிழையா – எஞ்சாத**
**கையேவா யாகக் கதிரே மதியாக**
**மையிலா நூன்முடியு மாறு”**
**“உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்**
**புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்**
**கனக்கோட்டந் தீர்க்கு நூ லஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு”**

பொருள் யாதெனின், தன் சொல்லைப் பஞ்சாகவும், செய்யுள், இழையாகவும், செவ்விய சொற்களை அறிந்த புலவர் நூற்கின்ற பெண்ணாகவும், குறையாத வாய்கையாகவும், அறிவு கதிராகவும் குற்றமில்லாத கல்வி நூல் உண்டாகின்றது. உடம்பினுள்ளே இருக்கின்ற ஞானத்தை வளர்ப்பித்து, நினைக்கப்பட்ட தீமையாகிய அஞ்ஞானத்தைக் கெடுத்து, மரத்தின் மீதியான கோணலை போக்கின்ற நூலின் தன்மை போல மனிதரின் மனத்தின் கோணலை போக்குவது நூலின் பெருமையாகும்.

இந்நூலானது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு விடயங் களையும் முன்னுரை, சிறப்புரை போன்றவற்றோடும் பத்தழகுடனும் பத்து குற்றங்கள் அற்றும் முடிவதாகும்.

**“ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்**
**பாயிர மில்லது பனுவ லன்றே”**



என்கிறார் தொல்காப்பியர். இப்பாயிரமானது பிறர் செய்வதே முறையாகும். பாயிரத்தில் அடங்கவேண்டியது “நூனுதல் பொருளே” ஆகும். அதை ஏன் பிறர் செய்ய வேண்டுமென்றால், அதற்கு காரணம் "தான்தற் புகழ்தல் தகுதி யன்றே " என்பது ஆகும். பாயிரம் நூலிற்கு அழகாம். அது மாளிகைக்குச் சித்திரமும், மாநகர்க்கு கோபுரமும், நடிக்கின்ற அழகிய நங்கையர்க்கு ஆபரணமும் போன்றது. இதை யார் செய்ய வேண்டுமெனின் ஆக்கியோனது ஆசிரியன், உடன் கற்றோன், மாணவன், ஆக்கியோனது நூலிற்கு உரைசெய்தோர் ஆகிய நால்வரில் ஒருவர். சிறப்புப்பாயிரம் பதினொரு விடயங்களைக் கொண்டது.

நூல் மூன்று வகைப்படும். முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்பனவாகும். இறைவனுடைய அருளினால் ஏற்பட்டது முதல் நூல் ஆகும். வழி நூலென்பது கடவுளும் அவன் வழிபட்டோரும் இயற்றிய நூல்களை ஒத்து சிறு மாறுதல்களுடன் வருவது ஆகும். சார்பு நூலென்பது முதல் நூல், வழி நூல் என்னும் இருவகை நூல்களுக்கு சிறுபான்மை ஒத்தும் பெருபான்மை மாறுபடுவதும், பழம் நூல்களிலிருந்து சில மேற்கோள்களை எடுத்து கூறுவதும் ஆகும்.

நூலிற்கு பெயரிடுவது எவ்வாறெனின் முதல் நூலும். அந்நூல் செய்தோனும், அந்நூலில் மிகுதியாக சொல்லப்பட்ட பொருளும். நூல் செய்ய உதவியவனும், அந்நூலைச் செய்வித்தோனும். அந்நூலின் குணமும் ஆகியவற்றில் ஒன்றால் பெயர் ஏற்படும். வழி நூல் நான்கு வகைப்படும். தொகுத்துக்கூறல், விரித்துக்கூறல், தொகுத்தும் விரித்தும் கூறல், மொழிபெயர்ப்பு என நான்கு வகைப்படும்.

அடுத்து நூலாசிரியனுடைய தகுதிகள் உயர்குடி பிறப்பு, ஜீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பல நூல் அறிவு, எடுத்தியம்பும் திறமை என்பனவாகும். அத்துடன் உலக நடைமுறை அறிவும், நிலம் போற் பெருமையும், கலங்காத வலிமையும், பொறுமையும், முயற்சிக்குத் தக்க பயனளிக்கும் தன்மையும், மலை போல் அளவுபடாத வடிவமும், பல வகைப் பொருளும், எவராலும் அசைக்கப்படாத தன்மையும், நெடுந்தூரத்தில் உள்ளவர்களால் காணக்கூடிய உயர்ச்சியும், வறட்சிக் காலத்திலும் தன்னைச் சேர்ந்தோரைக் காப்பாற்றும் தன்மையும், துலாக்கோல் போல் சந்தேகம் தீர நீதியைக் காட்டலும், நடு நிலைமையும். பூப் போல் சுபகருமத்திற்கு உரியதாகவும். எக்காரியத்திற்கும் தேவைப்படுதலும், கண்டோர் யாவர்க்கும் மகிழ்ச்சியளிப்பதும், மென்மையான குணமுடைமையும். உரிய காலத்தில் முகமலர்தலுடைமையும் ஆகியனவாகும்.

நூலைப் படிப்போன் இருதரம் ஒரு நூலைப் படித்தால் அந்நூலில் பிழைப்படான். மூன்று தரம் படித்தால் முறையறிந்து பிறர்க்கு கற்பிக்கும் திறன் பெறுவான். ஆசிரியரிடம் கற்றவன் ஒருவன் காற்பங்கே அறிவைப் பெறுவான். அவன் மற்றவருடன் அதைப்பற்றி கலந்துரையாடினால் காற்பங்கறிவு கூடப்பெறுவான். மேலும் அவன் அதை பிறர்க்கு கற்பித்தாலோ, சபையில் உரையாற்றினாலோ மீதி அரைப்பங்கு அறிவையும் பெற்று அவன் ஒரு முழுவறிவைப் பெறுகின்றான்.

இறுதியாக தற்காலத்தில் நூல்நிலையங்களை "கருத்துக்களஞ்சியம்" (Idiastore) என்றும் அழைக்கின்றார்கள். நூல்கள் எமக்கு கருத்துகளை வழங்குகின்றன. ஓர் அறிஞனின் கருத்துப்படி "நூலானது அண்டுவோரை மறுக்காது; நகைக்காது; தண்டியாது; எவ்விடத்திலும் எந்நேரமும் தன்னால் இயன்றதை வழங்கிக்கொண்டே இருக்கும். எனவே நூலைப்போல் அரிய ஆசான் கிடைப்பது அரிது. நூலைப் படிக்கும் தோறும் புதிய புதிய கருத்துக்கள் தோன்றும். நூலை வாசிப்பதில் பல முறைகள் உண்டு. மேலோட்ட வாசிப்பு, கருத்தூன்றிய வாசிப்பு, எழுத்தெண்ணிப் படித்தல் என்பனவாகும். வாசிக்கும்போது குறிப்பெடுப்பது நன்று. இந்திராகாந்தி அம்மையார் ஒரே காலகட்டத்தில் இரு நூல்களை வாசிப்பாராம். அதாவது எமக்கு நாட்டமுள்ள துறைகளில் நல்லவற்றை தெரிவுசெய்து அவை சம்பந்தமாக வாசிப்பது நன்று 'பேக்கன்' என்ற ஆங்கில அறிஞன் "தந்திரசாலிகள் வாசிப்பை அல்லது கல்வியை தரக்குறைவாகக் கூறுவர். சாதாரண மனிதர் புகழ்வார்கள். அறிவாளி அதை உபயோகிப்பான்" என்று கூறுகின்றார். அவர்மேலும் நூலை வாசித்து அதன் சிறப்பை அளந்து மனங்கொள்ளும்படியும் கூறுகின்றார். வள்ளுவர் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று கூறுகின்றார். பேக்கனின் கூற்றுக்கிணங்க நூல்களை வாசிப்பது ஒருவனை நிறைமனிதனாக்குகின்றது. நூல்களைப் போற்றி, வாசித்து, வளம்பெறுவோமாக! ■

---

**வண்ண வண்ண மலர்கள் பார்**
**வகை வகையான நிறங்கள் பார்**
**கண்ணைக் கவரும் எழிலோடு**
**காற்றில் ஆடும் மலர்கள் பார்!**
**நறுமணம் வீசி வண்டுகளை**
**நாடச் செய்து காயாகும்**
**உறுதுயரேதும் கொள்ளாமல்**
**உலகுக்கு அழகு அளித்திடுமே!**




**இ. ஆரணியா**
**யாழ் இந்து மகளிர்கல்லூரி**



# நூலின் பரிணாம வளர்ச்சி

**பா. ஜசோதா B.A (Hons)**



மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் நூல்களின் தோற்றம் அவற்றின் பரிணாம வளர்ச்சி என்பன அறியப்பட வேண்டியவையாகும். இன்று நாம் உபயோகிக்கும் நூல்கள் உருவாகுவதற்கு முன்னோர் பட்ட அரும்பாடுகள் பலவாகும். தற்காலத்தில் இணையத்தில் நூல்களை வாசிக்க கூடியதாக இருக்கின்றது அல்லது பெறக்கூடியதாக இருக்கின்றது. பெயர் பெற்ற சர்வாதிகாரியான ஹிற்லரே தனது படைகளை 'நூல்நிலையங்களை அழிக்கவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டான். என்றால் நூல்களின் அத்தியாவசியத்தை புரிந்து கொள்ளலாம்.

எமது ஆசியப்பிரதேசத்தில் செய்திகளை அல்லது விடயங்களை பாறைகளில் எழுதினார்கள். எகிப்தில் களிமண் தட்டில் எழுதினார்கள். கற்களிலும் பதித்தார்கள் பத்துக்கட்டளைகள் முதன்முதலில் கற்தகட்டில் பொறிக்கப்பட்டதாகத்தான் கூறுகின்றார்கள். எமது பிரதேசத்தில் செப்புத்தகட்டில் எழுதினாலும் நூல்கள் ஏட்டில் எழுதப்பட்டன. யாழ்ப்பாணம். இந்தியாப் பகுதிகளில் பனையோலைகளிலும், மரப்பட்டைகளிலும் எழுதுவது போன்று தென்னிலங்கையில் ஒரு வித தாவரத்தின் பதப்படுத்தப்பட்ட ஓலையில் எழுதினார்கள். எகிப்தில் பைப்பிரஸ் என்னும் தாவரத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சுருள்களில் எழுதினார்கள்.

இதற்கு அடுத்ததாக மந்தைகளின் பதப்படுத்தப்பட்ட தோல்களில் எழுதினார்கள். இவ்வாறு எழுதுவதில் பல இடர்பாடுகள் தோன்றின. ஒரு சுருளில் முழு இலியற் காவியம் எழுதக்கூடியதாக இருந்தது என பிலினி கூறுகிறார். இது மிகைப்படுத்தப்பட்டதாகவும் இருக்கலாம் இருப்பினும் 12, 16 அடி நீளம் உள்ளவையாக இருந்தன. தோற்சுருள்களிலிருந்து ரோம கிரேக்க பொற்காலங்களில் உண்டான படைப்புகளை நாம் இன்றும் அறியக்கூடியதாக இருக்கின்றன. அவை கீழாகவோ, மேலாகவோ வாசிக்கக்கூடியதாக இருந்தன. இவை மத்திய கால கிறிஸ்தவ தேவாலயங்களில் மணிக்காரனுடைய சாய்வு மேசையில் தொங்கவிடப்பட்டன.


கி.மு இருபத்தைந்தாம் நூற்றாண்டில் தொடங்கிய பைப்பிரஸ் உபயோகம் கிறிஸ்து சதாப்தத்தின் ஆரம்பம் வரை தொடர்ந்தது. கி.மு இரண்டாம் நூற்றாண்டில் தோல்களை உபயோகிக்கும் பழக்கம் உண்டாகியது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பைப்பிரஸின் ஆதிக்கம் குறைந்து மரக்கூழ் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கடதாசி தொழிற்சாலைகள் உருவாகின. இந்நிலைமை அச்சுத்தொழில் ஆரம்பம் ஆகும்வரை தொடர்ந்தது. இதுவரை நாம் பார்த்தவற்றில் களிமண், பட்டை, கல், செப்புத்தகடு போன்றவற்றில் எழுதியவர்கள், பைப்பிரஸ், மிருகங்களின் தோல், ஸ்பராட்ரோபுல், மரக்கூழ் என்பவற்றை பயன்படுத்தத் தொடங்கினார்கள் என்பதை நாம் அறிந்து கொண்டோம்.

இனி புத்தகம் (Book) என்பது எவ்வாறு உண்டாயிற்று என்பதை பார்ப்போம். இதை லத்தீன் பாஷையில் "Codex" என்பார்கள். Book என்றால் மரக்கட்டை, மரத்துண்டு ஆகியவற்றையும். மரத்தாலான அச்சுப்பலகையையும் குறிக்கும். அச்சுயுகம் ஆரம்பமாகும் வரைக்கும் கையால் எழுதி புத்தகங்கள் ஆக்கப்பட்டன. முறியக்கூடிய புல் இனத்தைச் சேர்ந்த ஏடுகளை விட தோல் வகைகள் புத்தகங்களாக்குவதற்கு வசதியாக இருந்தன. மேலும் பந்திகளாக எழுதும் முறை இக்காலத்தில் இருந்தது. இக்கால கட்டத்தில் மூன்று திறந்த பக்கங்களையும், ஒரு சேர்த்த பக்கத்தையும் கொண்டு தோலாலான புத்தகங்கள் ஆக்கப்பட்டன.

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சிடும் முறை ஆரம்பமாகியது. கையெழுத்து போன்ற அச்சுக்கள் பயன்படுத்தப்பட்டன. பகுதித் தலையங்கம், தலையங்கங்கள், தொடக்க எழுத்துக்கள், பந்தி அடையாளங்கள், சிலவற்றுக்கு விளக்கப்படங்கள் என்பன கைகளால் ஆக்கப்பட்டு அதற்கு அலங்காரங்களும் செய்யப்பட்டன. 1470ல் கொலேன் என்ற இடத்தில் ஒன்பது வரிகளையும், பந்திகளையும், வெறும்பக்கங்களையும், தலைப்பையும், சில புகழ் உரைகளையும், உரோமன் இலக்கங்களையும், வேறு பல தகவல்களையும் உடைய புத்தகம் வெளியிடப்பட்டது. 1475ல் தலையங்கம் முதலாவது பக்கத்திலும்



அச்சடித்தவருடைய பெயர், திகதி, புத்தகத்தை விபரித்த வரிகள், தலைப்புடைய லத்தீன்நாட்காட்டியும் அதைச்சுற்றி வரிகளும் இடப்பட்டு வெளியிடப்பட்டன. இப்படியாக புத்தக வடிவமைப்பு ஆரம்பமாகியது. துதிப்பாடல்களும், சமய நூல்களும் முதலில் அச்சிடப்பட்டன. இக்கால கட்டத்தில் காகிதங்களும், புத்தகங்களும் மிகவும் தடிப்பாக இருந்தன. புத்தகங்கள் பருமனில் பெரிதாகவும், மெல்லிய பலகை உறைகளையும், தோல் உறைகளையும் கொண்டதாகவும் இருந்தன. 1623ல் சேக்ஸ்பியரின் "Folio" வும் மில்றனின் "பரடைஸ் லொஸ்ட்" உம் வெளியிடப்பட்டன. படிப்படியாக 17ம், 18ம், 19ம் நூற்றாண்டுகளில் அச்சுத்தொழில் முன்னேறி வந்தது. 16ம் நூற்றாண்டு ஆரம்பங்களில் ஜேர்மனி, இத்தாலி போன்ற இடங்களில் பத்திரிகைகள் ஆரம்பித்து நின்றுவிட்டன. படிப்படியாக முயற்சிகள் செய்யப்பட்டு 18ம் நூற்றாண்டளவில் பத்திரிகை அச்சிடுவது முக்கிய இடத்தைப் பெற்றது. 1820ல் காலிகோ புத்தகம் கட்டும் முறை காணப்பட்டது. 1894ல் பிரான்ஸில் இவ்வாறு நாவல்களும் அச்சிடப்பட்டன. 1915ற்கும் 1920ற்கும் இடையில் இயந்திரங்களை உபயோகித்து அச்சுத்தொழிலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினர். புத்தகங்களை அழகாக அமைப்பதிலும், பயன்பாட்டுடன் அமைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது.



நூல் அமைப்பின் வரலாற்றில் அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு 1476ல் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. அதிலிருந்து படிப்படியாக அச்சடிக்கும் முறை முன்னேறியது. பருமனில் பெரிதாக இருந்த புத்தகங்கள் படிப்படியாக தற்போதைய பருமனுக்கு வந்து கைக்கு அடக்கமான புத்தகங்களாகத் தோன்றின. தற்காலத்தில் ஓர் அங்குல அளவு புத்தகங்கள் கூட வெளிவந்துள்ளன. மத்தியகாலப் பகுதிகளில் நூல்நிலையங்களில் நூல்கள் சங்கிலியினால் பூட்டப்பட்டு இருந்தன.

(தொடர்ச்சி மறு இதழில்)

# 21ம் நூற்றாண்டு அறிவுக்கான நுழைவாயில்

**க. சௌந்தரராஜன்**

யுனஸ்கோ நிறுவனத்தின் கொள்கை விளக்கத்தில் அறிவைப் பெறுவதற்கான உள்ளூர் நுழைவாயிலாகப் பொதுநூலகம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. தனிமனித மேம்பாடு, சமுதாய மேம்பாடு என்பன அடிப்படையான மனித விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன. நல்ல அறிவுடையோர் தமது ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதன் மூலமும் சமுதாயத்தில் முக்கிய பங்கினை வகிப்பதன் மூலமும் இவ்விழுமியங்களை சாத்தியப்படுத்தலாம். தனிநபர்கள், சமுதாயக் குழுக்கள் போன்றோருக்கு வாழ்நாள் முழுவதும் கல்வியைத் தொடர்ந்து பெறும் வாய்ப்பை வழங்குவதுடன் கல்வி, கலாசாரம், தகவல் பெறுகை போன்றவற்றைப்பெறவும் பேணிப் பாதுகாக்கவும் பொதுநூலகங்கள் பிரதேசமட்டத்தில் செயற்படுகின்றன. பிரதேசத்தின் மக்களின் தேவைகளுக்கும் தரத்திற்கும் பொருத்தப்பாடான நோக்கங்களும், சேவைகளும் அங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு பிரதேசத்தில் பொது நூலகத்தின் இருப்பும், அதன் நீடித்த வளர்ச்சியும் மக்களின் தேவைகளை அது பூர்த்தி செய்யக்கூடியதாகக் காலத்துடன் ஒட்டித் தயார்ப்படுத்தலுக்குட்பட்டாலேயே சாத்தியமாகும்.

பொதுநூலகங்களில் உண்மையான வளர்ச்சி வரியிறுப்பாளர் களுமாகிய வாசகர்களுக்கு உரிய சேவைகளையும் வளங்களையும் தடையின்றி வழங்குவதிலேயே தங்கியுள்ளது என்பது நூலகவியலாளர் களின் கருத்தாகும். மறுபுறத்தில் போதியளவு நிதி ஒதுக்கீடு இன்மையால் எந்தவொரு நூலகத்தாலும் ஒரு குறிப்பிட்ட அறிவு வளங்களையே பெற்றுக்கொள்ள முடிகின்றது. எனவே நவீன பொதுநூலகங்களின் செயற்பாடுகள் அவர்களிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அறிவு வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெறுவதற்குரிய தந்திரோபாயங்களை கடைப்பிடிப்பதாக அமைகின்றன.

ஒரு பிரதேசத்தில் மக்கள், நூலகமானது தமது சொத்து என்ற எண்ணத்தை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறான எண்ணம் அவர்களுக்கு ஏற்பட வேண்டுமாயின் நூலகம் சார்ந்த செயற்பாடுகளிலும் கொள்கை வகுப்பதிலும் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடுதலிலும் அவர்கள் பங்கு கொள்வதன் மூலமே சாத்தியமாகும்.



பொதுநூலகம் என்ற காரணத்தினால் மட்டுமே பொதுமக்களுக்கானது என்ற கருத்து நிலைபெறமாட்டாது. நூலகத்தின் சேவைகளினூடாகவும் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் பிரதேச பொதுமக்களையும் தொடர்புபடுத்திக்கொள்வதினூடாகவும் நூலகப் பாவனையாளர்களின் உணர்வுகளை வென்றெடுக்க முடியும்.

உலகம் மதிக்கும் எத்தனையோ பெரியார்கள் நூலகத்தின் மூலமாக தாம் பெற்ற அறிவுகளையும் அனுபவங்களையும் பல வழிகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்கள். வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே வளர்த்தெடுப்பதில் பொதுநூலகங்களின் பங்கும் பணியும் உலகெங்கும் வியந்து போற்றப்படுவதாகும். பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்விச்செயற்பாடுகளுக்கு உதவுதல், முறைசாராக் கல்விச் செயற்பாடு களுக்கு உதவுதல், சுவையான பொழுதுபோக்குத் தேவைகளுக்கு உதவுதல் போன்ற மரபுரீதியான செயற்பாடுகளுடன், நூலக சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டால் நூலகம் பின்தங்கிவிடுவதுடன் அமையாது, அப்பிரதேசத்தின் மேம்பாடுகளும் பின்தங்கிவிடும்.

நவீன உலகில் "அறிவு முகாமைத்துவம்" என்ற எண்ணக்கரு மிகப் பிரபல்யமடைந்துவரும் ஒரு விடயத்துறையாக இனங் காணப்பட்டுள்ளது. தற்காலத்தில் நம்பகமான தகவல் சேகரிப்பு என்பது அவசியமானதாகவும் பெறுமதிபூர்வமானதாகவும் உருவாகி வருகின்றது. பல்வேறு தரப்பட்டோருக்கும் தகவல் மற்றும் அறிவுக்கான தேவை அதிகரித்து வருகின்றது. தற்கால பொருளாதார முறைமையானது அறிவினை, தகவல்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் ஆக விருத்தி பெற்றுள்ளது. மறைந்துபோயுள்ள அறிவுகளை மட்டுமல்லாது பிரசித்தமாகவுள்ள அறிவுகளையும் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, களஞ்சியப்படுத்தி, பயன்படுத்துவதற்கான ஆளுமைகளை நூலகங்கள் கொண்டிருக்கவேண்டிய கட்டாயத் தேவை உருவாகிவிட்டது.

நவீன உலகில் தகவலையும் ஒரு சக்திவளமாக கருது கின்றார்கள். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூக வளர்ச்சியை எய்தவும் தகவல் பரிமாற்றத்துக்கான வாய்ப்புகள் பலவாக கண்டறியப்பட்டுள்ளன. தகவல் வழங்கும் நிலையங்களாக பொது நூலகங்கள் தம்மை ஒழுங்கமைக்கத் தொடங்கிப் பலகாலங்களாகி விட்டன. தகவல்களையும் அறிவுகளையும் நாடி வருபவர்களுக்கு அவற்றை வழங்கவல்ல தயார்ப்படுத்தலுக்குட்படாவிடின், நூலகங்கள் அவற்றின் தன்மையை இழக்க வேண்டி ஏற்படுகின்றது. தற்காலத்தில்

தகவல்களைப்பெற பலதரப்பட்ட மாற்று வழிமுறைகள், வசதிகள், போட்டி நிறுவனங்கள் என்பன சமூகத்தில் காணப்படுகின்றன.

கணினி, இணையம், இலத்திரனியல் சாதனங்களின் கண்டுபிடிப்புகள் சாதாரண குக்கிராமங்களுக்கும் வருகைதந்து விட்டிருப்பதுடன் அவற்றைப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களும் இலகுபடுத்தப்பட்டு பரவலாக்கப்பட்டு வருகின்றன.

எனவே தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் அறிவு முகாமைத்துவ செயற்பாடுகளின்போது தகவல்களின் சார்புத்தன்மை, காலப்பொருத்தப்பாடு என்பவையும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் தகவல் தொழில்நுட்ப (Knowledge innovation) அறிவை எய்திய நூலக ஆளணியினரின் தேவையும் கவனிக்கப்படல் வேண்டும். நாளுக்குநாள் மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப ஆளணியினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

பொதுநூலகங்களின் எல்லைக்குட்பட்ட மக்களின் சனத்தொகை அவர்களின் தேவைகள் என்பவற்றைப் பூர்த்திசெய்யும் விதமாக தகவல் மற்றும் அறிவு சாதனங்களின் தொகை, அதற்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட உள்ளூராட்சிக்கு பொறுப்பான நிறுவனங்கள் வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

பொதுநூலகங்களின் சேவையானது வருகைதரும் வாசகர்களின் தேவைகளைக் கவனிப்பதுடன் நின்றுவிடாது நூலகத்துக்கு வருகைதர முடியாத இயலாமையுடையோர், தொழில் ரீதியாகக் கட்டுப்பட்டோர், போன்றோருக்காகவும் நான்கு சுவர்களைத் தாண்டி, நகர்ந்து சேவையாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

ஒரு பிரதேச நூலகத்தின் வெற்றி என்பது வாசகர்கள் - நூலகம் இவற்றுக்கிடையிலான நல்லுறவில் தங்கியுள்ளது. தனது சேவைகளால் வாசகனைத் திருப்தி செய்கின்ற நிலை ஒரு நூலகத்துக்குக் காணப்படுமாயின், அந்த திருப்தியடைந்த வாசகனே அந்நூலகத்தின் பிரதான பிரசாரகனாக அமைவான்.

*உசாத்துணை:* 1. "Guide Lines to Public Libraries in 21 Century"
*61வது* IFLA Conference, *ஜெருசலேம், 2000.*
2. பொது நூலகங்கள் தொடர்பான யுனஸ்கோ கொள்கை விளக்கம். ■



# பயிலரங்கு

**பா**ட்டிமார் கதை சொன்ன காலம் போய்விட்டது. பாட்டன்மார் சொல்லிய பழமரபுகளும் போய்விட்டன. பாவம் பேரன் பேத்திமார் நிலாச்சோறோடு கதைகளும் கவிதைகளும் சேர உண்ட தங்கள் தாய்மாரும் தந்தையரும் கொடுத்து வைத்தவர்களென ஏங்குகிற காலமாச்சு.

பாட்டி கதை கேட்கும் காலம் போனாலும் வாசிக்கும் மரபு வளம் பேணினோமா? கட்டுக்கட்டாகப் புத்தகங்கள் சுமக்கிறோம். இனிப்பான சுவையா அவை? இல்லை அத்தனையும் கசப்புகள் புசிப்பதற்கு ஏற்றவை அவையென்று எவ்வளவு புழுகினாலும் இனிப்புக்கள் தான் வாழும் திணிப்புகள் இயல்பான வளர்ச்சியைக் கொல்லும் பிள்ளை களின் இயலறிவைத் தின்னும்.

தயவு செய்து பிள்ளைகளின் தொண்டைக்குழியைக் காப்பாற்றுங்கள் அவர்களுக்கு இனிப்பது எதுவென்பதை அவர்களே அறிவர். வழி நடத்துவது தேவைதான் அதற்காக கால் விலங்குகள் போட்டுவிட்டா நடவென்று சொல்வது பிள்ளைகளின் தன்னறிவு வளர வழிவிடுவோம் நல்லவற்றை வாசிக்கக் கொடுப்போம் பள்ளிக் கூடங்கள் தோறும் நூலகம் எதற்கு? புதிய அதிபர் இடமாற்றம் பெற்று வரும் போதில் புத்தகங்களை கசங்காமல் கையளிப் பதற்கா? அறிவுடைய பிள்ளைகளை அனைத்துக்கலை வல்லவராய் எதிர் காலத்திற்கு கையளிக்கும் செயற்பாடுகள் வேண்டும். நூலகத்தை மாணவர்க்கு திறந்து வைப்போம் நுண்ணறிவு, கலைகளும் பயிலரங்குகள் செய்வோம். ■

# வாசிப்புப் பண்பாடும் பண்பட்ட வாசிப்பும்

**வா**சிப்புப் பண்பாடு என்றொன்று இருக்கிறது. பண்பட்ட வாசிப்பு என்பது இன்னொன்று. வாசிப்புப் பண்பாடு என்பது நாளிதழ்கள். பருவகால இதழ்கள் எனத் தொடர்ந்து நூல்களை வாசித்தலின் விட்டு விடாத தொடர்ச்சி. பண்பட்ட வாசிப்பு என்பது தேர்ந்த வாசிப்பு. பல்துறை சார்ந்த வாசிப்புகளின் பயன்பேறால் பரந்த சிந்தனைத் தளத்துக்கு படிக்கட்டுகள் அமைப்பது.

பண்பட்ட வாசிப்பிற்கு துறை வேறுபாடுகள் இல்லை. கவிதை பிடிக்கும். சிறுகதை பிடிக்காது என்று இலக்கிய வகைமைகளுள் பேதம் இல்லை. எல்லாவற்றிலும் பயன் நுகர்வது இனிய ரசனை உடையது. வாசகநிலை அநுபவத்தில் அதிர்வுகளை உணர்வது. அவை தரும் பரவசங்களை தன்னனுபவப் பட்டறையில் தராசிட்டு மதிப்பிடுவது . கவிதைகளுக்குள்ளிருக்கும் சிறுகதையை அது அடையாளம் காணும். சிறுகதையுள் இருக்கும் கவிதானுபவத்தைக் கறந்தெடுக்கும் ஒன்றனுக்கொன்று ஊடு பாய நின்ற கலையழகை அநுபவிக்கும் கலை. அறிவியல் என்ற மேலெழுந்தவாரியான பகுப்பு முறையை மனதிலே கொள்ளாது. கலையானது அறிவியலின் பார்வைக் கூர்மையோடு அமைய வேண்டியதையும். அறிவியலானது கலாபூர்வமான தெளிவோடு கையாளப்படுவதையும் கவனத்தில் எடுக்கும். வாசகநிலை பரவச அனுபவம் எய்துதல் என்பதையும் தாண்டி வாழ்வியலின் தரிசனமாக மாறுவதற்குரிய எழுத்துக்களை நேசிக்கும்: தேடிவாசிக்கும்: தேர்ந்து சிந்தித்து தெளியும். கலையும் அறிவும் இணையும் மெய்த்தளத்தைக் கண்டுபிடிக்கும்.

கண்டுபிடிப்புச் செய்தல் என்பது தன்னைக் கண்டடைதல், தான் சார்ந்த சமூக நிலையின் யதார்த்தத்தைக் கண்டடைதல். கண்டடைந்தவற்றை. சமூகங்களிடம் பரிமாறுகின்ற சற்பாத்திரமாக தன்னை மாற்றுதல் என்ற செயற்பாடுகள் வாசகநிலை எய்த வேண்டிய வளர்நிலைகள். இந்த வளர்ச்சிக்கு உகந்த வாய்க்கால்களாக வாசக வட்டங்களை அமைத்து. பரந்த வாசிப்புத் தளத்தை உருவாக்குதல் பண்பட்ட வாசகர்களின் மாறாத கடமைகளாகும். தமது சமூகத்தின் வாழ்வியலை தன் விடுதலை எய்தும் பரிமாணத்திற்கு உயர்த்துதல் பண்பட்ட வாசக மனங்கள் நிகழ்த்த வேண்டிய நெடிய பயணமாகும். நிகழ்த்துவோமாக. ■

# ஐந்தாவது அகவையில் HNB சுன்னாகம்

மகேசன் தயாகரன்,
விவசாய அலுவலர். ஹற்றன் நஷனல் வங்கி.
சுன்னாகம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறப்பான வர்த்தக மையங்களுள் ஒன்று எனக் கற்றறிந்த பெரியோர்களால் விதந்துரைக்கப்படும் சுன்னாகம் நகரம், போர் அனர்த்தங்களாலும் அதன் விளைவான புலப்பெயர்வுகளாலும் 90களின் பிற்கூற்றில் பொழிவிழந்த நிலையிலிருந்தது.

எனினும், சமாதான காலத்தில் நிகழ்ந்த சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் விளைவாக இலங்கைத் தீவில் 120 ஆண்டுகள் மக்கள் சேவையாற்றி தலைநகரில் நெடிதுயர்ந்து நிற்கும் ஹற்றன் நஷனல் வங்கி தனது 117வது கிளையாக எமது சுன்னாகம் கிளையை 11.07.2003 இல் ஆரம்பித்து வைத்தது. நீண்ட வரலாற்றுப் பின்னணியும் சரித்திரப் பிரசித்தியும் பெற்ற சுன்னாகத்தில் கால்பதித்த முதற் தனியார் வங்கி என்கின்ற மகுடத்தையும் சூடிக் கொண்டது.

அன்றிலிருந்து இன்று வரை ***"உங்கள் முன்னேற்றத்தின் பங்காளிகள்"*** என்கின்ற வங்கியின் தாரக மந்திரத்தின் வழிநின்று வருகின்றது.

## முன்னேற்றத்தின் பங்காளியாக HNB சுன்னாகம்

யாழ்ப்பாணத்தின் செயற்பட்டு வரும் வங்கிகள் எமது மக்களின் சேமிப்புக்களை எம் பிரதேச விருத்திக்காகப் பயன்படுத்தாது வேறு பிரதேசங்களிற்கு ஆற்றுப்படுத்துகின்றன என்கின்ற பொதுவான குற்றச்சாட்டை வலிதற்றதாக்கும் வகையில் இக் கிளை பல்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளிற்கு அதிகளவிலான கடன்களை வழங்கி,



மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளிற்குக் கைகொடுத்து உதவியிருக்கிறது.

இக் கிளையின் துறை வாரியான பொருளாதாரப் பங்களிப்பைப் பின்வரும் நான்கு பருமட்டான வகுதிகளின் கீழ் நோக்கலாம்.

1. **வர்த்தகமும் வர்த்தகம் சார்ந்த சேவைத் துறைகளும்**
   போர்க் காலத்தில் மட்டுப்படுத்தப் பட்டிருந்த பல்வேறு வகையான பொருட்களின் வர்த்தகம் சமாதான காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. இதற்குத் தேவையான நடைமுறை மூலதனத்தைப் பல்வேறு வகையான வர்த்தகக் கடன்களினூடாக HNB வழங்கியது.
   எமது பிரதேசம் போர் மேகங்களால் மூடப்பட்டிருந்த போது உலகின் பிற பாகங்களில் நிகழ்ந்த தொழில் நுட்பப் புரட்சிகளின் விளைவாக உருவாகிய நவீன தொழில் நுட்பம் சார்ந்த சேவைத் துறைகளை இப் பிரதேசத்திற்கு அறிமுகப்படுத்திய முயற்சியாளர்களிற்கும் பாரிய கடன் வசதிகளை இவ் வங்கி ஏற்படுத்திக் கொடுத்தது.
2. **உட்கட்டுமான அபிவிருத்தி முயற்சிகள்**
   உள்நாட்டுப் போரின் தாக்கத்தால் இரு தசாப்தங்கள் பின் நிற்கும் எமது பிரதேச உட்கட்டுமான அபிவிருத்தியை விரைவான முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் வகையில் தனியார் துறையினரால் மேற் கொள்ளப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளிற்குக் கணிசமான நிதியீட்டத்தை இக்கிளை வழங்கியுள்ளது. இந்நிதியீட்டத்தினால் உட்கட்டுமான உடைமையாளர்களும், ஒப்பந்தகாரர்களும், நிர்மாணத்துறைப் பணியாளர்களும் நன்மையடைந்தனர்.
3. **கிராமிய உற்பத்தித் துறை**
   இன்றைய போட்டி மிக்க வர்த்தக உலகில் வங்கிகள் பணம் படைத்தவர்களையே நாடும், அவர்களையே உயர்த்தும் என்ற பொதுவான நம்பிக்கையைப் பொய்யாக்கி, தனியான அபிவிருத்திக் கடன் அலகு (Development Banking Division) ஒன்றினை உருவாக்கிக் கிளைகள் தோறும் கிராமியக் கடன்

அலகுகளின் ஊடாக சமூகத்தின் அடித்தளம் வரை சென்று இவ் வங்கி நிதிச்சேவைகளை வழங்கி வருகின்றமை சிறப்பாகக் குறிப்பிடப் பட வேண்டியதாகும். உலக மயமாதற் செயன்முறையில், மறக்கப்பட்டு வரும் கிராமியப் பொருண்மியத் துறைக்கு அத் துறையில் காணப்படும் உள்ளார்ந்த இடர்களைப் (Inherent Risks) புறமொதுக்கியே இவ்வங்கி இத்துறைக்கான நிதியீட்டத்தை வழங்குகின்றது. விவசாய சம்மேளனங்களின் ஊடாக பயிர்ச் செய்கைக் கடன், அபிவிருத்தித் தேவைகட்கான கடன், சுயதொழில் முயற்சிக்கடன் திட்டம் (கமிபுபுதுவ – உலக வங்கியினால் வித்துரைக்கப்பட்ட HNBயின் 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள கிராமியக் கொடுகடன் திட்டம்), சுனாமிக்குப் பின்னான ஜேர்மன் சேமிப்பு வங்கியின் அனுசரணையுடனான கடன் திட்டம், சிறிய நடுத்தர முயற்சியாண்மைக் கடன் திட்டம் என வெவ்வேறு தேவைகளிற்கேற்ப பல்வேறு கடன் திட்டங்களின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்துறைக்கான நிதியீட்டம் வழங்கப்பட்டு வருகின்றது.
இதன் விளைவாக இக் கிளையின் பெயர் வலிகிழக்கு, வலிதெற்கு, வலிவடக்கு, வலிமேற்கு, வலிதென்மேற்கு பகுதிக் கிராமிய மக்களால் உச்சரிக்கப்படுகின்ற, மதிக்கப்படுகின்ற நாமமாக மலர்ந்து வருகின்றது.
எல்லாவற்றுக்கும் மேலாக இக்கடன் அலகின் ஊடாக உருவாக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டக் குழுக்களின் செயற்பாடும், வெற்றிகரமான கடன் மீளளிப்பும், பிரமிப்பூட்டும் சேமிப்புத் தொகையும், கிராமிய அபிவிருத்தித் துறையில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் மெச்சும் வகையில் அமைந்துள்ளன.

4. நுகர்வுத் துறை
எண்ணற்ற தேவைகளையும், பல்வேறு எதிர்பார்ப்புகளையும் தமது மாதாந்த வேதனத்தின் மூலம் அடைய முடியாது ஆதங்கத்தோடு வாழ்கின்ற நடுத்தர வர்க்கத்தினரிற்கு HNB யின் தனிநபர் கடன் திட்டம் ஓர் வரப்பிரசாதமாகும்.



ஆசிரியர்கள், தனியார் நிறுவன அதிகாரிகள், அரச அலுவலர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனப் பணியாளர்கள் என இத்திட்டத்தின் விளைவாகப் பல நூறு பேர் பயனடைந்துள்ளனர். ஷாந்தி வீடமைப்புக் கடன் திட்டம், வருமானம் குறைந்தோரிற்கான உலக வங்கியின் அனுசரணையுடனான வீடமைப்புக் கடன்திட்டம் என்பவற்றினூடாக எமது பிராந்தியத்தில் பல இல்லங்கள் அழகுற உதயமாக HNB யின் சுன்னாகக் கிளை காரணமாக அமைந்துள்ளது.

## மானிப்பாய் விரிவாக்கல் அலகு

இவ்வாறாகச் சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களினதும் நிதித் தேவைகளை முன்னிறுத்தி நற்பணியாற்றி வளர்ந்து வரும் இக் கிளையின் பாதையில் 2005 மார்கழியில் ஆரம்பிக்கப்பட்ட மானிப்பாய் விரிவாக்கல் கிளை மற்றுமொரு மைல் கல்லாக அமைந்து, வலிமேற்கு, வலிதென்மேற்குப் பகுதி மக்களின் நம்பகமான நிதி நிலையமாக இவ்வலகு பரிணமித்து வருகின்றது.

## சனிக்கிழமைகளில் வங்கிச் சேவை

கடந்த 2006 ஆவணி 11ம் திகதியின் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை அனைத்து துறைகளையும் போலவே வங்கியின் மீதும் பெரும் சவால்களை அள்ளி வீசியுள்ளது. எனினும் மட்டுப் படுத்தப் பட்டுள்ள வங்கிச் சேவை நேரத்தை ஈடு செய்யும் முகமாக இப்போது சனிக்கிழமை வங்கிச் சேவையினையும் இவ் வங்கி வழங்கி வருகின்றது.

கடந்து வந்த ஐந்தாண்டு காலத்தில் வங்கியின் வளர்ச்சியில் பக்கத்துணையாக நின்ற வாடிக்கையாளர்களை நன்றியோடு நினைக்கின்ற அதேவேளை தொடர்ந்தும் எல்லாம் வல்ல இறைவனின் அருளாசியுடன் மலையே வரினும் தலையே சுமவெனும் உறுதியுடன் தன் பணி தொடர்கிறது ஹற்றன் நஷனல் வங்கி. ■

# பன்னுதமிழ் சொன்னமன்னாகத்தான் சுன்னாகப் பண்டிதன் முருகேசன்

ஈழத்து தமிழிலக்கிய செல்நெறியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க தனித்துவமான காலப்பகுதி ஆகும். இருபதாம் நூற்றாண்டு நவீன இலக்கியத்துக்குக் கால் கோளிட்ட காலப்பகுதியாக பத்தொன்பதாம் நூற்றாண்டு கருதப்பட்டாலும் மரபு வழித் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்துக் கூடாக ஏராளமான செவ்விய தமிழ்நூல்கள் தோன்றுவதற்கும் வழிசமைத்த காலப்பகுதியாகவும் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்குகிறது. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சைமன் காசிச்செட்டி. உவைமன் கதிரவேற்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்பு புலவர், அ.முத்துத்தம்பிப்பிள்ளை, சித்திலெப்பை, பொன்னம்பலப்பிள்ளை, ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை, கறல்விசுவநாதப்பிள்ளை, பதுறுத்தீன் என கல்வி வல்லாளர்கள் பலர் தோன்றி தமிழ் வளர்த்த இக்காலப் பகுதியில் சைவசித்தாந்த மெய்ஞானமும். தனித்துவமான புலமைத்திறனும் கைவல்லியம் பெற்ற தமிழறிஞராக சுன்னாகம் முருகேச பண்டிதர் விளங்கினார்.

"தோமறு தமிழ்ச் சொன்மாரி தொலைவின்றிப் பொழியு மேகம்" என வைத்தியநாத தேசிகரால் சிறப்பிக்கப்பட்டவரும், "மங்காத கீர்த்தி முருகேச பண்டித மாமணியே'' என அ.குமாரசுவாமிப்புலவரால் விதந்துரைக்கப் பட்டவரும் "பாவிற் சிறந்த முருகேச பண்டித பாஸ்கரனே'' என ஊரெழு சு.சரவணமுத்துப் பிள்ளையால் போற்றப்பட்டவரும், "பாவலர்க்கணி போற்றிசைக்கும் முருகேசபண்டிதன் பாவணரேறே'' என அ.சபாபதிச் செட்டியாரால் வாழ்த்தி உரைக்கப்பட்டவருமான முருகேசபண்டிதர் யாழ்ப்பாணத்ததுச் சுன்னாகத்தில் சைவவேளாண் குடி மரபில் வந்துதித்த பூகப்பிள்ளை என்பவருக்கும் அவர் மனைவி உமைநாச்சி அம்மையாருக்கும் 1829 ஆம் ஆண்டு அருந்தவப் புதல்வராக அவதரித்தார். முருகேச பண்டிதருடன் உடன் பிறந்தார் சுப்பிரமணியர், கதிர்காமர், நன்னியம்மை என்னும் மூவராவார்.

தாய் தந்தை புலமைத்துவ மரபு வழி இவரை இயல்பாகவே தமிழ்க்கல்வியில் அதிபுலமைத்துவமுடையவராக்கியது. உடுப்பிட்டி சிவசம்பு புலவரிடம் பெற்ற தமிழறிவும் சிவசங்கரப்பண்டிதரிடம் கற்ற சித்தாந்த தருக்கமும் இவரைத் தமிழும் சமயமும் கைவரப்பெற்ற விற்பனராக்கியது. பாரதம், இராமாயணம் கந்தபுராணம், சேது புராணம், முதலிய இலக்கியங்களிலும்,

சி. ரமேஷ்



தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை அகப்பொருள் முதலிய இலக்கணங்களிலும் தேர்ச்சியுடையவராக விளங்கினார். பண்டிதர் பஞ்சஇலக்கணவல்லாளர் என்பதை கணேசையரின் கட்டளைக்கலித்துறை

**"எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்**
**பழுத்துள நாவினன் பாக்கனொர் நான்கொடு பாவினங்கள்**
**வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்**
**தொழுத்தகு விற்பனன் சென்று பரகதி துன்னினனே"**

என எடுத்துரைக்கிறது. இலக்கணத்தில் பாண்டித்திய முடையவர் என்பதாலும், இலக்கண வழுக்களற்ற வசனநடையைக் கையாளும் வழக்குடையவர் என்பதாலும் இவரை இலக்கணக் கொட்டர் என்றும் அழைத்தனர்.

பண்டிதர் தமக்கு கல்வி அறிவை நல்கிய சிவசங்கர பண்டிதரிடமும் சிவசம்பு புலவரிடத்தும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தார் என்பதை இவர் பாடிய 'குடந்தை வெண்பா' 'நீதிநூறு' ஆகிய நூல்களில் இடம்பெறும் 'ஆசிரிய வணக்கம்' என்னும் பகுதியினூடாக அறியலாம். "ஆகம வேதமனைத்தையும் அளித்த ஏகனே'' என சங்கரபண்டிதரை போற்றுமிவர் "என்னை அறிவால் வளர்த்த தாயென்றும்'' இவரைக் குறிப்படுவார். இதேபோல் "தன் அக இருளை நீக்கிய ஆயிரங்கதிரோன்'' என சிவசம்பு புலவரை சிறப்பித்துக் கூறும் பண்டிதர் "இவரே தன்னை கலை தெருட்டி மெய்யிலெனை வைத்தார்'' எனவும் கூறுகிறார்.

தான் கற்றுணர்ந்த தமிழறிவை பண்டிதர் சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், கோப்பாய் தெற்கு, சிறுப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், கல்வளை ஆகிய இடங்களிலுள்ள மாணவர்களுக்கும் வழங்கினார் என்பதை சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவரின் தரவுகொச்சகம்

**சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்**
**மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்**
**துன்னியகல் வளைமுதலாம் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்**
**பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே**

எனக் குறிப்படுகின்றது. கோப்பாய் அம்பலவாணத்துரையவர்களால் தொடங்கப் பெற்ற வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமை யாற்றியதைப்போல், ஏழாலையில் சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களால் தொடங்கப்பெற்ற தமிழ் வித்தியாசாலையிலும் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். திறமையான புலமை உள்ளவர்களை அறிந்து அவர்களின் புலமை மக்களைச் சென்றடையும் வண்ணம் ஆற்றுப்படுத்துவதில் வல்லவரான நாவலரின் பணிப்புக்கமைய முருகேசபண்டிதர் இந்தியாவிலுள்ள

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரியராகக் கடமை யாற்றினார். இது மட்டுமின்றி தமிழ் நாட்டிலே காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், திருப்பற்றூர் முதலிய இடங்களிலும் மதிக்கத்தக்க தமிழாசிரியராகப் பணியாற்றினார். கும்பகோணம் டவுண் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராய் விளங்கிய "முருகேச பண்டிதரிடம் சரவணமுத்துப்பிள்ளை கல்வி கற்ற காலத்திலேயே உடன் மாணாக்கராகச் சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவரும் ஆ.முத்துதம்பிப்பிள்ளையும் பாடங்கேட்டனர்" என்பார் க.கைலாசபதி. இவர்களே *1898* இல் யாழ்ப்பாணத்திலே தாபிக்கப்பெற்ற தமிழ்ச்சங்கத்து வித்துவ உறுப்பினர்கள் ஐவருள் மூவராவார்.

நாவலர் அவர்கள் தேகவியோகமடைந்த வேளையில் அவரை நோக்கி பண்டிதர் அவர்கள் பாடிய கையறுநிலைப்பாக்கள் கேட்போர் மனத்தை உருக்கும் வண்ணம் நீர்மையவாய் மிளிர்கின்றன. இலங்கை நேசன் பத்திரிகையில் *1880* ஆம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்த இப்பாக்கள் வெண்பா, கட்டளைக்கலித்துறை, நிந்தாஸ்துதி, விருத்தம் ஆகிய பாவகைகளால் பாடப்பட்டதாகக் காணப்படுகின்றன.

"இறைவனை இறைவனாக யாழ்ப்பாணத்தவர் கண்டது நாவலரின் செந்தமிழ் நூல்களை அறிந்து தான். அச்செந்நாவலனின் புகழ் எவ்விடமும் நிலைபெற்று நிற்கிறது. அப்புகழின் முன்னால் இனி எவ்வினியாரும் நிலைத்து நிலை பெறமுடியாது. யாருமுணராப் பொருளை தேறுமுகம் கொண்டு தெளிந்த ஆறுமுகம், அன்புகொண்டு ஏறுமுகமாய் எம்மை ஏற்றுக் கொண்டான். ஆறுமுகம் என்றிருந்த ஓர் முகமும் எங்களுக்கு தோன்றாமல் இன்று சென்று ஒளிந்தனவே" எனப் புலவர் நெஞ்சுருகிப் பாடும் வெண்பாக்கள் உள்ளத்தை வருத்தி கலங்கச் செய்கின்றன.

இக்காலப்பகுதியில் கத்தோலிக்கர்கள் தம் சமயத்தைப் பரப்பும் பொருட்டு பாடசாலைகளை நிறுவி, உத்தியோகச் சலுகைகளை வழங்கியதுடன் நில்லாது, பிற சமயங்களுக்கெதிராகத் துண்டுப் பிரசுரங்களையும். பத்திரிகைகளையும் சமய நூல்களையும் வெளியிட்டுச் சமயப்பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்தனர். இவ்வகையில் *1878* இல் கத்தோலிக்க மதப்பிரச்சாரத்துக்காக இந்தியாவிலிருந்து இலங்கை வந்த கத்தோலிக்க வித்துவான் அருளப்ப முதலியார் சைவ சமயத்தவர்களை மத மாற்றம் செய்யும் பொருட்டும் நாவலரையும் பிறரையும் வெல்லக்கருதியும் தம் பத்திரிகையில் சைவ விரோதக் கருத்துக்கள் பிறவுமாகப் பல விடயங்களை எழுதினார். அத்துடன் சைவசமயத்தை நிந்தித்து கண்டனப் பிரசுரங்கள் பலவற்றையும் வெளியிட்டார். சஞ்சிகைகளிலே வாதவிஜயமாகப் பல கடிதங்களையும் வரைந்தார். முருகேசபண்டிதர் அவர்கள் இவற்றுக்கெதிரான கண்டனங்களை பத்திரிகைகளில் வெளியிட்டதுடன் நில்லாது அருளப்ப முதலியார் இயற்றிய நூல்களில் ஒன்றான "அலங்கார பஞ்சகத்திலுள்ள"



இலக்கண வழுக்களைத் திரட்டி 'அலங்காரப் பஞ்சக சண்ட மாருதம் என்னும் கண்டனப் பத்திரத்தையும் எழுதினார். இந்நூல் இவரது இலக்கண வித்தகத்துக்கு தக்க சான்றாக அமைவதை குமாரசுவாமிப்புலவர் தன் தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் விரிவாக எடுத்துரைப்பார்.

(தொடர்ச்சி மறு இதழில்)

## வலிகாமம் தெற்கு பிரதேச சனசமூக நிலைய, கழக நூலகங்களின் விபரம்

### 01. காந்தி கலை வளர்ச்சி மன்றம் சனசமூக நிலையம்

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு கொக்குவில் மன்றத்துடன் இணைந்த நிலையில் 2000ம் ஆண்டு முதல் 100க்கு மேலாக தொகை நூல்களும், தினசரிகள் கொண்ட வாசிப்பு பகுதியையும் கொண்டுள்ளது.

### 02. ஞானப்பிரகாசர் நூலகம், ஞானப்பிரகாச சனசமூக நிலையம் மல்வத்தை உடுவில்

சனசமூக நிலைய கட்டடத்தில் 500க்கு மேலான தொகை நூல்களுடன் 2004 முதல் சேவையாற்றுகின்றது.

### 03. கணேச சனசமூக நிலையம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்

பலாலி வீதியில் ஆயாக்கடவைப் பிள்ளையார் கோவில் தெற்கு வீதிக்கருகாமையில் அமைந்துள்ள நூலகம் 1946ம் ஆண்டு முதல் இயங்குகின்றது.

### 04. ஜனசக்தி நூல்நிலையம், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

1989முதல் ஆரம்பமானது. தனியான கட்டட அமைப்பும், 500 நூல்களையும், செல்வி. பிரியா தர்மலிங்கம் எனும் நூலக உதவியாளரையும் கொண்டு விளங்குகின்றது. ஏணி, தேனீக்கள், எனும் கையெழுத்து சஞ்சிகைகளையும் வெளியிருக்கின்றது. நூலக அங்கத்தவர்களை பதிவு முறையில் ஏற்று சேவை வழங்குகின்றது.

### 05. ஐயனார் சனசமூகநிலையம், ஐயனார் கோவிலடி சுன்னாகம்.

தனியான கட்டடமும், 150க்கு மேலான புத்தக சேர்க்கையும் கொண்டு திரு. க. மணிவண்ணன் என்பவரது மேற்பார்வையில் சேவையாற்றுகின்றது. சமூகதீபம் எனும் கையெழுத்து சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

# வில்லியம் ஷேக்ஸ்பியரின் ஆற்றலும் வாழ்வும்

விழிசிட்டி
கா. சுப்பிரமணியம்

உலகின் இதுவரை காலமும் இவ்வளவு சிறப்புடைய ஓர் ஆங்கில நாடகாசிரியனை, கவிஞனை, எழுத்தாளனை, எவரும் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை; அறிந்ததும் இல்லை என்று துணிந்துகூறுமளவிற்கு பெருமை பெற்றவர் வில்லியம் ஷேக்ஸ்பியர். ஆங்கில மொழியில் மட்டுமன்றி உலகின் எந்தமொழியிலும் இப்படியான வாண்மையுடைய மேதையைக் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை; அறிந்ததும் இல்லை எனலாம்.



எந்தவொரு நாடகாசிரியரியனதோ, எழுத்தாளனதோ, அறிஞனதோ ஆக்கங்கள், இந்த அளவுக்கு ஏறத்தாழ நான்கு நூற்றாண்டு காலமாக உலகம் முழுவதிலும், பல மொழிகளிலும், பல நாடுகளிலும், கலாச்சாரங்களிலும், கற்பிக்கப்பட்டு; கற்கப்பட்டு; மேடையேற்றப்பட்டு; ஒரு முறையல்ல, பலமுறை அரங்கேற்றி இன்றும் நல் இளமையுடன் மெருகு குன்றாது உயிர்ப்புடன் உலாவி வருவதைக் காண முடியாது.

இப்படியான மனோவசியம், கவர்ச்சி, மனதைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் இவரது ஆக்கங்களுக்கு எப்படி வந்தது? அறிஞர்களின் கூற்றுப்படி அடிப்படை மனித இயல்புக்களை இனங்கண்டு அவைகளைத் தனது கதாப்பாத்திரங்களின் மூலம் செவ்வனே வெளிச்சப்படுத்தும் ஷேக்ஸ்பியரின் தனியாற்றலே காரணம் ஆகும். இவர் ஏனைய கலைஞர்கள், மனிதனைப் புரிந்துகொண்டதை விட மிக நுட்பமாக, மிகச்சரியாக, மிகத் துல்லியமாக, அச்சொட்டாகப் புரிந்து கொண்டார். புரிந்து கொண்டது மட்டுமின்றி அவ்வியல்புகள் வெளிப்படும் கதாப்பாத்திரங்களைப் படைத்து உலகின் முன் உலாவவிட்டார். பல இரசிகர்கள் தங்களையே அவரது கதாப்பாத்திரத்தில் கண்டார்கள். இக் கதாப்பாத்திரங்களோ, காலதேச வர்த்தமானங்களைக் கடந்து எக்காலத்துக்கும், எத்தேசத்துக்கும், எச்சமூகத்துக்கும், எவ்வினத்துக்கும் என்னென்றும் புத்தம் புதிதாக மிளிருமாறு படைக்கப்பட்டார்கள். இவரது நாடகங்களில் சகல கதாப் பாத்திரங்களுமே உயிருள்ளவை; உயிர்த் துடிப்புள்ளவை. அந்தக் காட்சிகளுக்குக் பொருத்தமானவையன்றி மிகவும் இன்றிய



மையாதவையுங்கூட. எந்த வொரு பாத்திரமும் பொருள் பொதிந்த, திரு நிறைந்த, கனகச்சிதமான பாத்திரமாகத் தோன்றும்படி அமைந்திருப்பதே தனிச் சிறப்பு. இவரது பாத்திரங்களில் மாமன்னர்கள் வருகிறார்கள்; மதிமந்திரிகள் வருகிறார்கள்; மாபெரும் சேனாதிபதிகள் வருகிறார்கள், வீரம் செறிந்த மாவீரர்கள், தியாகம் செய்யும் செம்மல்கள், கற்பாஸ்திரிகள், கணிகையர், கொலைகாரர்கள், குண்டுணிகள், குடிகாரர்கள், குண்டர்கள், தத்துவஞானிகள், இடையர்கள், இரக்க முடையோர், மெலிந்தோர், வறியோர், வாய்வீச்சாளர் என இன்னும் பல பல பண்புடைய மக்கள் மலிந்து நிறைந்து நிற்கின்றார்கள்.

மனித இயல்பை அப்படியே படம்பிடித்துக்காட்டும் இயல்பை விட பலதரப்பட்ட துறைகளிலும் பரந்துப்பட்ட அறிவை இவரது நாடகங்கள் கொண்டுள்ளன. இசை, சட்டம், கடலோடற்கலை, விபிலிய வேதம், கிரேக்க தத்துவ ஞானிகளின் அறிவு ஆற்றல்கள், வரலாறுகள், யுத்த தந்திரோபாயங்கள், நாடக மேடையமைப்புக்கள், கலை கலாச்சாரங்கள், அரசியல் வரலாறு, வேட்டையாடல், கைவினை விளையாட்டுத் துறை போன்ற இன்னோரன்ன விடயங்கள் நுட்பமாக ஆனால் செயற்திறன்மிக்க பொருள் பொதிந்த கவினுறு கவிதைகளாக இன்று உலகத்தோர் உள்ளத்திலெல்லாம் நிறைந்து நிற்கும் அளவுக்கு இடம் பெற்றுள்ளன. இருந்தபோதும் அறிஞர்களின் கூற்றுப்படி, ஆராய்வின்படி ஷேக்ஸ்பியருக்கு அரங்கு கலை தவிர்ந்த ஏனைய துறைகளில் பரிச்சயம் எதுவுமே கிடையாது.

இவரது நாடகங்களுள் வரும் ஓரிரு இடங்களை எடுத்து நோக்கினால் அவரது சொல்லாற்றல் தெரிய வரும். வெனிஸ் நகர வணிகன் (Merchant of Venice) என்னும் நாடகத்தில் அன்ரோனியோ என்னும் வணிகனது உடலில் இருந்து ஒரு இறாத்தல் சதையை சூழ்ச்சி மிகு ஒப்பந்தமொன்றினால் ஷைலக் என்னும் யூதன் தனக்கு உரிமையாக்கிவிட்டான். இந்த விடயம் வெனிஸ் நகர மன்னன் முன் வருகிறது. தீர்ப்பு வழங்குவதில் சங்கடம். அப்பொழுது அன்ரோணி யோவின் நண்பன் வசானியோவின் மனைவி போர்ஷியா வழக்கறிஞர் வேடத்துடன் வருகிறாள். வழக்கைச் சமாதானத்துடன் தீர்க்கும் நோக்குடன், யூதனாகிய ஷைலக்கிடம் இரக்கம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறாள். இவள் வாயால் கூறுவது போல் மகாகவி ஷேக்ஸ்பியர்.

Portia:

*The quality of mercy is not strained*
*It dropeth as the gentle rain from heaven*
*Upon the place beneath,it is twice blessed*
*It blesseth him that gives and him that takes*

Act IV se. I (182 -185)

**இரக்கத்தின் தரமானது வலிந்து பெற்றுக் கொள்வதல்ல**
**அது வானத்தின் மழைபோலத்தானாக வருவது**
**இது பரஸ்பரம் இரக்கத்தைக் கொடுப்பவனையும்**
**அதனைப் பெறுபவனையும் ஆசீர்வதித்து ஆனந்தமாக்குவது.**

இரக்கத்தைப் பற்றி ஷேக்ஸ்பியர் நான்கு நூற்றாண்டுக்கு முன்னரே கூறிய கருத்துக்கள் இவை.

"As you like it" என்னும் வேறொரு நாடகத்தில் Jaques என்னும் பிரபு ஒருவரின் வாயிலாக.

*All the world's a stage*
*And all the men and women are*
*merely players*

Act II Se. VII (139-140)

**"உலகம் ஒரு நாடக மேடை அதில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வெறுமனே நடிகர்களே"**


இதில் உள்ள தத்துவக் கருத்துக்கள், திருமந்திரம் பட்டினத்தார் பாடல்கள், பகவத் கீதைக்கு ஒத்துப் போகின்றன.

இன்னும் நூற்றுக்கணக்கான இடங்களை எடுத்தாள முடியும். எனினும் விரிவஞ்சி இத்துடன் அமைகின்றேன். இவரது நாடகங்கள் இன்பியல், துன்பியல், வரலாறு என மூன்று தலைப்புக்களில் அடங்கும்.

வில்லியம் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் மட்டுமல்ல, நீண்ட கவிதை, Sonnets எனும் ஈரேழ்வரிப் பாடல்கள் 154 மட்டில் இயற்றியிருக்கின்றார். இவற்றுள் 126 பாடல்கள் ஓர் அழகான இளைஞனுக்கும் 26 பாடல்கள் ஓர் பெண்ணுக்கும் கூறுவதாக அமைந்துள்ளன. இவற்றுள் 153, 154வது பாடல்கள் தொடர்பு எதுவுமில்லாது தனியே நிற்கின்றன. இப்பாடல்களின் பொதுவான மையக் கருத்தை எடுத்து நோக் கினால் வாழ்க்கையில் இளமை, அழகு, வீரம், அன்பு போன்றவற்றின் நிலையாமை பற்றியும் அதனூடு மரணம் யாவற்றையும் அடித்துச் செல்லும் என்பது, பற்றியுமே கூறுவதாக அமைகிறது.

இவர் இங்கிலாந்தில் உள்ள ஏவொன் நதி தீரக்கிராமமான ஸ்ராட்போட் இல் 1564ம் ஆண்டு April மாதம் 23ம் திகதி பிறந்ததாகக் கருதப்படுகிறது. இவர் தனது ஆரம்பக் கல்வியை அங்கு பயின்றார் எனக் கருதப்படுகிறது. இவர் லத்தீன் மொழியைப் பிரதானமாகப் பயின்றார். இதனாலேயே அநேக லத்தீன் மொழிக்கதைகளை நாடகமாக்க முடிந்தது என்பர்.

இவர் 1582இல் ஆன் ஹாதவே என்னும் பெண்ணைத் திருமணம் செய்து 3 பிள்ளைகளுக்குத் தகப்பன் ஆனார். 1592ல் லண்டன் நகருக்கு வந்து நாடகக் கம்பனியில் சிற்றூழியராகிப் பின் நடிகரானார். 1593இல் Venus and Adonis என்னும் நெடும்பாவை எழுதிப் பிரபலமானார். 1594 தொடக்கம் 1608 வரையும் லண்டன் நாடக அரங்கிலே மிகவும் பிரபல்யமான நடிகராகவும் நாடகா சிரியராகவும் விளங்கினார். 1599இல் இவரது நாடகக்குழுவினர் 'குளோப்' என்னும் நாடக அரங்கைக் கட்டி முடித்தனர். இந்தக் காலத்திலேயே அநேக நாடகங்கள் எழுதப்பட்டன.



**ஷேக்ஸ்பியரின் குளோப் தியேட்டர்**



1616ம் ஆண்டு April மாதம் 23ம் திகதி அமரத்துவம் அடைந்ததாக வரலாறு கூறுகிறது. இவரது பிறந்த நாளும், மறைந்த நாளும் April 23 ஆக அமைந்தது அபூர்வமே.

திருவள்ளுவர், திருமூலர், பட்டினத்தார், சித்தர் பாடல்கள், போன்றவற்றின் கருத்துக்களுடன், கிரேக்க தத்துவ ஞானிகளின் தத்துவங்களும், பிற அரிய பெரிய அறிவுரைகளும் நிறைந்த அற்புதமான படைப்புகளை படைத்த ஒரு மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆவார்.

இவரது வார்த்தைகளிற் கூறுவதானால்,

*His life was gentle and the elements*
*So mixed in him that nature might stand up*
*And say to all the world "This was a man"*

Julius Caesar Act V Se. V (72-75) ■

# கருச் சுமப்போம்

மண்ணகத்து வரலாற்றில்
முன்னுதித்த மானிடர் நாம்
தன்னகத்து சிறப்புக்களை
தரணிக்கு உணர்த்தியவர் நாம்
அதை
முன் நிறுத்தி உரமூட்டி
முடி சூட்ட வேண்டிய - நீ
அதன்
சிரம் அறுத்து உனக்குச்
சிம்மாசனம் கேட்கிறாய்
கரம் நீட்டி
வரம் கேட்டு
அந்நியன்
காலடியில் இடம் தேடுகிறாய்
தடம் மாறிப் போன வாழ்வு
தரித்திரத்தை மட்டுமல்ல
உன் சரித்திரத்தையே மாற்றிவிடும்
இருப்பிளந்து போன பின்னே
இருந்தென்ன
இறந்தென்ன
கருச் சுமப்போம் வாரீர்
உருச் சிதைந்து போகும்
இருப்பின் உயிர் காக்க
உருக் கொண்டு எழுவோம்
உன்னதங்கள் பலவற்றை
இம் மண்ணில் உருவாக்க
சன்னதம் நிகழ்த்த வல்ல
செம்மை மிகு கருச் சுமப்போம்
வாரீர் ■

**இலட்சுமி புத்திரன்.**

# புகைத்தல் ஒரு தொற்றுநோய் ஆரம்பத்தில் தடுத்துவிடு !

வாழப் பிறந்த மானிடனே
தாழப் போக நினைக்காதே
சிகரெட் எனும் பிசாசை
தூர நீயும் விரட்டிவிடு!

பாதி வயதில் நீ
பாழாய்ப் போக நினைக்கின்றாய்
பார்த்து மனம் பதறுவதால்
பாசம் உனைத் தடுக்கிறது!

ஏதோ 'ஸ்ரைல் என்று
சிகரெட் நீயும் குடிக்கிறாய்
தெரிந்தவர்கள் கண்டுவிட்டால்
வேஷம் கொண்டு நடிக்கிறாய்!

பாசம் உன்னைத் தடுத்தாலும்
பாழாய்ப் போக நினைக்கிறாய்
உன் வாழ்வை நீயே
முடித்துவிட நினைக்கின்றாய்!

புகைத்தல் தான் சொர்க்கமென்று
புகைத்து நீயும் தள்ளுகின்றாய்
மானிடனே! இதனால் நீ காணும்
இன்பம் தான் என்ன?

பெற்றோர் உன்னை வளர்த்து.
கஷ்ட நஷ்டங்களை மறந்து
வாழ நினைக்கையிலே
நீயோ? சிகரெட் தான்
உலகமென்று நாளும் சாகின்றாய்!

ஓ மானிடனே!
நான் ஒன்றை மட்டும்
புரிந்து கொண்டேன்.
என்ன என்று கேட்கின்றாயா?
சிகரெட் பிடிக்கும் நீ
முட்டாள்; முழு மடையன்!

விற்பனையாளர்கள் 'புகைப்பது கூடாது'
என்று அறிவுறுத்தல் தந்தபோதும்
அது உனக்குப் புரியவில்லையே!

பகட்டுக்காய் சிகரெட்டை ஊதி
படுகுழியில் உன்னை நீயே
தள்ளுகிறாய்!

மானிடனே!
ஒன்றை மட்டும் புரிந்து கொள்
புகைத்தல் பெரிது என்று
ஊதாரியாய் திரியும் நீ
உன் உயிரை நீயே
சிகரெட்டுக்கு உணவாகக்
கொடுக்கின்றாய்!

ஏதோ சாதனையாளன் போல்
உன் உயிரையும் சாகடித்து
மற்றவரையும் நோயாளியாக்குகின்றாய்!

நீ செய்யும் சாதனை
எமக்கெல்லாம் வேதனையே
மானிடனே!
கொஞ்சம் சிந்தித்துப் பார்
நீ பிறக்கும் போது
நன்றாகத்தானே இருந்தாய்
இடையில் தான் இந்நோய்
உன்னில் பற்றிக்கொண்டது
"புகைத்தல் ஒரு தொற்றுநோய்"
அதுதான் தொற்றிக்கொண்டது
இது முற்றிவிட்டால்
அது உனக்கு புற்று நோய்!
அதனால் மானிடனே!
உன்னவரில் யாருக்கேனும்
இந்நோய் வந்துவிட்டால்
ஆரம்பத்திலே தடுத்துவிடு! ■

**சற்குணசிங்கம் நளாஜினி.**



ஆங்கிலக்கவி

# வேட்ஸ் வேர்த்
## WORDSWORTH, WILLIAM

இவருடைய காலம் 1770 - 1850 ஆகும். இவர் இங்கிலாந்தில் உள்ள கம்பலான்ஸ் மாகாணத்தில் கொக்கர் மவுத் எனும் ஊரில் பிறந்தார். இவருடைய எட்டாவது வயதில் தாயாரையும் பதின்மூன்றாவது வயதில் தந்தையாரையும் இழந்தார். இவரின் சிறுவயது மிகவும் துன்பம் நிறைந்ததாகும். சிறியதொரு வீட்டிலிருந்து கல்வியைக் கற்றார். இவர் 1787இல் கேம்பிறிஜ் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குச் சென்றார். இவர் தனிமையில் நாட்டம் உள்ளவர். 1790இல் பிரான்ஸுக்குச் சுற்றுலாச் சென்றார். அந்த அனுபவத்தினால் அவர் தனது முதற்கவிதையை யாத்தார். சிறிது காலம் அவர் லண்டனிலும் வாழ்ந்தார். 1791இல் மீண்டும் பிரான்ஸுக்குச் சென்று 1792இல் பிரான்சிய புரட்சியின் ஆரம்ப காலத்தில் நாட்டிற்குத் திரும்பினார். கோல்ட்றிச் இவருடைய சமகாலத்தவர். வேட்ஸ் வேர்த் பிரான்சிய புரட்சியை ஆதரித்த ஒருவர். இவருடைய அன்பிற்குரிய நண்பர் ஒருவர் கில்ட்டின் யந்திர மூலம் கொல்லப்பட்டார். அதிர்ஷ்ட வசமாக இவர் இங்கிலாந்திற்கு வந்தமையினால் தப்பிப்பிழைத்தார். ஆன்வொலன்ட் என்ற பெண்ணை இவர் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். சமயரீதியாக இவருடைய திருமணம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1792ம் ஆண்டு மார்கழியில் இவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. 1793இல் வேட்ஸ்வேர்த் இங்கிலாந்தில் தனது கவிதைகளை வெளியிட்டுப் புகழ்பெற்றார். இவர் இயற்கையையும், ஏகாந்தத்தையும், கிராமத்தையும், அழகையும், எளிமையையும் சாதாரண மனிதர்களையும் நேசித்த ஓர் இயற்கையைப் பாடும் கவிஞராவர். தத்துவத்தையும், நல்லொழுக்கத்தையும்

**பா. பாலச்சந்திரன்**

வலியுறுத்துகிற ஒருவராவர். இவருடைய கவிதைகளில் நகைச்சுவையோ மெல்லிசையோ இருக்காது. இவருடைய கவிதைகளில் இயற்கையின் ஈடுபாடும் ஆன்மீக தத்துவங்களும் இழையோடி இருப்பதைக் காணமுடியும்.

உதாரணமாக:- (1) த சொலிற்றரி றீப்பர்

(2) ஐ வொன்டேர்ட் லோன்லி ஆஸ் ஏ க்ளவட்

ஆகிய இரு கவிதைகளிலிருந்தும் சில வரிகள்.

01. I listend motionless and still,
And as I mounted up the hill,
The music in my heart I bore,
Long after it was heard no more.

02. They flash upon that inward eye,
which is the bliss of solitude,
And then my heart with pleasure fills,
And dances with the daffodils

அவருடைய சொந்தக் கருத்துப்படி அவர் ஒரு தத்துவக் கவிஞராவர். அவர் கூறினார் "ஒவ்வொரு பெரும் புலவரும் ஓர் ஆசான்" என்பதாக. அவருடைய கவிதைகளில் மானிடம் வெளிப்படும் கவிதைகள்: லீற்ஸ்கெதரா், மைக்கேல் என்பனவாகும். அவர், "நகரத்திற்குள்ளே எப்போதும் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். என்று மக்களுக்குப் போதித்தார். அவருடைய இயற்கையில் பரவசமுறுதலும், சமய உணர்ச்சியும், தூய சிந்தனையும், ஒழுக்கக்கோட்பாடுகளும் இந்த உலகத்தில் எப்போதும் பிரதிலிப்பதாகும். அவரையும் இந்த உலகம் எப்போதும் மறக்கமாட்டாது. ■



இன்றைய இளைஞர்களே நாளைய உலகின் முதியோர்கள். எங்களின் சந்தோஷமான, உன்னதமான வாழ்விற்கு அடித்தளமாய் உள்ளவர்கள் எம் முதியோர்களே. எங்களை அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்தெடுத்தது மட்டுமல்லாமல் ஆரோக்கிய மானவர்களாகவும், நன்னெறி சார்ந்தவர்களாகவும் சமுதாயத்தில் வாழ வழி சமைத்தவர்கள் அவர்களே. மற்றும் கல்வி, சுகாதாரம் என்பவற்றில் கண்ணும், கருத்துமாயிருந்து எங்களை வளர்த்தெடுத்தவர்கள். எமது பால்ய வயதில் எமக்குப் பல அறிவுசார்ந்த நீதிக் கதைகளை உணவுடன் சேர்த்து ஊட்டிய அவர்களை ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்றுதான் கூற வேண்டும். தங்கள் பிள்ளைகளின் சிறப்பான வாழ்க்கைக்காக தங்களையே தியாகஞ் செய்த தியாகச் செம்மல்கள். அத்தகையவர்கள் தான் இன்று கூனிக் குறுகி, கண்பார்வை மங்கி நடமாடக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நம் முதியோர்கள். உண்மையில் எம் முதுசங்கள்.

# முதியோர்களை அலட்சியப்படுத்தாதீர்கள்!



## அவர்கள் எம் முதுசம்

**ம.க.ஸ்ரீதரன்**

சமுதாயத்தில் முதியோர்கள் எவ்வித பிரச்சனைகளுமின்றி, சந்தோஷமாக வாழ வழிவகை செய்து கொடுக்கவேண்டியது நம் அனைவரது கடமையாகும். ஆனால், இன்று அநேகர் வயது வந்த தங்கள் பெற்றோர்களை வீட்டில் வைத்து பராமரிக்க விருப்பமின்றித் தமது உறவினர்களிடமும், ஆச்சிரமங்களுக்கும், அனாதை இல்லங்களுக்கும் அனுப்பிவிட்டு தாங்கள் வீட்டில் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். தாங்கள் இப்படி வாழ்வதற்கு வித்திட்டவர்கள் யார் என்ற சிந்தனையின்றிப் பெற்றோரை வெறுத்து ஒதுக்கின்றனர். அதுமட்டுமல்ல, வீட்டில் வயது வந்த பெற்றோர்களை வைத்திருப்பவர்கள்கூட அவர்களை ஒரு அறைக்குள் சிறைக்கைதிகள் போல தள்ளிவிடுகின்றனர். சற்று இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று முதியோர்களை வெறுப்புடன் ஒதுக்கித் தள்ளுபவர்கள் நாளைக்குத் தாங்களும் முதியோராகினால் இதே நிலைதான் ஏற்படுமென்பதை நன்கு உணரவேண்டும். ஆதலால் சமுதாயமானது முதியோர்களை ஒரு பகடைக்காய் என்று பாராது அனுபவசாலிகள், நாட்டின் முதுகெலும்புகள், ஒரு குடும்பத்தின் முதுசங்கள் எனக் கருத்தில் கொண்டு அவர்களை உதாசீனஞ் செய்து தவிக்க விடக்கூடாது.

முதியோர்களை தாங்கள் தாங்கள் விரும்பிய வழிபாட்டுத் தலங்களுக்கோ, ஆன்மீக நிலையங்களுக்கோ அழைத்துச் சென்று அவர்களது

மனதில் குடிகொண்டிருக்கும் கவலைகள், பாரச்சுமைகள், பெருமூச்சுகள் என்பன விலகும் வண்ணம் அவர்களையும் எமது சமுதாய நீரோட்டத்தில் உறவாடவைக்க வேண்டும். அவர்கள் எம் மதத்தைச் சார்ந்தவரோ அம் மதத்தினது கோட்பாடுகள், அறிவுரைகள், நற்சிந்தனைகள் என்பவற்றை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். இதன் மூலம் அவர்கள் தங்கள் இறுதிக்கால வாழ்வில் ஆன்மீக சிந்தனை கூடிய ஓர் அமைதி வாழ்க்கை வாழ வழி பிறக்கின்றது. முதியோர்களிற் பலர் ஆன்மீக நாட்டமுள்ளவர்களாய் இருக்குமிடத்து அவர்களது மதம் சார்ந்த விடயங்கள், கலாச்சார நிகழ்வுகள் என்பவற்றை அவர்களுக்கு நினைவு கூறுவது மகிழ்ச்சியை உண்டு பண்ணும். எமது நாட்டில் மதம் சார்ந்த இந்து, கிறீஸ்தவ, வயோதிப இல்லங்கள் உள்ளன. முதியோர்களின் சம்மதத்தை அறிந்து அவர்களை நாம் இத்தகைய இல்லங்களில் தங்க வைக்கலாமேயொழிய அவர்களது விருப்பத்திற்கு மாறாகவோ, அல்லது பலாத்காரமாகவோ இம்முயற்சியில் ஈடுபடக்கூடாது. பொதுவாக அவர்களது மனம் நோகத்தக்க விடயங்களில் நாம் செயற்படக்கூடாது.

கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். தென்னை மரத்தில் பழுத்தமட்டையைப் பார்த்து பச்சை மட்டை சிரித்ததாம். இன்றைய முதியோர்கள் நிலை நாளைக்கு நமக்கும் வரும் என்று யாரும் சிந்திப்பதில்லை. தற்போதைய இளைஞர்கள் முதியவர்களைப் பார்த்து கிழடு, கிழடன், ஏ போட்டி (A40) எனக் கிண்டலாகக் கூறுவதை நாம் காணலாம். இப்படியான அபத்தமான வார்த்தைகள் உபயோகிப்பதை உடனடியாக நிறுத்தி நாமும் ஒரு நாளைக்கு ஏனையோரால் இவ்விதம் அழைக்கப்படுவோமென்பதை மறந்து விடக்கூடாது. அந்நேரம் எம் மனம் எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும், அவர்களை அலட்சியம் செய்யாது, அவர்களது உடல் நலம், உணவு போன்றவற்றில் அக்கறை கொள்வது மிகவும் அவசியம். தூய்மையான உடுப்புகள் உடுப்பது மட்டுமின்றி நிறைவான சத்துள்ள உணவு வகைகளை உண்பதற்கு கொடுக்க வேண்டும். முதுமையில் இரத்தசோகையும், கல்சியக் குறைபாடும் அதிகம் இருப்பதால் அதற்கு ஏற்ற உணவுகளை உண்பது நல்லது. கீரைவகைகளில் நிறைய இரும்புச்சத்து உள்ளது. அத்துடன் கல்சியம் ஓரளவு கிடைக்கிறது. எனவே தினமும் உணவில் ஏதாவது ஒரு கீரைவகையைச் சேருங்கள். சர்க்கரை, தேன், பேரீச்சம்பழம், இறைச்சி வகைகளிலும் இரும்புச்சத்து அதிகம் கிடைக்கின்றது. தினமும் பால் அருந்த வேண்டும். அதிலுள்ள கல்சியம் சத்து எலும்புகளையும், பல்லையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். அத்துடன் தினமும் ஏதாவது பழம் சேர்க்க வேண்டும். அதிலுள்ள விட்டமின் 'சி' தாவரநார்ப் பொருள்கள் மலச்சிக்கல் ஏற்படாமல் தவிர்க்கும். இரவில் தேநீர் அல்லது கோப்பி அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். அது தூக்கத்தைக் கெடுக்கும்.



படுப்பதற்கு முன்பாக சூடான ஒரு கப் பால் அருந்தினால் நல்லது. புரதச்சத்து அதிகமாகவுள்ள கடலை, கௌபீ, பயறு, உழுந்து, சோயா போன்றவற்றை உணவில் சேர்க்கலாம். இவ்வகையான உணவு முறைகளை நாம் கைக்கொள்வோமானால் முதுமையிலும் ஆரோக்கியமாக இருக்கலாம். அவர்களுடைய மனம் நோகும்படி நடக்காது அவர்களின் நோய்களைக் கேட்டறிந்து காலதாமதமின்றி அதற்கேற்ற சிகிச்சைகள் அளித்தல் ஆவசிகம். எத்தனையோ முதியோர்கள் நூல்கள் வாசிக்கக்கூடிய ஆற்றல் இருந்தும் மூக்குக்கண்ணாடி பெறுவதற்குரிய வழிவகைகள், பணவசதிகள் இன்மையால் அவற்றை வாசிக்க இயலாமல் தவிக்கின்றார்கள். தொண்டர் நிறுவனங்கள், அரிமா கழகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் காலாகாலம் முதியோர்களின் உடல் நிலைமைகளைப் பரிசோதனை செய்து ஓரளவிற்கு அவர்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

முதியோர் தினத்தில் மட்டும் அதை கொண்டாடிவிட்டு மறுநாட்களில் ஏனோ தானோ என்று இருக்காமல் நாளாந்தம் இதை நமது கடமையாகக் கைக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். போக்குவரத்து பேரூந்துகளில் முதியோருக்கென இடம் ஒதுக்கப்பட்டு, வேறு யாரும் வயது குறைந்தவர்கள் இருந்தால் அந்த இருக்கையை முதியோருக்குக் கொடுக்கும்படி பேரூந்து காப்பாளர்கள் அறிவுறுத்த வேண்டும். எமது பிரதேசத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு எவ்வித பெறுமதியுமில்லாதது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பிரதேச செயலகங்கள் முதியோர் அடையாள அட்டை உள்ளவர்களுக்கு சகல அலுவலகங்களிலும் முன்னுரிமை அளிக்குமாறு அறிவுறுத்த வேண்டும். எமது பகுதிக்குரிய வலிகாமம் தெற்கு பிரதேசசபை, உடுவில் பிரதேச செயலகம் என்பன ஒன்றிணைந்து ஒவ்வொரு கிராமசேவகர்கள் பிரிவு தோறும் முதியோர் சங்கங்கள் அமைப்பதன் மூலம் அவர்களுக்கு வேண்டிய தேவைகளைச் சுமுகமாகத் தீர்க்கலாம். இதனை துரிதமாக நடைமுறைக்குக் கொண்டுவர மேற்குறிப்பிட்ட இரு செயலகங்களும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு "வெள்ளிமலை" வாயிலாக அன்புக்கரம் கொண்டு அழைக்கின்றேன்.

காலம் இன்னும் கடந்து விடவில்லை. முதியோரின் மனதைப் புண்படுத்தாது அவர்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுப்பது நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமை என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். இல்லையெனில் வீண் விரயஞ் செய்து முதியோர் அடையாள அட்டை வழங்குவது முதியோர் சங்கங்கள் அமைப்பதெல்லாம் வெறும் கண்துடைப்பே.

**"பெற்றோரைக் காப்பது பிள்ளையின் கடனே
முதியோரைக் காப்பது இளையோரின் கடனே"
"Old is Gold"** ■

# அன்றைய அச்சுப்பதிப்பு

மொழிபெயர்ப்பு
ம.க. ஸ்ரீதரன்

எந்தவொரு செயல்முறையிலாவது ஒன்றின் அச்சை எடுக்கும் முறையை "அச்சுப்பதிப்பு" எனலாம். எழுத்து அச்சுக்கள் பதிப்பு முறையானது அச்சுப்பதிவு (Type) மட்டுமின்றி மரக்கட்டைகள் மற்றும் மரத்துண்டுகள் மூலமாகவும் நிறங்களை அதன்மேல் மெருகூட்டி பெறப்பட்டன. முதன் முதலாக அச்சுக்கலையை உருவாக்கியவர்கள் சீனர்களே. சீன மாகாணத்திலுள்ள கான்சு (Kansu) என்ற இடத்தில் 1900ம் ஆண்டு ஆகப்பழைய அச்சுப்புத்தகங்களையும், அதை அச்சிட உபயோகித்த மரத்துண்டுகளையும் கண்டுபிடித்தார்கள். அசையும் அச்சுப்பதிப்பு முறையை முதன்முதலாக சீன தேசத்தைச் சேர்ந்த பீசிங் (Pisheng) என்பவர் 1041இலிருந்து 1049 வரையிலான காலப்பகுதியில் செயல் முறையில் கொண்டுவந்தார். பெரும்பாலான எழுத்து உறுப்புகள் சீனர்களின் எழுத்து வடிவிலேயே நீண்டகாலமாக நடைமுறையிலிருந்து வந்தது.

அசையும் அச்சுப்பதிப்பை ஐரோப்பியர் கண்டுபிடித்ததற்கான உண்மையான திகதி தெரியாவிடினும் சீனர்களின் தனித்துவ முயற்சியினால் இது 1440ம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் செதுக்கப்பட்ட மரத்துண்டுகளிலிருந்து புத்தகங்கள் அச்சுப்பதிப்பு செய்யப்பட்டன. ஒரு புத்தகத்தின் பக்கத்திலுள்ள சொற்கள் எல்லாம் உறுதியான மரத்துண்டுகள் மீது கைகளால் பொறிக்கப்பட்டன. அச்சுப்பதிவு கண்டுபிடிப்பிற்கு பிறகே புத்தகங்களை மரத்துண்டுகளில் உருவமைத்தார்கள். இவ்வாறு மரத்துண்டுகள் மூலம் அச்சுப்பதிவு பெறப்பட்டவை பெரும்பாலும் 1440ம் வருடத்திற்கு முன்பென கூறுவதற்கு போதுமான சான்றுகளுண்டு. இம் மரத்துண்டுகளான அச்சுகள் கி.பி. 770ன் ஆரம்பத்தில் ஜப்பான் தேசத்தில் உற்பத்தியாகின எனத் தெரிய வருகின்றது. ஐரோப்பியர் அசையும் அச்சுப்பதிவை கண்டுபிடித்தமைக்கு நிச்சயமான திகதி தெரியாவிடினும் இக் கண்டுபிடிப்பு யாரால், எங்கே கண்டுபிடிக்கப்பட்டதென்பது சந்தேகத்திற்கு உரியதாயுள்ளது. ஜேர்மன், ஹொலன்ட், இத்தாலி, பிரான்ஸ் தேசத்தவரும் இதற்கு உரிமை கோரினார்கள்.

ஒரு வல்லுநர் இவற்றையெல்லாம் சேர்த்து பின்வருமாறு கூறியுள்ளார்:-
"ஹொலன்ட் புத்தகங்கள் வைத்திருந்தும் ஆவணங்களில்லை;
பிரான்ஸ் ஆவணங்கள் வைத்திருந்தும் புத்தகங்களில்லை;
இத்தாலியிடமோ புத்தகங்களோ ஆவணங்களோ இல்லை;
ஜெர்மனியிடம் புத்தகங்களும், ஆவணங்களும் உண்டு. "



என்பதாகும். முதல் ஆவணங்கள் 1454 - 1455 காலப்பகுதியில் மெயின்ஸ் (Mainz) நாட்டில் ஒரு அச்சகத்தில் ஜோன் குட்டன்பேர்க் (John Gutenberg) என்பவரால் அச்சுவார்க்கப்பட்டு விநியோகிக்கப் பட்டதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1456ம் ஆண்டு மெயின்ஸ் நகரில் லத்தீன் மொழியிலான பைபிள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதற்கு உரிமையுடையவர் ஜோன் குட்டன்பேர்க் (John Gutenberg) ஆவார். இதனுடைய பிரதியொன்று புகழ்பெற்ற நூலகமான கார்டினல் மசாரினில் (Cardinal Mazarin) கண்டுபிடிக்கப்பட்டதால் இப்பைபிள் மசாரியன் பைபிள் என அழைக்கப்பட்டது. இதன் ஒரு பக்கத்தில் 42 வரிகள் அமைந்திருப்பதால் இதனை 42வரி பைபிள் எனவும் அழைப்பர். முதன் முதல் அச்சுத்துறையில் நிற அச்சுப்பதிவை முயற்சி செய்தவர்களில் ஜோன் வஸ்ற் (John Fust) மற்றும் பீட்டர் ஸ்கோவர் (Peter Schoeffer) அடங்குவர். பின்னர் குட்டன் பேர்க்கும் (Gutenberg) இதனுடன் இணைந்துகொண்டார்.

மெயின்ஸ் (Mainz) நகரிலிருந்து அச்சுப்பதிவு முழுக்கண்டங் களுக்கும் பரவத்தொடங்கியது. 1464ம் ஆண்டில் இதனை சுவேன் ஹெய்ம் (Sweynheym) மற்றும் பன்னாட்ஸ் (Pannartz) ஆகிய இரு ஜேர்மனி யர்களும் இத்தாலி நாட்டின் ரோம் நகரிற்கு அருகிலுள்ள சுபியாகோவில் (Subiaco) ஆரம்பித்தனர். 1469ல் இதனை ஜோன் என்பவரும் வென்டிலின் (Wendelin) என்பவரும் இணைந்து வெனிஸ் நகரத்தில் ஆரம்பித்தார்கள். இவர்களைத் தொடர்ந்து பிரெஞ்சுக்காரரான நிக்கொலஸ் ஜென்சன் (Nicolas Jenson) 1470-1480 காலப்பகுதியில் அச்சுப்பதிவை மேற்கொண்டார். வெனிஸ் நகரிலுள்ள புகழ்பெற்ற அச்சகரான அல்ட்ஸ் மனுரியஸ் (Aldus Manutius) 1495 - 1515 காலப்பகுதியில் அங்கு அச்சு பதிப்புகளை மேற்கொண்டார். சாய்ந்த பெரிய எழுத்துக்களின் அச்சுப்பதிப்பிற்கும் இவரே மூலகர்த்தா.

எல்லோர்க்கும் தெரிந்த அல்டஸ் (Aldus) என்பவர் மிகவும் மலிந்த விலையில் இலக்கிய நூல்களை அச்சிட்டு எல்லோரும் வாசிப்பதற்கான பங்களிப்பைச் செய்தார். 1470ம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டிற்கு அச்சுப்பதிப்பு முறை ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த கிரான்ஸ் (Krantz), ஜெரிங் (Jering), மற்றும் பிரைபேகர் (Friburger) ஆகியோரால் பாரிஸ் நகரத்திற்கு அண்மையிலுள்ள சேர்பொன்னில் (Sorbonne) அறிமுகப்படுத்தப்பட்டது. 1472ம் ஆண்டிற்கு அண்ணளவாக பேர்த்ஹோல்ட்ரப்பல் (Berthold Ruppel) என்பவரால் சுவிற்சலாந்தில் அச்சுப்பதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சுவிஸ் நாட்டின் சரித்திரத்தில் நன்கு படித்த, புகழ்பெற்ற அச்சடிப்பாளர் ஜோன் பிரோபென் (John Froben) ஆவர். இவருடன் இணைந்து அச்சு திருத்துநராக பணிபுரிந்தவர் ஒல்லாந்து நாட்டு மேதாவியான டெஸிடெரியஸ் இரஸ்மஸ் (Desderius Erasmus) என்பவராவர். தாழ்நிலை நாடுகளான ஹொலன்ட் மற்றும் பெல்ஜியம் என்பவற்றில் 1471ம் ஆண்டின் முற்பகுதியில் உட்ரெச்ட் (Utrecht) என்னுமிடத்தில் அச்சுப்பதிப்பு முறை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அச்சடிப்பாளரின் பெயர்

தெரியவில்லை. 1473ம் ஆண்டளவில் என். கெட்டீலர் (N. Ketelaer) மற்றும் ஜி.டி. லீம்ட் (G.de. Leempt) ஆகிய ஹொலண்ட் அச்சடிப்பாளர்கள் முதன்முதலாக தங்களால் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட புத்தகத்திற்கு தங்கள் பெயர்களை இட்டார்கள். ஸ்பெயின் நாட்டின் முதற்தர அச்சடிப்பாளரான லம்பேட் பால்மாட் (Lanbert Palmart) 1475ம் ஆண்டில் இதனை வலன்சியாவில் (Valancia) ஆரம்பித்தார். ஸ்பானிஷ் நாட்டின் அச்சுப்பதிப்பு சரித்திரத்தில் கிரோம்பேரைச் (Kromberger) சேர்ந்த ஜாக்கப், ஜோன் (தகப்பனும், மகனும்) என்பவர்கள் சிறந்து விளங்கினார்கள். இங்கிலாந்து நாட்டின் முதல் அச்சடிப்பாளராக வில்லியம் கக்ஸ்டன் (William Caxton) திகழ்ந்தார். இவர் கென்ட் (Kent) நாட்டின் பூர்வீக குடிமகனாவார். இவர் 1476ம் ஆண்டில் வெஸ்ட்மினிஸ்டர் என்னுமிடத்திலுள்ள அல்மன்றி (Almonry) என்னும் ஊரில் "த ரெட் பேல்" (The Red Pale) என்னும் அச்சகத்தை நிறுவினார்.

இங்கிலாந்து நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுப்பதிவு புதிய புதுமைகளை உருவாக்கியது. இங்கிலாந்தின் முதல் அச்சகர் ஆங்கிலேயரானபடியால் அவர் தனது பாஷையையே அச்சுப்பதிவிலும் செலுத்தினார். கக்ஸ்டன் என்பவர் அநேக விடயங்களை எழுதியும், மொழிபெயர்த்தும் புத்தகவடிவில் அச்சிட்டு வெளியிட்டார். அச்சுப்பதிப்பின் தரம் 16ம் நூற்றாண்டில் அரசாளும் ஆட்சியினரால் சீர்கெட்டுப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. 1720ல் வில்லியம் கஸ்லன் (William Caslon) ரோமல் உருவ முறையில் புது மாற்றங்களுடன் நிக்கொலஸ் ஜென்சன் அவர்களின் வடிவமைப்புடன் புது அச்சுப்பதிப்பை ஏற்படுத்தினார். மெச்சிக்கோ நகரிலுள்ள வெஸ்டர் ஹெமிஸ்பெயா நகரில் அச்சுப்பதிவு 1539ல் ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா தனது முதல் அச்சுப்பதிவு முறையை கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள மாஸ் (Mass) என்னுமிடத்தில் 1638ல் ஆரம்பித்தது. அச்சுப்பதிவில் 16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சீர்கேடு முறை தொடர்ந்து 17, 18, 19ம் நூற்றாண்டுகளிலும் இருந்து வந்தது. 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலுள்ள கெல்ம்ஸ்கொட் (Kelmscott) அச்சகம் மூலமாக வில்லியம் மொரிஸ் (William Morris) என்பவர் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். மொரிஸின் புத்தகங்கள் ஒரு குறிப்பிட்ட பதிப்புகள் வெளியிட்டு, புத்தக சேகரிப்பாளர்களால் அதற்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. புத்தக தயாரிப்பில் தற்போதைய தராதரம் மிக உயர்ந்தது. இங்கிலாந்தில் ஒரு சில திறமையான தனியார் அச்சகங்களைவிட வர்த்தக அச்சுப்பிரிவுகளும், சர்வகலாசாலைகளும் நடாத்தும் அச்சகங்கள் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றன. அச்சுப்பதிவுச் சரித்திரத்தில் அச்சக வடிவமைப்பு உருவாக்குவதில் நிரந்தரமான இடத்தை பெற்றவர் பிரெடரிக் டபிள்யூகவ்டி (Frederick W.Goudy) ஆவார்.




அச்சுப்பதிவு முறையானது அதன் அபிவிருத்தியில் குறிப்பிட்ட சரித்திரமிக்க சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. வில்லியம் ஜான்சன் பிளூ (William Janszoon Blaeu) 1571 – 1638 காலப்பகுதியில் 18ம் நூற்றாண்டு வரைக்கும் சில முன்னேற்றங்களைப் புகுத்தினார். இவர் ஹொலண்ட் நாட்டைச் சேர்ந்தவர். முழுவதும் இரும்பாலான அச்சுப்பதிவு இயந்திரம் 1800ம் ஆண்டில் பிலாடெல்பியாவைச் (Phila delphia) சேர்ந்த அடாம் ரமேஜ் (Adam Ramage) மற்றும் ஸ்ரான் கோப்பைச் (Stanhope) சேர்ந்த சார்ள்ஸ் ஏர்ள் (Charles Earl) ஆகியோரால் மேலும் திருத்தங்களுடன் புனரமைக்கப்பட்டு ஸ்ரான்கோப்பிரஸ் (Stanhope's Press) என அழைக்கப்பட்டது. 1817 – 1934 காலப்பகுதியில் ஜோர்ஜ் கிளைமர் (George Clymer) பிலாடெல்பியாவில் இதனை ஆரம்பித்து லண்டன் வரை பரவச்செய்தார். அத்துடன் அவர் திருகு ஆணி (Screw) முறையை முழுவதும் கைவிட்டு நெம்புகோல் (Lever) முறைக்கு இதனை மாற்றீடு செய்தார். கையால் இயங்கச்செய்யும் அச்சு முறையில் நியூயோர்க்கைச் சேர்ந்த ஜோன் ஜே. வெல்ஸ் (John J. Wells) பீட்டர் ஸ்மித் (Peter Smith) மற்றும் சாமுவேல் ரஸ்ற் (Samuel Rust) ஆகியோரின் சில முன்னேற்றங்களும் சேர்ந்துள்ளன.

1811ம் ஆண்டில் மின்வலுவினால் இயங்கும் முறையைக் கொண்ட அச்சுப்பதிப்பு பிரெடரிக் கோனிக் (Frederick Koenig) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுழலும் உருளைகள் பொருத்தப்பட்ட தட்டை வடிவிலமைக்கப்பட்ட இயந்திரத்தை கோனிக் (Koenig) மற்றும் அன்றூ பவர் (Andrew Bauer) ஆகியோரால் வடிவமைக்கப்பட்டது. இவ் வடிவமைப்பிலுள்ள இரு இயந்திரங்கள் லண்டன் மாநகரத்திலுள்ள "த ரைம்ஸ்" (The Times) அலுவலகத்தில் நிறுவப்பட்டு முதற்பிரதி 1814ம் வருடம் நவம்பர் 29ம் திகதி வெளியிடப்பட்டது. அதில் இது "நீராவி வலுகொண்ட அச்சுமுறையினால் பிரசுரிக்கப்பட்ட" தென அறிக்கையொன்று வெளியாகியது. இவ்வியந்திரம் மணித்தியாலத்திற்கு 1,100 பதிப்புகளை வெளியிட்டது. இது கையால் இயங்கும் இயந்திரத்தின் உற்பத்தியிலும் பார்க்க நான்கு மடங்கு திறனுள்ளது. பின்பு ஒரு தாளின் இரு பக்கங்களிலும் அச்சுப்பதிவு செய்யும் முறையைக் கொண்ட ஒரு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அது 1827ம் ஆண்டளவில் நடைமுறைக்கு வந்தது. 1817ம் ஆண்டளவில் கோனிக் (Koenig) ஜேர்மனிக்குத் திரும்பியவுடன் "த ரைம்ஸ்" (The Times) இல் உள்ள பொறியியலாளர்களான அப்பிள் கார்த் (Apple Garth) கவ்பர் (Cowper) ஆகியோர் ஒரு மணித்தியாலத்தில் 4000 பிரதிகள் (ஒரு தாளில் ஒரு பக்கம் மட்டும்) அச்சுப்பதிவு செய்யும் ஒரு இயந்திரத்தை 1827ல் உருவாக்கினார்கள்.

(தொடர்ச்சி மறு இதழில்)

# விண்ணின் அமுதம்

ம.பா.மகாலிங்கசிவம்



மூதறிஞர், கலாநிதி, பண்டிதர்
கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்

**1921** ஆம் ஆண்டு மாவிட்டபுரத்திற் பிறந்தவர் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் "சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்" என்னும் கவிதை மூலம் புகழ் பெற்றவர். ஆனந்தத்தேன், எடுத்தமலர்களும் தொடுத்த மாலையும் ஆகிய கவிதைத் தொகுதி களையும், யாழ்ப்பாணக்காவியம், இலங்கைக் காவியம் என்னும் காவியங்களையும் இயற் றியவர். அத்துடன் 'தண்ணீர்த்தாகம்' முதலிய சிறந்த சிறுகதைகளையும் அன்னபூரணி என்னும் நாவலையும் 'மஞ்சுகாசினியம்' என்னும் இலக்கண நூலையும் எழுதியவர். அண்மையிற் காலமான அவரின் நினைவாக அவரது எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் கவிதைத் தொகுப்பிலுள்ள "விண்ணின் அமுதம்" என்னும் கவிதை பற்றிய சில இரசனைக் குறிப்புக்கள் இங்கே தரப்படுகின்றது.

இக் கவிதைக்குக் கவிஞர் தரும் முன்னுரை விடுமுறை நாட்களை அவசர அவசரமாகக் கழித்து விட்டு அன்பு மனைவியையும் அருமைக் குழந்தைகளையும் விட்டுப்பிரிய மனமின்றி அவள் கொடுத்த கட்டுச் சோற்றுடன் புகையிரதத்தில் ஏறிய கந்தையா வவுனியாவைச் சமீபித்ததும் அதனை உண்பதற்கு எடுக்கிறார். உடன் சென்ற வாலிபத் தோழர்கள் நால்வர் அதனைக் கேலி செய்கின்றனர். இவர்களுக்கு கந்தையா கூறிய மறுமொழி இங்கு கவிதையாக விரிகின்றது.

கந்தையாவின் அன்பு மனைவியது தங்கவளைக் கரங்கள் தொட்டுத்தொட்டுச் சமைத்தது, இந்த உணவு. மனைவியின் கைகளுக்கு ஒரு தனிவாசனை உண்டல்லவா? அந்த வாசனை மிக அதிகமாகவே இந்த உணவில் கமழ்கிறது. அது கந்தையாவிற்கு மட்டுமே புரிகிறது. கூடி இருந்தவருக்கு எங்கே இதெல்லாம் தெரியப் போகிறது? அதனாலே கந்தையா முதலில் அந்தத் தனிவாசனையை இவர்களுக்குப் புரியவைக்க முயற்சிக்கின்றார்.

**"தங்கவளைக் கைகள் தொட்டுச் சமைத்தது**
**சாலக் கமழுதையா—இதில்**
**அங்கம் எல்லாம் மிகப் பொங்கி வழிந்திடும்**
**அன்பு கலந்ததையா**



மனைவியின் அங்கங்களிலே அழகையும் இன்பத்தையும் மட்டும் அல்ல அன்பையும் காண்கிறார், கந்தையா. அந்த அன்பு கூட சும்மா தேங்கி நிற்கும் அன்பல்ல, பொங்கிப் பிரவகித்து வழிகின்ற அன்பு. அப்படி வழிகின்ற அன்பு அவள் தொட்டுச் சமைக்கின்றபோது அவள் கைகளின் வழியாக வந்து உணவோடு கலந்துவிட்டதாகக் கவிஞர் காட்டுகின்றார்.

சாதாரணமாக உப்பை வாயில் இட்டால் கரிக்கும் ஆனால் மனைவியின் தங்வளைக் கைகளினால் கறியில் இட்டாலோ உள்ளே இருந்து கொண்டு கறியை இனிக்கச் செய்கிறதே இது உப்பின் புதுமையா? மனைவி கையின் மகிமையா? அதனை "கொட்டிய உப்பு கசப்பதென்றாலும் உள் கூடியினிக்குதையா" என்றும் கவிஞர் காட்டுகிறார். இதற்கு இன்னுமொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். மனைவி கறிக்குப் போட்ட உப்பு சற்றுக் கூடிவிட்டது.இவ்வளவு காலமும் அளவாக உப்பிட்டுச் சமைத்தவளுக்கு இன்றைக்கு மட்டும் ஏன் அளவு தெரியாமல் போனது? விடை கவிஞரின் அடுத்த அடியிலே பிறக்கிறது.

**"இது விட்டுப் பிரிகையில் சொட்டுக்**
**கண்ணீர் பட்ட விண்ணின் அமுதமையா"**

அவள் உப்பை அதிகமாக சேர்க்கவில்லை; அளவாகத்தான் போட்டாள். எப்படி இருந்ததும் கூடியது போல் தெரியக் காரணம், அவள் கண்ணீர் தான் என்கின்றார் கவிஞர். கண்ணீரும் உப்புச்சுவை உள்ளதல்லவா? இவர் விட்டுப் பிரிகின்ற சோகத்திலே மனைவி விட்ட சொட்டுக் கண்ணீர் கறிக்குள்ளும் கொட்டிவிட்டதாம் அது தான் கறி கசக்கின்றதாம், கந்தையருக்கு. கந்தையரின் மகன் சிறுவன்; துடிதுடிப் பானவன்; சொல்வழி கேளாதவன். தந்தைக்கு தாயார் தயாரிக்கும் உணவு மைந்தனின் கண்களில் தெரிகின்றது. நாவில் எச்சில் சுரக்கிறது. விடுவானா பயல்? தாயார் அங்காலே இங்காலே திரும்புகின்ற போதெல்லாம் பையன் சட்டிக்குள் கையை விடுகின்றான். இதை முன்னர் பார்த்த கந்தையாவிற்கு இப்போது நெஞ்சிலே பசுமையான இந்த நினைவுதான் தோன்றுகின்றது. கேலி செய்த நண்பர்களுக்கு கண்ணிலே நீர் தழும்ப அதை விபரிக்கின்றார்.

**"சொன்னபடி நடவாத துடிப்பயல்**
**தொட்டுச் சுவைத்ததையா—இது**
**சின்னஞ் சிறுகைக் குழந்தை அளைந்தது**
**தெய்வ அமுதமையா"**

"அமிழ்ந்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள் சிறுகையளாவிய கூழ்" ன்றார் திருவள்ளுவர். ஆனால் தன் குழந்தை அளைந்த இவ் உணவைத் தெய்வ அமுதென்று கனிவோடு குறிப்பிடுகிறார். குழப்படி செய்யும்,

சொன்னபடி கேட்காத சிறுவனை பேச்சுத்தமிழில் கவிஞர் துடிப்பயல் என்று சொல்வது பாடலுக்கு மேலும் அழகுகொடுக்கிறது.

அன்புத் துணைவன் நெடுந்தூரப் பிரயாணம் செய்யப் போகிறார். பிரியும் நேரம் நெருங்குகின்றது கதைப்பதற்கு, செய்வதற்கு எத்தனையோ சங்கதிகள், அவர்களுக்கு இடையில். மனைவி சமையலைப் பார்ப்பாரா? மையலைத் தீர்ப்பாரா? அங்கும் இங்கும் மாறி மாறி ஓடித்திரிந்ததில் சமையல் பிந்துகிறது. வருகின்ற புகைவண்டிக்கு இதெல்லாம் தெரியுமா? அது உரிய நேரத்திற்கு வருகிறது ஊது குழல் சத்தத்துடன். சத்தம் கேட்டதுதான் தாமதம்.................கந்தையர் போட்டது போட்டபடி இருக்க எடுத்தது எடுத்தபடி இருக்க புகையிரத நிலையம் நோக்கி ஓடத் தொடங்குகிறார்............... சாப்பாட்டை விட்டு விட்டு. மனைவி கணவனைப் பயணம் அனுப்பிவிட்டு வந்து பார்க்கிறார், நெஞ்சு திக்கென்கிறது. இதுவரை பாடுபட்டுச் சமைத்த உணவல்லவா? கணவன் விட்டு விட்டுச் செல்ல மனம் ஒப்புமா? என்ன செய்திருப்பார்? பாடல் காட்டுகிறது.

**“ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு**
**ஓடிவருகையிலே – இது**
**பாதி வழிவந்து தாமரை கைதந்த**
**பச்சை அமுதையா”**

ஊதுகுழல் சத்தத்தினால் இருவரும் அடைந்த நிலையைக் கவிஞர் அவதிப்பட்டு என அழகாகக் காட்டுகிறார். இந்த அவதிப்பட்டு என்ற சொல் பொருத்தமான இடத்திலே விழுந்து பாடலை மேலும் உயர்த்திக் காட்டுகிறது.

இந்த உணவுப் பொதியும் தந்த கைகளும் மட்டும் கந்தையருக்கு சிறப்பாகத் தோன்றவில்லை அதைக் கட்டிச் சுற்றிய கயிறு கூட உயர்வாகின்றது. இதனை

**“கட்டிய அன்புக் கயிற்றிற் சுற்றிய**
**கட்டுப் பொதி இதையா – இதைத்**
**தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாம் ஒரு**
**சோதி மிளிருதையா”**

எனக் கவிஞர் காட்டுகிறார். இது சாதாரண கயிறா? தன் அன்பை அல்லவா கயிறாக்கிச் சுற்றிக் கட்டி இருக்கின்றாள். இதைச் சுவைக்கையில் உள்ளமெல்லாம் கந்தையருக்கு ஒரு சோதி பிறக்கிறது. அவருக்கு மட்டுமா? இந்தக் கவிதையைச் சுவைத்த எங்களுக்கும் தானே? ■



# வலி தெற்கு பிரதேசத்தில் இனங்காணக்கூடிய சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள்

– பாலகௌரி சங்கரப்பிள்ளை.

இன்றைய உலகில் சுற்றுச்சூழல் சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் பிரச்சனையானது அரசியல் எல்லைக்குட்பட்டதோ அல்லது ஒரு நாட்டுக்குட்பட்டதோ இல்லை. இதன் தாக்கங்கள் உலகம் பூராகவும் அவதானிக்கக்கூடியதாக உள்ளன. இப்பிரச்சனையானது அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் பொதுவானதாக உள்ளது. இருந்தாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் (Developed Countries - DC) தமது கைத்தொழில் நடவடிக்கைகளுக்காகவும் நகராக்கச் செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தும் அதிகரித்த எரிபொருட் பாவனைகள், இரசாயன நச்சுப் பொருட்களின் பாவனைகளின் மூலம் பல்வேறுபட்ட வாயுக்களான காபனீரொட்சைட், ($CO_2$), ஓசோன் (O3), குளோரோபுளோரோ காபன் (CFC), மீதோன் ($CH_4$), போன்றவை. வளி மண்டலத்தில் வெளிவிடப்படுகின்றன. இவற்றின் காரணமாக புவியின் வெப்பநிலையானது அதிகரிக்கின்றது.

இவ்வாறு புவியின் வெப்பநிலையானது அதிகரிக்கும்போது துருவ முனைவுப் பகுதிகளிலும், உயர் மலைப்பகுதிகளிலும் (இமயமலை) உள்ள பனிக்கட்டியானது உருகி நதிகளினூடாக கடலைச் சென்றடைவதால் கடலின் நீர்மட்டம் உயருவதுடன் தாழ்கரையோரங்களும், சிறு தீவுகளும் நீரில் மூழ்கவேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் கரையோரப் பிரதேசங்கள் பாரிய வெள்ளப் பெருக்கினை அனுபவிக்க வேண்டி ஏற்படும். இது சுற்றுச்சூழல் பிரச்சனையால் ஏற்படும் விளைவாகும்.

இந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சூழல் சம்பந்தமான பிரச்சனைகளைக் கவனிப்போம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் வளம், நில வளம், கடல் வளம் மூன்றும் சிறப்பானதும் முக்கிய பொருளாதார நடவடிக்கைக்கும் உரிதாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாண குடாநாட்டின் நீரானது தரைக்கீழ் நீராகக் காணப்படுவதால் ஆண்டு முழுவதும் நன்னீரினைப் பெறக்கூடியதாக உள்ளது. பல

மண் வகைகள் காணப்படுவதால் ஒவ்வொரு பிரதேசத்திலும் வெவ்வேறான பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கடல் வளம் என்று நோக்கும்போது மீன்கள் வளருவதற்கான பல்லுருவக் கடற்கரைகளுள் கடனீரேரிகள், தீவுகள் போன்றன காணப்படுவதுடன் சுவையான மீன் வகைகளும் காணப்படுகின்றன.

யாழ் குடாநாட்டினது குறிப்பாக வலி தெற்கு பிரதேசத்து நன்னீர் பற்றி நோக்குவோம். யாழ்ப்பாணக்குடாநாட்டிலேயே தரமான நன்னீர் வலிகாமப்பகுதியிலே உண்டு என்பது சிறப்புக்குரிய விடயம். ஆனால் இந்த நந்நீரானது முறையற்ற பாவனையினால் நாளடைவில் குறைவடைந்தும் உவராகவும் மாறும் நிலைதோன்றியுள்ளது. முன்னைய காலங்களைவிட இன்றைய காலப்பகுதியில் வலி தெற்குப் பிரதேசத்தில் குடியிருப்புக்கள் அதிகரித்திருப்பதுடன் விவசாய நிலப்பாவனையும் அதிகரித்துள்ளது. ஒரு பிரதேசத்தில் காலம் செல்லச் செல்ல குடியிருப்புக்களோ நிலப்பயன்பாடுகளோ அதிகரிப்பது இயற்கையானது. ஆனால் இங்கு அவ்வாறில்லை. 1990ம் ஆண்டு காலப் பகுதிகளில் வலிகாமம் வடக்கு மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களுக்குச்சென்றாலும் வலி தெற்கில் அதிகம் தங்கியுள்ளார்கள் என்பது உண்மை. இப் பிரதேசத்தில் அவர்களுக் கென்றே தனியான முகாம்கள் கூட அமைத்துக் கொடுக்கப்பட் டுள்ளன.

இவ்வாறு இப்பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புகளும் விவசாய நடவடிக்கைகளும் இன்னும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளும் செறிவாகக் காணப்படுவதனால் இங்குள்ள நன்னீரானது அதிவேகமாக நுகரப்படுகின்றது. அந்தவகையில் விவசாயத் தேவைகளுக்காக தினமும் அதிகளவான தரைக் கீழ்நீர் (Under ground water) அதிவேக நீர் இறைக்கும் இயந்திரங்களால் வெளியேற்றப்படுகின்றது. ஆனால் வெளியேற்றப்படுமளவிற்கு மீண்டும் நீர் சேமிக்கப்படுவதில்லை. இது இவ்வாறிருக்க ஒவ்வொரு வீடுகளிலும் எந்தவொரு மணம், குணம், பூவற்ற குறோட்டன்களுக்காக தினமும் நீரானது பாய்ச்சப்படுகின்றது. (இது இப் பிரதேசத்து மூத்த கல்வியியலாளனின் ஆதங்கம்)

மழைபெய்யும் காலங்களில் மழைநீரானது சேமிக்கப்படவேண்டும். இப்பிரதேசத்தில் சிறு குளங்கள் பல முன்னோர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கந்தரோடைக்குளம் போன்றவை சரியாக பராமரிக்கப் படாது மண்ணால் மூடப்பட்டு ஆழமற்ற வைகளாகி வருகின்றன. இவற்றைப் புதுப்பிக்க வேண்டும். வாய்க்கால்கள் பல வீதிகளாக மாறி விட்டன. சுன்னாகம் பொதுநூலகத்திற்கு அருகாமையில் உள்ள வாய்க்கால்கள் சரியான முறையிற் பேணப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் மழை காலங்களில் அயற் பகுதிகளில் வெள்ளம் தேங்குதல் போன்ற அசாதாரண நிலைமைகளால் தொற்றுநோய்கள் நுளம்புப்பெருக்கம், வைரஸ் தாக்கம் தோன்றலாம்.

மழைநீர் சேமிக்கப்படாது நன்னீர் அதிவேகமாக நுகரப்படும் சந்தர்ப்பத்தில் தரைக்கீழ் நீர் மட்டம் குறையும்போது கடல் நீரானது தரைக்கீழ் நீர் மட்டத்தினுள் புகும் நிலை ஏற்படும்போது நன்னீர் உவர்நீராக மாற வாய்ப்பிருக்கின்றது. இதனை சகல மக்களும் கருத்தில் கொண்டு செயற்படல் வேண்டும்.

மேலும் இப்பிரதேசத்தில் அதிகரித்த விவசாயச் செய்கையினால் இயற்கைப் பசளையினை பாவிப்பதைக் குறைத்து செயற்கைப் பசளையினை அதிகமாக பாவிப்பதனால் நிலம் உவர்த்தன்மையினை அடைவதுடன் காலப்போக்கில் பரப்பிற்கான உற்பத்திச்செலவு அதிகரிக்கும். இந்நிலை தொடருமானால் ஓரளவு வறியவர்கள் விவசாய நடவடிக்கையினைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும். மேலும் பயிர் களுக்கு அதிகரித்த கிருமிநாசினிப் பாவனையின் மூலம் சுற்றுப்புறச் சூழலின் வளி மாசடைவதுடன் மருந்து தெளித்த மரக்கறிகளை உண்ணும் மக்களுக்கு புற்று நோய், நுரையீரல், ஈரல் சம்பந்தமான நோய்கள் ஏற்பட ஏதுவாயிருக்கின்றது.

இப்பிரதேசத்தின் நிலக் கீழ்ப்பாறைகள் (கல்) கட்டடத் தேவை, பெருந்தெருக்கள் அமைப்பு போன்ற பல தேவைகளுக்காக அகற்றப்பட்டு வருவதால் விவசாய நிலங்களின் அளவு குறைக்கப் படுவதுடன், மக்களின் வாழ்விடங்களை ஏற்படுத்துவதற்கேற்ற நிலப்பரப்பு குறைவடைந்து வருகின்றது.

இப்பிரதேசத்து வளி கூடுதலாக மாசடையக்கூடிய நிலையிலேயே காணப்படுகின்றது 1990ம் ஆண்டு காலப்பகுதிக்கு முன் நீர் மின் வலுவின் மூலமே யாழ்குடா நாட்டிற்கான மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது (ஏறத்தாழ 10 ஆண்டுகளாக) மின்பிறப்பாக்கிகள் (Generatars) மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு உயிர்சுட்டு எரிபொருளான டீசல் பயன்படுத்தப்படுவதானால் ஏராளமான காபனீரொட்சைட்டானது வெளியேற்றப்படுகின்றது.

இதனால் வளிமண்டலப்பகுதியில் $CO_2$ வின் அளவு அதிகரிக்க காலப் போக்கில் வெப்பநிலையின் அளவு அதிகரிக்கும் நிலை ஏற்படும். இந்த மின்சார உற்பத்தி நிலையம் இப் பிரதேசத்திலே அமைந்துள்ளது. காலப்போக்கில் இதற்கான மாற்று வழியினை அல்லது மாற்று சக்தி வளத்தினைக் கண்டுபிடிக்க வேண்டும்.


அடுத்து இப்பிரதேசத்தில் இன்னுமொரு சுற்றுப்புறச் சூழல் பிரச்சனை என்று நோக்கும் போது திண்மக்கழிவுகளைக் குறிப்பிடலாம். திண்மக்கழிவுகள் சரியான முறையில் சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும். இவை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு அருகில் பிரதேசத்திற்குரிய வாகனங்களிலேயே கொண்டு வந்து கொட்டி விட்டுச் செல்கின்றார்கள். இதனால் அவ் வீதியூடாகப் பிரயாணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர். அதனால் அண்மையில் அவ்விடத்தில் கழிவுகள் கொட்ட வேண்டாம் என அறிவுறுத்தல் பலகை ஒன்று பொருத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

மேலும் வலி தெற்குப் பிரதேசங்களில் உள்ள பல ஆண்டு காலத்துக்குரிய மரங்கள் மற்றும் பயன்தரு மரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெட்டப் படுவதுடன் மக்களும் தமது பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள அவற்றை வெட்டி மரக் காலைகளுக்கு விற்கின்றனர். குறிப்பிட்ட சில காலப்பகுதியில் எந்தவித சட்ட விதிகளையும் கருத்தில்கொள்ளாது மரங்கள் தறிக்கப்படுகின்றன. இந்த நிலை நீடித்தால் பயன் தரும் பலா, மா, தென்னை, பனை மரங்களும், மருத்துவ மூலிகை (வேம்பு, ஆல்) மரங்களும் இப் பிரதேசத்தினுள் இல்லாது போகும் நிலை ஏற்படும். மரங்கள் அழிக்கப் படுவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அனைவரும் அறிந்ததே. இதற்கான சட்டபூர்வ நடவடிக்கையினை உரிய பிரிவினர் எடுக்க வேண்டும்.

அடுத்து மண்ணின் மூடு படை அகற்றப்பட்டு வருகின்றது. இதனால் புழுதிப்புயல் ஏற்படுவதுடன் வளமான மேல் மண்படை மண்ணரிப்பின் காரணமாக இழக்கப் படுகின்றது.

இவ்வாறாக வலி தெற்குப் பிரதேசத்தினுள் நிலம் நீர் வளி சம்பந்தமாக பல்வேறு சுற்றுப்புறச் சூழல் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இவற்றை முற்றுமுழுதாகக் குறைக்க முடியாவிடினும் இந்நிலை மேலும் அதிகரிக்காமல் இருக்க உரிய பிரிவினர் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது. ■





# சூரிய வழிபாடு



சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
- எஸ். ரீ. குமரன் -

இந்து மதப் பிரிவுகளில் ஒன்றாக விளங்குவது சௌரம் ஆகும். இது சூரியனை முழுமுதல் தெய்வமாக வழிபடும் பிரிவு ஆகும். இவ்வழிபாடு மேலைத்தேச நாடுகளிலும் கீழைத்தேச நாடுகளிலும் மிகவும் தொன்மை யான காலத்தில் இருந்தே நிலவி வந்திருந்ததனை அவதானிக்க முடிகின்றது. அதாவது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமின்றிக் கிரேக்கம், எகிப்து, ரோம் போன்ற நாடுகளிலும் சிறப்பிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வழிபாட்டின் தொன்மையினை நோக்கும்போது சிந்து வெளிப் பிரதேசத்தில் கதிர்களைக் கொண்ட ஓர் இலட்சனை கண்டெடுக்கப் பட்டிருந்தது. இது சூரிய வழிபாட்டின் தொன்மையினை எடுத்துக் காட்டுகின்றது என அறிஞர்கள் கருதுகின்றனர்.

வேத இலக்கியத்தின்படி சூரியன் ஆண் தெய்வமாக வழிபடப்பட்டு வந்திருந்தான். சூரியன் விண்ணுலகத் தெய்வமாக போற்றப்படுகின்றான். சூரியன் புற இருளை மட்டுமன்றி அக இருளாகிய அறியாமை கவலை ஆகியவற்றையும் நீக்கவல்லவன் என வேதகாலத்தவர் நம்பினர். இருக்கு வேதமானது சூரியனுக்கு ஏழு விதமான காரணப்பெயர்களை வழங்கியிருந்தது. அவையாவன சவிதா - இருளை நீக்கி ஒளியுள்ள பகலைத் தருபவன், பகன் - உலகத்தை அன்பு ஒளியால் ஒளிரச் செய்பவன், பூஸா - உலகத்தை உரமடையச் செய்பவன், விஷ்ணு - ஒளியால் மூவுலகை அளப்பவன், கேசி - இரவில் கதிர்களாகிய ரோமத்தை மடக்குபவன் வைசுவதன் - உலகமக்கள் புகழ் பெறுபவன், பிருஷாகரி - செவ்வொளி உள்ள காளை போன்றவன்.

சூரியனுக்கு, உஷா, சூர்யா, விருஷாகரி எனும் மூன்று சக்திகள் உண்டெனவும் அவை காலை, நடுப்பகல், மாலை என்பவற்றை குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

இதிகாசங்களிலும் சூரிய மந்திரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சான்றாக இராமாயணத்தில் அகத்திய முனிவர் இராமனுக்கு "ஆதித்திய இருதயம்" எனும் அற்புத மந்திரத்தை உபதேசித்து இராவணனை வெல்லும் திறனைப் பெற்றுக்கொடுத்ததும் மகாபாரதத்தில் சூரியனை வழிபட்டு குந்திதேவி கர்ணனைப் பெற்றமையும் தர்மன் சூரிய மந்திரத்தை இயற்றி அட்சய பாத்திரத்தைப் பெற்றமையையும் குறிப்பிடலாம்.

புராணங்களிலும் சூரியன் பற்றிச் சிறப்பான செய்திகள் காணப்படுகின்றன. பிரம்ம கைவர்த்த புராணம், பிரம புராணம், ஸ்கந்த புராணம், வராக புராணம், மச்சய புராணம், அக்கினி புராணம், கருட புராணம், மார்க்கண்டேய புராணம் என்பனவும் சிறப்பித்து கூறுகின்றன.

தென்னகத்தில் சங்ககாலத்தில் இருந்து இன்றுவரைக்கும் சூரியவழிபாடு சிறப்பிடம் பெற்றுவருகின்றது. சான்றாக கலித்தொகை சிலப்பதிகாரம், திருமுறைகள் ஆகியவற்றையும் சோழர் பல்லவர்கால கோயில் வழிபாடுகளைக் குறிப்பிடலாம்.

சூரிய வழிபாட்டின் மகிமையை நோக்கும்பொழுது சூரியன் அருவம், உருவம் எனும் இருநிலைகளில் தனித்தனிக் கூட்டத்தாரால் வழிபடப்பட்டு வருகின்றான். நவக்கிரக வழிபாட்டில் நடுவே வைத்து போற்றப்படுகின்றான்.

சூரியன் உலகத்தின் உயிர் எனவும் வானத்தின் கண்ணெனவும் அவன் அண்டம் எங்கும் வெப்பத்தையும் ஒளியையும் பரப்புகின்றான் எனவும் இருளை நீக்கி மேகத்தை உண்டு பண்ணி மழையை வரவழைத்து உலகத்து உயிர்களை வாழ வைக்கின்றான் எனவும் உயிர்களுக்கு ஊக்கம் வழங்குபவன் எனவும் இருதய நோயினை நீக்க வல்லவன் எனவும் போற்றி வழிபடப்பட்டு வருவதனை அவதானிக்கலாம்.

மேலும் சூரியவழிபாட்டில் அட்டாற்சரம், சந்தியா வந்தனம், சூரிய பூஜை, சூரிய இயந்திரம் முதலியன முக்கிய இடம் பெறுகின்றன. எருக்கலம் இலையில் சூரிய கவசத்தை எழுதி கையிற் தரிப்பதால் சூரியனது அருள் கிடைக்குமென நம்புகின்றனர்.

சிவபெருமான் சிவசூரிய மூர்த்தி எனவும் விஷ்ணு சூரிய நாராயண மூர்த்தி எனவும் சிறப்பிக்கப்படுவது சைவ, வைணவ வழிபாட்டில் சூரிய வழிபாட்டுச் சிறப்பைக் காட்டுகின்றது. ஆகமங்கள் திருக்கோயில் அமைப்புப் பற்றிக் கூறும்பொழுது சூரியன் பற்றியும் குறிப்பிடுகின்றன. இலங்கை இந்தியா போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் சூரியன் பரிவார மூர்த்தியாக கிழக்கு பிரகாரத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளி உள்ளான். காலைப் பூசையின்போது முதலில் சூரியனுக்கு வழிபாடு நடத்தும் வழக்கமும் சில கோயில்களில் உண்டு. சூரியனுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஒரிசாவில் உள்ள கோரனாத் கோயில், தென் இந்தியாவில் உள்ள உள்ள சூரியனார் கோவில், கஷ்மீரில் உள்ள சூரியன் கோயில் என்பன குறிப்பிடத்தக்கதாகும்.

சூரியனை வழிபடுவதனால் இருதயநோய், கண் பார்வையின்மை, தலையிடி போன்ற நோய்கள் நீக்கம் பெறும் என கருதப்படுகின்றது. சூரியனுக்குரிய விரதமாக ஆவணி ஞாயிறு சிறப்பிடம் பெறுகின்றது. இதுதவிர வளர்பிறைக்காலத்து சப்தமி நாள் ஆகியன சூரியனுக்குரிய விரதங்களாகும். இன்றும் சூரியனை சிறப்பிப்பதற்காகவே தைப்பொங்கல் பண்டிகை, வருடப்பிறப்பு என்பன கொண்டாடப்படுகின்றன. ■



# யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலகம் மற்றும் கற்றல் வளநிலையம்

செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

இப் பாடசாலை நூலகம் நவீன கல்விக் கொள்கையின்படி "நூலகம் மற்றும் கற்றல் வளநிலையம்" எனும் கருத்து நிலைக்கு ஏற்பச் செயற்படுகின்றது. பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் போன்ற யாவர்க்கும் தனது நூலக சேவையை வழங்குகின்றது. பாடசாலை ஆரம்பித்த காலத்தில் (1894ம் ஆண்டு) நூலகம் எனும் எண்ணக்கருவும் உருவாகி வளர்ந்துள்ளது என்பது பாடசாலையில் கற்ற அறிஞர்கள். பெரியவர்களின் வாய்மொழித் தகவல் ஆகும்.

திரு. ச. கந்தையா. திரு. அ.கந்தையா. திரு.சு.சீனிவாசம், திரு.சி.தம்பையா போன்ற ஆசிரியர்கள் இவ் வித்தியாசாலையை ஆரம்பித்து கற்பிக்கும் வேளையில் கற்பித்தலுக்கு வேண்டிய ஏட்டுச்சுவடிகள், நிகண்டு, இலக்கணம், புராணம், இதிகாசம், இலக்கியம், ஆங்கிலப் புத்தகங்கள் போன்றன சிறு மரப் பெட்டகங்களில் வைத்துப் பூட்டப்பட்டு முகாமைக்கூடத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவற்றை இவ்வித்தியாசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாத்திரம் இக் கூடத்தில் வைத்துப் படித்து வந்தனர்.

1902ம் ஆண்டளவில் இவ்வித்தியாசாலை அரசினர் அங்கீகாரம் பெற்ற காலத்தில் பல நூல்களையும் உதவியாகப் பெற்று வளர்ந்தது. 1920-1956 காலப்பகுதியில் ஆங்கில மொழிக் கல்வி முறை காணப்பட்டதால் ஆங்கில நூல்களே பழைய நூற் சேர்க்கையில் காணப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். 1945ல் இலவசக்கல்வி, தமிழ் போதனை மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் தமிழ் கற்பிக்க வேண்டிய காரணத்தால் தமிழ் நூல்களும் சேர்க்கப்பட்டு நூல்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

1947ம் ஆண்டு இக் கல்லூரி பிரதம பிரிவுப் (first grade) பாடசாலையாக வித்தியா பகுதியினரால் வகுக்கப்பட்டமைக்கு புத்தகசாலை. வாசிகசாலை என்பன சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு புத்தகங்களைத் தாராளமாகக் கொண்ட புத்தக சேவையும் ஒரு காரணமாக அமைந்தது என அறியப்படுகின்றது. (தகவல் ஸ்கந்தா சஞ்சிகை 1953).

1960 காலப்பகுதியில் நூலகத்துக்கு என தனிக்கட்டிடம் உருவாக்கப்பட்டு நூலக தளபாடங்கள், வாசிப்பு மேசை நீளமான வாங்கு நூலகப் பதிவுப் புத்தகம் எனும் சிறப்பம்சங்களுடன் நூலக சேவை வளர்ந்து வந்தது. 1995 இடப் பெயர்வின் போது 6000க்கு மேற்பட்ட புத்தகங்கள் பழுதடைந்து கழிக்கப்பட்டன.

தற்போது 9890 புத்தகங்கள், ஆயிரத்துக்கு மேற்பட்ட சஞ்சிகைகளுடன் பாடநூல் வழிகாட்டிகள், இலவச பாடநூல்கள், புதிய கல்விக் கொள்கைக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், பத்திரிகை வெட்டுத்துண்டு கோவைகள்,

தவணைப் பரீட்சை வினாத்தாள் கோவைகள் . துண்டுப்பிரசுரங்கள் எனும் நூலக வளங்கள் காணப்படுகின்றன. அத்துடன் நூலக வளங்களை ஆவணப்படுத்தும் கணனியும் காணப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் சர்வதேச பாடசாலை நூலக வாரம், வாசிப்பு மாதம் என்பன பிரகடனப்படுத்தப்பட்டு பிள்ளைகள் வாசிப்பை ஊக்கப்படுத்தும் முகமாக வாசிப்புப் பாசறை நடத்துதல், கதை சொல்லல், விடுகதை சொல்லல், கட்டுரை எழுதுதல் அத்துடன் கையெழுத்து சஞ்சிகை ஆக்கங்களின் போட்டி வைத்தல் போன்ற பொதுஅறிவுப் பரீட்சை வைத்தல் போன்ற செயற்பாடுகள் நடாத்தப்பட்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. வாசகர் நூலக வளங்களைக் கண்டறியவும் வாசிப்பு விருப்பத்தைத் தூண்டவும் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாத கடைசி வாரத்தில் நூலகக் கண்காட்சியும் நடாத்தப்பட்டு வருகின்றது.

2007ம் ஆண்டு கல்வி அமைச்சின் பாடசாலை நூலகப் பெருவளர்ச்சி அலகு செயற்படுத்தும் பாடசாலை நூலக வளர்ச்சிப்படுத்தும் ஆண்டு வேலைத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு நூலக மேன்மை பேணப்படுகிறது.

சிறுவர் நூலகம் 2005 ம் ஆண்டு புதிதாக கட்டப்பட்ட நூலகத்தில் H.N.B அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்டு தனது நூலகப் பணியை ஆற்றி வருகிறது.

இதன் வளர்ச்சிக்கு பாடசாலை சமூகம்பல உதவிகளையும் வழங்கி வருகின்றது. இக் கல்லூரி நூலகம் தற்கால கல்விக் கொள்கையின் படி சமூகத்தின் கல்வி விருத்தி. சுய மேம்பாடு என்பவற்றுக்கு உதவும் வகையில் சிறந்த நூலக சேவையை வழங்கி வருகிறது. ■

---

**மகாத்மா காந்தியடிகள்**
**27-11-27 ஞாயிற்றுக்கிழமை**
**ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்**

## நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து

**"...இக்கல்விக் கழகம் உண்மையான கல்வியை உங்கட்கு அளிக்கு மாயின் அதுவே பெரிய பேறாகும். கல்வி கற்ப தோடு நில்லாது கற்றபடி ஒழுகவும் பழகிக்கொள்ள வேண்டும். மாணவரென்போர், தந்தை தாயர், ஆசிரியர் என்போர்க்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நல் வார்த்தைகளைக் தேவவாக்காகக் கொண்டு நடக்க வேண்டும். இளம் பருவத்தில் நாம் கற்றுப்பழகுவன ஒருபோதும் நம்மைவிட்டு நீங்கா. தாய் தந்தையர் ஆசிரியர் நமக்களிக்கும் புத்திமதிகள் கட்டளைகள் சிறுவயதினரா யிருக்கும்போது சிலபோது கசப்பாயிருக்கும். அவைகளை ஏற்காமலும் விடலாம். ஆனால் வாழ்க்கையில் மிக்க அநுபவம் படைத்த அவர்களுடைய வாக்குகள், உபதேசங்கள் எவ்வளவு உண்மையானவை என்பது வயது முதிர்ந்தபின்தான் தெரியவரும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் கடவுள் பக்தியுடையவர்களாக வாழ முயல வேண்டும். அப்போதுதான் உங்கள் மாட்டு நல்லொழுக்கம் பெரிய ஆபரணமாகக் கிடைக்கும். சத்தியத்தை ஓம்பிக் கடைப்பிடிக்க வல்லவராக வேண்டும். சத்தியத்தை மேற்கொள்பவர்களை எவ்வித தீங்குகளும் தீமைகளும் வந்தணுகமாட்டா.**

**கல்வி கற்பதோடு நில்லாது சமுதாயத்தின் முன்னேற்றத்தை நாடித் தொண்டுகள் செய்யவும் இளம் பருவத்திலேயே பழகிக்கொள்ள வேண்டும்..."**

**நன்றி: ஸ்கந்தா 110 ஆம் வருடமலர்.**



சிறுகதை

# தரிசனம்

ஆ. ரவீந்திரன்

தன்சைக்கிளை அனாயாசமாய் ஒடித்துத் திருப்பி அந்த ஒழுங்கையினுள் பிரவேசித்தான் பிரதீப். அந்த ஒழுங்கையி_ னுள்ளே இரண்டேயிரண்டு வீடுகள் மட்டுந்தான் இருந்தன. முதலாவதாக பொனனம்பலத் தாரின் வீடு. அதைத் தாணடி சற்றே வளைந்து அப்பால் சென்றால் பிரதீப்பின் வீடு அவ்வளவுதான். பொன்ன ம் பலம் குடும்பம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொழும்பு சென்று அங்கேயே குடியேறி விட்டிருந் ததால் வீடு வெறுமனே பூட்டிக் கிடந்தது. அதனால் இப்போ தைக்கு அந்த ஒழுங்கைக்குச் சக்கரவர்த்தி பிரதீப் மட்டுந்தான். சைக்கிள் ஒழுங்கையினுள் திரும்பியதுமே பொன்னம்பலத் தாரின் வீடு பிரதீப்பின் கண்களில் பட்டது. என்றுமில்லாதவாறு அவன் அந்த வீட்டை ஒருவித அர்த்தத்தோடு பார்த்தான். முதல் நாள் மாலை அம்மாவும் தரகர் தம்பியையாவும் பேசிக்கொண்டது அவன் நினைவுக்கு வந்தது.

"என்ன தம்பியையா அண்ணை, ஆட்டுத் தரகர், மாட்டுத் தரகர் எண்டு இப்ப வீட்டுத் தரகராயும் வந்திட் டீங்களே?" "ஓமோம், நெடுக ஒரே மாதிரி இருக்கேலுமே? தொழிலிலை ஒரு முன்னேற்றம் வேணுந்தானேயடி பிள்ளை?" "அது சரியண்ணை, உந்த வீட்டிலை ஆரைக்கொண்டந்து இருத்தப் போறீங்கள்? வடிவாய் விசாரிச்சு நல்ல சனமாய்க் கொண்டந்து இருத்துங்கோ அண்ணை. இந்தக் காலத்திலை..." அம்மா முடிப்பதற் குள்ளேயே தம்பியையா குறுக் கிட்டார். "நீ என்ன கதை கதைக்கிறாய்? இதுக்குள்ளை ஆரைக் கொண்டந்து இருத்த வேணுமெண்டு எனக்குத் தெரி யாதே? அது சோக்கான குடும்பம். ஆக்களும் கனக்க இல்லை, மூண்டுபேர் தான். தாயும் தகப் பனும் ஒரு பெடிச்சியுந்தான். அந்தாள் ஒரு சிங்கப்பூர் பெஞ்ச னியர். நல்லாயிருந்த குடும்பம். ஆற்றை கண் பட்டுதோ மனிசனும் மனிசியும் வருத்தக்காரராய்ப் போச்சிதுகள். அவள் பெட்டைதான் இப்ப அதுகளுக்கு எல்லாம். அவள் பாங்கிலை என்னவோ உத்தியோகம் பார்க் கிறாள். தங்கமான பிள்ளை. இந்தக் காலத்திலை அவளைப் போலை ஒரு பிள்ளையைக் காணுறது கஷ்டந்தான்."

பிரதீப்பின் மனம் இனம் புரியாத ஒருவித மகிழ்ச்சியில் துள்ளியது. "தம்பியையா புழுகினதைப் பார்த்தால்?..... சிங்கப்பூர் பென்சனரின்ரை பெட்டை யெண்டால் என்ன சும்மாவே? குளுகுளு எண்டு சிவப்பாய், வடிவாய் அந்த மாதிரித்தான் இருப்பாள். இந்த மாதிரி ஒரு வடிவான பெட்டை பக்கத்து வீட்டிலை இருந்தால்......" சினிமாவில் பார்த்த ஏதேதோ காட்சிகளெல்லாம் அவனின் மனத்திரையில் ஓடிக் கொண் டிருந்தன. "சா, எனக்கேன் இப்படியெல்லாம் யோசனை வருகிது? எங்கேயோ இருக்கிற ஆரோ ஒருத்திக்காக நான் ஏன் இவ்வளவு

ஏங்கவேணும், அவள் எப்பிடி இருந்தால் தான் எனக்கென்ன?"

பிரதீப்பின் சைக்கிள் மெல்லத் தவழ்ந்து பொன்னம் பலம் வீட்டைத் தாண்டி வலது புறமாய் வளைந்து திரும்பி அவனின் வீட்டு முற்றத்தில் வந்து நின்றது. சைக்கிளை முற்றத்தில் நிறுத்திவிட்டு அதிலிருந்த பார்சலை எடுத்துக்கொண்டு உள்ளே நடந்தான் பிரதீப். அம்மா மெல்ல எழுந்து வந்து அவனின் கைகளிலே இருந்த அந்தப் பார்சலை வாங்கியபடியே "இஞ்சை தம்பி, இந்தத் தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போயொருக்கால் உந்தப் பொன்னம்பலம் வீட்டுப்பக்க வேலியை அடைச்சுவிடுறியே? மட்டையெல்லாம் அங்கையுமிஞ்சையுமாய்க் கொட்டுண்டு கிடக்கிது......" என்றாள் அம்மா. "ஓமம்மா, அதையொருக்கால் அடைக்கத் தான் வேணும். எதுக்கும் நீங்கள் ஒருக்கால் அந்தப் பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு வாங்கோ" என்றவாறு தேநீரை வாங்கிக் கொண்டான் பிரதீப். அந்தச் சாதகமான பதிலைச் சற்றேதும் எதிர்பாராதது போல அம்மா பிரதீப்பைத் தன் விழிகளால் ஒருவிதமாய் அளந்த வாறு அப்பால் சென்றாள்.

பிரதீப் தேநீரை அருந்திய வாறு வெளியில் வந்து பொன்னம் பலத்தின் காணிப் பக்கமாக இருந்த அந்த வேலியை நோட்ட மிட்டான். அந்த வேலிக்கு அப்பால் பொன்னம் பலத்தாரின் அந்தப் பழைய காலத்து வீடு அமைதியாய் உறங்கிக்கொண் டிருந்தது. அவனின் கண்கள் நெடு நாளாய் மூடப்பட்டிருந்த அந்த ஜன்னல் மீது நிலைத்து நின்றன. "இனி அந்தப் பெட்டை வந்து உந்த ஜன்னலைத் திறந்து தூசி தட்டி, வடிவான ஒரு கேட்டின் போட்டு......" அவனின் சிந்தனை விரிந்து கொண்டு சென்றது. அந்த ஜன்னலின் பின்னே முழுநிலா ஒன்று முகங்காட்டுவது போலிருந்தது அவனுக்கு "என்ரை அறை ஜன்னலைத் திறந்துவிட்டால், இந்த ஜன்னலை, அதுக்குப் பின்னாலை நிற்கிறவளை வடி வாய்ப் பார்க்கலாம். ஒருவேளை அந்தப் பெட்டை கறுப்பாய் வடிவில்லாதவளாய் இருந்திட் டால்? வடிவென்ன வடிவு. நல்ல குடும்பம், நல்ல குணமான பிள்ளை, இதுக்கு மேலை என்ன வடிவு வேண்டிக்கிடக்கு?" பிரதீப்பின் மனத்தில் எண்ணற்ற கோலங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

"என்ன தம்பி யோசிச்சுக் கொண்டு நிக்கிறாய்?" என்றவாறு அம்மா அவன் முன்னே வந்து நின்றாள். "ஒண்டுமில்லையம்மா, இந்தக் கதியா லெல்லாம் வெட்ட வேணும், அதுதான் பார்த்துக் கொண்டு நிக்கிறன்" என்றவாறு தன் கையில் இருந்து தேநீர்க் கோப்பையை அம்மாவிடம் கொடுத்து விட்டு அம்மாவின் கையிலிருந்த கத்தியை வாங்கிக் கொண்டான்.

"முதல் இந்த முருக்கி லையும் பூவரசிலையும் கதியால் வெட்ட வேணும். வேலி வரிச்சு களை நல்லாய் இழுத்துக் கட்டி இடைக்கிடை கிடக்கிற பட்ட தடியளைப் புடுங்கிப்போட்டு நல்ல தடி போட்டால்தான் வேலி ஒழுங்காய் வரும். இந்தக் குறோட்டன்களெல்லாம் காடு மாதிரிக் கிடக்கிது. அதுகளையும் ஒருக்கால் கட்பண்ணி விட வேணும். பாத்தியளும் எல்லாம் கிளறுப்பட்டுத் தாறுமாறாய்க் கிடக்கிது. அதுகளையும் ஒருக்கால் வடிவாய்க் கட்டி வாய்க்கால் இழுக்கவேணும். வாசல் பக்கமாய் கிடக்கிற கல்லுகள் ஓடுகள் எல்லாத் தையும் பொறுக்கிக் கொண்டு போய் மதில் கரையே பின் மதில் கரையோட கொட்டிப்போட்டு எல்லாத்தையும் கூட்டிவிட வேணும். வீடு நல்லா யிருந்தால் தானே சனங்கள் எங்களை மதிக்கும். உங்காலை வீட்டுக்குக்



குடிவரப்போற சனங்களும் எங்கடை வீடுவாசலைப் பார்த்துத்தானே எங்களை மதிக்குங்கள்."

பிரதீப் தன் கையில் இருந்த கத்தியை ஓங்கிப் பூவரசங் கதியால் ஒன்றை வெட்டிச் சாய்த்தான். தொடர்ந்து அவன் கர வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கதியால்கள் ஒவ்வொன்றாய் சாய்ந்து கொண் டிருந்தன. தான் கதியால்களை வெட்டுகின்ற இலாவகத்தை யாரோ பார்த்து இரசிப்பது போல ஒரு பிரமை. மூடிக்கிடந்த அந்த ஜன்னலை பார்த்து ஒரு தடவை அவன் புன்ன கைத்துக்கொண் டான். "சீ, இது என்ன விசர்த்தனம்? இண்டைக்கு ஏன்தான் எனக்கு இப்படி யெல்லாம் யோசனை வருகி றதோ தெரியேல்லை. அறியாத தெரியாத ஆரோ ஒருத்தியை நினைச்சு ஏங்கிற அளவுக்கு நானென்ன அவ்வளவு குறைஞ்சு போனனே? என்னைப் போலை ஒரு சிமாட்டான இருபத்திரண்டு வயதுப் பெடிய னெண்டால் என்ன சும்மாவே?" கைகள் இயங்கிக் கொண்டிருக்க அவன் மனதில் ஏதேதோ எண்ணங்கள் வந்து போய்க்கொண்டிருந்தன.

மதிய உணவுக்காக பிரதீப் மேசையின் முன்னே அமர்ந்த போது நேரம் நண்பகல் ஒன்று முப்பது என்பதற்கு அறிகுறியாக கடிகாரம் கிணுகிணுத்து ஓய்ந்தது. பிரதீப் ஒவ்வொன்றாய் அம்மாவின் கைவண்ணங்களைச் சுவைத்துக் கொண்டிருந்தான். வெளியில் ஏதோ அரவம் கேட்கவே அம்மா எழுந்து வெளியே சென்று பார்த்துவிட்டு, "பொன்னம்பலம் வீட்டுக்கு ஆக்கள் வந்திட்டுதுகள் போலை யிருக்குது.'' என்றவாறு உள்ளே வந்து பிரதீப்பின் தட்டில் இரண்டாவது தடவையாகச் சோற்றைப் போட ஆரம்பித்தாள். 'போதும் போதும்' என்று தடுத்தான் பிரதீப். "ஏன் தம்பி, கறியேதும் பிடிக்கேல்லையே?" என்றவாறு அவன் முகத்தைப் பார்த்தாள் அம்மா. "சீச்சீ, கறியெல்லாம் நல்லாய்த் தானம்மா இருக்கிது......'' அம்மாவை ஒருவாறு சமாதானப் படுத்தியவாறே பிரதீப் தன் மதிய உணவை முடித்துக் கொண்டான்.

ஹோலுக்கு வந்து அன்றைய பத்திரிகையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். மாமரத்தின் கீழே கிடந்த கதிரையிலே வசதியாக அமர்ந்து பத்திரிகையைப் பிரித்தவாறே பொன்னம் பலம் வீட்டை நோட்ட மிட்டான். அங்கு ஆட்கள் வந்திருப்பதற்கு அறிகுறியாகப் பேச்சுக் குரல்கள் கேட்டன. ஆனால், வெளியில் யாரையும் காணவில்லை. "திலகா, இஞ்சை யொருக்கால் வா பிள்ளை." ஒரு ஆண் குரல் அழைத்தது. "உதுதான் அந்தப் பெண்சனியரோ? அப்பிடி யெண்டால் திலகாதான் அந்தப் பெட்டை யோ?" "பிரதீப்பின் சிந்தனை யைக் கலைப்பது போன்று அந்தப் பக்கமாக இருந்த கதவு திறந்து கொண்டது. சுமார் பதினெட்டு இருபது வயது மதிக்கத்தக்க மூன்று இளம் பெண்கள் வெளியே வந்து எதையோ தேடுவது போல அங்கு மிங்கும் பார்த்தனர். ஒருத்தி கிணற்றடியைக் காட்டி ஏதோ சொன்னாள். மற்ற இருவரும் கலகல என்று சிரித்தனர். பிரதீப்பின் கரங்கள் பத்திரிகை யைப் புரட்டிக் கொண்டிருந்தன. ஆனால், விழிகள் அங்குமிங்கும் சுழன்று கொண்டிருந்தன.

"பென்சனருக்கு ஒரு பெட்டை எண்டுதானே தம்பியையா சொன்னவர். இதென்ன மூண்டு வந்து நிக்குது? ஒருவேளை, ஆரும் சொந்தக்காரராய், அல்லது பிரண்சாய் இருக்குமோ, பிரதீப்பின் சிந்தனை கலைவதற் குள்ளேயே அந்த மூன்று பெண்களும் விரைவாய் உள்ளே சென்றுவிட்டனர்.

கதவு மட்டும் அப்படியே திறந்து கிடந்தது. அடுத்த காட்சியை ஆவலோடு எதிர்பார்ப்பது போல பிரதீப் அந்த வாசலையே பார்த்துக்கொண்டிருந்தான். பின் பத்திரிகை மீது தன் பார்வையைப் பதித்துக் கொண்டு அப்படியே இருந்தான்.

“என்னடா தம்பி, பேப்பர் வாசிக்கிறியே?” என்றவாறு தரகர் தம்பியையா அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்தார். “ஓம் மாமா, இப்பத்தான் பேப்பர் பார்க்கிறன்” என்றவாறு பேப்பரை மடித்துக்கொண்டு எழுந்து தம்பியையா நின்ற பக்கமாக நடந்தான் பிரதீப். “என்ன மாமா, ஆக்களைக் கொண்டுவந்து சேத் திட்டீங்கள் போலையிருக்கு” என்றான் அவன். “ஓமடா தம்பி, இண்டைக்கு நல்லநாள்தானே? அதோடை இதை விட்டால் அவள் பிள்ளைக்கு பிறகு நேரம் வராது. அவள் வேலைசெய்யிற பாங்கிலை கண்டபடி லீவெடுக்கேலாதாம். அதுதான்...” தம்பி யையா கூறி முடிப்பதற்குள்ளேயே “என்ன மாமா பாங்கிலை வேலை செய்யிறாவோ?” பிரதீப் சற்று வியப்போடு அவரை நிமிர்ந்து பார்த்தான். தம்பியையா ஏதோ சொல்ல வாயெடுக்கவும் அந்தப் பெண் மெதுவாய்ப் படியிறங்கி அந்தப் பக்கமாக வரவும் சரியாயிருந்தது. தம்பியையா தலையைத் திருப்பி அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு “இஞ்சை வா பிள்ளை. இதுதான் நான் சொன்ன தம்பி, உங்களுக்கு என்ன உதவி வேணுமெண்டாலும் நீங்கள் இவையிட்டைக் கேக்கலாம்.” பிரதீப் ஒரு தடவை தன் விழிகளை உயர்த்தி அவளைப் பார்த்தான். விபரிக்க முடியாத ஏதோ ஒரு உணர்வு தன் இதயத்தில் மெல்ல மெல்லப் பரவுவதை அவனால் உணர முடிந்தது. அந்தப் பெண்ணின் கம்பீரத்தின் முன் தான் வலுவிழந்து நலிந்து, தூசாய்த் துரும்பாய்ப் போய்விட்டது போலிருந்தது அவனுக்கு. அவள் அவனைப் பார்த்து சிநேக பூர்வமாய்ப் புன்னகைத்தாள். அமைதியான அந்தச்சிரிப்பு. எதையும் ஊடுருவிப் பார்க்கின்ற அந்தப் பார்வை? பிரதீப் தன் கைகளிலே இருந்த பத்திரிகையை சுருட்டி அப்படியும் இப்படியும் மடித்துக்கொண்டிருந்தான். அதுவரை இல்லாத ஏதோ ஒன்று தனக்கு நேர்ந்துவிட்டது போலிருந்தது அவனுக்கு. உள்ளேயிருந்து ‘திலகா,’ என்று அழைப்பு வந்தது. அவள் ‘ஒருநிமிஷம்’ என்றவாறு உள்ளே ஓடினாள். “சரி தம்பி, நேரமாகிறது. நானும் நடக்கப் போறேன்”என்றவாறு தம்பியையா வும் புறப்பட ஆயத்தமானார்.

பிரதீப் மெல்ல நடந்து வீட்டினுள் வந்தான். சந்தை கலைந்து சந்தடியெல்லாம் அடங்கிவிட்டது போலிருந்தது அவனுக்கு. அந்தத் திலகாவை நினைத்தபோது அவனுக்கு ஒருவித மலைப்பாயிருந்தது. “என்னை விட ஒரு நாலைஞ்சு வயது கூட இருக்கும். அழகு, நல்ல அழகு, ஆனாலும் அதைத் தனிய அழகெண்டு மட்டும் சொல்லேலாது. அதுக்கும் அங்காலை ஏதோ ஒண்டு. அந்தப் பார்வையிலைதான் எவ்வளவு நேர்மை? எவ்வளவு கம்பீரம்? அந்தக் கண்கள் மனக்கண்ணில் ஆழமாய்ப் பதிந்து விட்டது போலிருந்தது. சிரிக்கிறபோது கூட எவ்வளவு நிதானம்? அதற்கு மேல் அவனால் எதையும் சிந்திக்க முடியவில்லை. கட்டி லிலே ‘தொப்’ பென்று விழுந்து கண்களை மூடிக் கொண்டான்.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. பிரதீப் கட்டிலை விட்டெழுந்து போய்க் கதவைத் திறந்தான். அங்கே, அங்கே அந்தத் திலகாதான் நின்று கொண்டிருந்தாள். அதே சிரிப்பு, அதே கம்பீரமான பார்வை. காரணமில்லாத ஒரு குற்ற உணர்வு அவனைப் பற்றிக் கொள்ள, வார்த்தைகள் வர மறுத்தன. “தம்பி, அம்மா நிக்கிறாவோ?” அவள்தான் பேசினாள். ‘தம்பி....’ ‘தம்பி....’ அதுவரை அவன் உள்ளத்தில் இறுகிப் போய்க் கிடந்த ஏதோ ஒன்று மெல்லக் கரைவது போலிருந்தது அவனுக்கு. “ஓமோம், வாங்கோ........ உள்ளுக்கு வாங்கோ. அம்மா படுத்திருக்கிறா” என்றவாறு ஒருவித பதற்றத்தோடு உள்ளே திரும்பியவனை அவள் இடைமறித்தாள். “வேண்டாம் தம்பி, இப்ப அவவை எழுப்பவேண்டாம் நான் பிறகு வந்து சந்திக்கிறேன். இந்தாங்கோ, இதைப் பிடியுங்கோ. நாங்கள் இண்டைக்குப் புது வீட்டிலை பொங்கினாங்கள்” என்றவாறு ஒரு மூடிய பாத்தி ரத்தை அவன் முன்னே நீட்டினாள் அவள். பிரதீப் அதைப் பௌவியமாய் வாங்கியவாறே அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். தொண்டையிலே ஏதோ வந்து அடைத்துக் கொள்ள, அவன் கண்கள் அவனையும் மீறி மெல்லப் பனித்தன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு விமானக் குண்டுவீச்சிலே அகப்பட்டு அநியாயமாய்ச் செத்துப்போன தன் அக்கா திவ்வியா மறு பிறவியெடுத்து வந்து நிற்பது போலிருந்தது அவனுக்கு . அந்தப் பார்வை, அந்தச் சிரிப்பு, இப்போது அவனுக்கு அவற்றின் அர்த்தம் புரிந்தது. “அக்கா, அக்கா” அந்த வார்த்தையை ஒவ்வொரு தடவையும் உச்சரிக்கும்போதும் அவன் இதயம் இரும்பாய்க் கனத்தது. “அக்கா, உனக்கு என்னிலை எவ்வளவு பாசம்? தம்பி, தம்பி எண்டு ஒருநாளைக்கு எத்தினை தரம் கூப்பிடுவாய்?, தட்டித் தவறி ஒருநாளெண்டாலும் நீ என்ரை பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதாய் எனக்கு ஞாபகமேயில்லையே?” தனக் கேயிருந்த அந்த ஒரேயொரு சகோதர உறவைக்கூட இரக்க மில்லாமல் பறித்துக் கொண்ட விதியின் கொடுமையை நினைத்த போது அவனுக்கு ‘ஓ.....’ வென்று கதறவேண்டும் போலிருந்தது. வாய் மட்டும் மௌனித்திருக்க அவன் மனம் சிறு குழந்தையைப் போல விசித்து விசித்து அழ ஆரம்பித்தது. அவன் கைகளிலே இருந்த அந்த மூடிய பாத்திரத்தின் மீது கண்ணீர் துளிகள் விழுந்து சிதறிக்கொண்டிருந்தன. ■

திரு. ஆ. இரவீந்திரன் அவர்கள் விழிப்புல வலுவிழந்தவர். ஆயினும் கல்வி நிலையில் முன்னேறி முதுகல்விமாணி பட்டம் பெற்றவர். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான இவர் விசேடகல்வி தொடர்பான நூலொன்றினையும் ஆக்கியுள்ளார். வாழ்வகத்தின் தலைவராகச் செயற்படும் இவர் சிறுகதைகள் மட்டுமல்ல கவிதை, கட்டுரை, விமர்சனம் என்பவற்றையும் எழுதி வருகிறார்.

**வலிகாமம் தெற்கின் வளம் வளர்ப்போம்!**

*இராசவள்ளி மரவள்ளி மோதகவள்ளி கறனை நெல்*
*அவரை கோவா போஞ்சி கரட் பீற்றூட் லீக்ஸ் கீரையுடன்*
*திராட்சை வாழை கத்தரி புகையிலை வெள்ளரி*
*வத்தகை புடோல் எள்ளும் மிளகாய் பயறு வெங்காயம்*
*வெற்றிலை கச்சான் உழுந்து எலுமிச்சையுமே*
*பராமரிக்கின்ற விதம் எல்லாம் பெரிதும் அறிந்த கமக்காரர்*
*மண்ணினை நன்கு பண்படுத்தி பயிரினை வளர்த்து எல்லோர்க்கும்*
*தராதர மாகத் தருகின்ற வளங்கள் மிகுந்த வலி காமத்*
*தெற்கின் பெருமை தனை நாமும் தெரிந்து அதனை வளர்ப்போமே!*

**– நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.**

# ஞானவிலாசம்

இப்பகுதியில் ஏற்கனவே வெளிவந்த இலக்கியப்பகுதிகள், வாசகர்களுக்கு மீள அறிமுகப்படுத்துமுகமாக வெளிவரவுள்ளது. இதற்கு நீங்களும் எழுதி அனுப்பலாம். நீங்கள் எடுக்கும் பகுதி எதிலிருந்து எடுக்கப்பட்டது என்ற தகவலுடன் தரலாம். இம்முறை அகவிழி சஞ்சிகையில் இடம்பெற்ற கட்டுரைகள் உலக புத்தக தின நோக்கங்களுக்கும் வாசிப்பு மேம்பாட்டுக்கும் துணை செய்வனவாக இருப்பதால் மறுபிரசுரிக்கப்படுகிறது. இவற்றை ஆக்கியோருக்கும் அகவிழி குழுவினருக்கும் நன்றிகள்.

## அறிவுசார் சமூகமும் அறிவுசார் பொருளாதாரமும்

மனித குல வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு ஒரு பெரும் மாறுதல் யுகமாக கருதப்பட்டது. கைத்தொழில் புரட்சி அதற்கு காரணமாக இருந்ததுடன் அது கைத்தொழில் யுகம் எனவும் அழைக்கப்பட்டது. அடுத்து வந்த 20ஆம் நூற்றாண்டு கணினியுகம் என அழைக் கப்பட்டு பெரும் வியப்பினை மனித சமூகத்திற்கு அது அளித்தது. கணினி யுகத்தில் மனித குலம் பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப தகவல் அறிவு, 21ஆம் நூற்றாண்டில் மனித சமூகத்தினை அறிவு யுகத்திற்கு (Knowledge era) இட்டுச் சென்றது. எனவே 21ஆம் நூற்றாண்டுச் சமூகம் "அறிவுசார் சமூகம்" என அழைக்கப் படும். (The 21st century belongs to the Knowledge era)

நிகழ்ந்து வந்த யுக மாறுதல்களில் சமூகத்தின் இயக்க விசையாக பல்வேறு சக்திகள் அவ்வக்காலங்களில் கோலோச்சி வந்திருப்பதனை வரலாறு காட்டுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் சமூகத்தில் அல்லது பொருளாதாரங்களில் "செல்வமே" (Wealth) ஆட்சி செலுத்தியது. 20 ஆம் நூற்றாண்டில் அதன் இடத்தினை கணினி பிடித்தது. 21ஆம் நூற்றாண்டில் "அறிவு" அந்த இடத்தினை பிடித்துள்ளது. அறிவினை பெற்றுக்கொள்ளுதல். அறிவினைப் பாதுகாத்தல். அறிவி னை பிரயோகித்தல் என்பன 21ஆம் நூற்றாண்டின் தாரக மந்திர மாகும். (acquisition possession, and application of knowledge and the most important resources) 21ஆம் நூற்றாண்டு சமூகம் அறிவுச் சொத்துடமை சமூகமாகும். அறிவுச் சொத்தினை (Intellectual Property) விற்கும் உரிமை கோரும் வாங்கும் பாதுகாக்கும் சட்டப் பாதுகாப்பு கேட்கும் (Royalty) ஒரு சமூகமாக 21ஆம் நூற்றாண்டு மாறியுள்ளது. அறிவு, என்பது ஒன்றும் புதிதானதல்லதான். ஆனால் சமூகம் முழுமையும் அறிவுடைய சமூகமா கவும், சமூகத்தின் மூலதனம் அறிவா கவும் கொள்ளப்படும் ஒரு யுகமாற்றத்தின் வாசற்படியில் 21ஆம் நூற்றாண்டு சமூகம் வந்துள்ளது.

அறிவு என்பது இங்கு வெறுமனே கடந்த நூற்றாண்டில் கருதப்பட்ட பொருளில் அது கருதப்படவில்லை. உற்பத்தி சாதனங்களும் செல்வமும் கடந்த காலத்தில் முதன்மையான வளமா கக் கருதப்பட்டது. 21ஆம் நூற்றாண்டில் அதனிடத்தினை அறிவு கவர்ந்துள்ளது. அறிவு ஒரு சொத்தாக, வளமாக கருதப்படும் நூற்றாண்டாக 21ஆம் நூற்றாண்டு கருதப்படுகின்றது. இத னால் அறிவு என்பது சமூகங்கள் அறிவுச் சமூகங்களாக (Knowledge Society) மாற வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

## அறிவுச் சமூகத்தின் முக்கியத்துவம்

மனித குல வரலாற்றில் அறிவானது பல்வேறு வழிகளில் பல் வேறு மூலகங் களில் இருந்து பெறப்பட்டு வந்துள்ளதனை நாம் அறிவோம். அயன் ஸ்டீன் சொன்னது போல் "நாம் நமது முன்னோர்களின் தோள்களின் மீது நின்று கொண்டே இன்றைய உலகினைப் பார்க் கின்றோம். எனது அறிவு என்பது முன்னைய அனுபவங்களினதும் திரட்சியே. இது பொதுவான ஒரு உண்மை. ஆனால் அறிவினை கல்வி மூலம் மேம்படுத்தலாம் என்பதும் நாம் அறிந்த உண்மை. (Its is acquired through education) அதாவது அறிவினை வழங் கும் பிரதான மூலகம் கல்வியாகும். (Knowledge mainly associated with education). இந்த அறிவானது கற்றலின் மூலம் பெறப்படுகின்றது. இதனை வழங்குவோர் தத்துவ ஆசிரியர்கள், ஆசிரியர்கள், ஞானிகள், விரிவுரையா ளர்கள் எனப் பலதரப்பட்டோராவர். ஆனால் அறிவானது இவ் ஒழுங்கமைக் கப்பட்ட முறைகளுக் கப்பால் வேறு பல மூலகங்களிலி ருந்தும் பல்கிப் பெருகிப் பிரவாக மெடுக்கின்றது. இந்த நூற்றாண்டில் இது அறிவின் பிரதான நுழை வாயிலாகவும் மாறியுள்ளது. மேலும் அறிவு என்பது வெறு மனே கல்வி என்னும் மூலத் தினால் பெறப் படலாம் என்ற நம்பிக்கையி னையும் அது மாற்றியுள்ளது. (Knowledge has many forms and available at many places) கல்வி நிறுவ னங்கள் நூல் நிலையங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத் தரங்குகள், பத்திரி கைகள், கல்வி சார் நிறுவனங் கள், இன்டநெற் வலைப்பின்னல்கள், கிராமங் களில் காணப்படுகின்ற நாட்டுப் பாடல்கள் புராணக் கதைகள் என்பவற்றில் அறிவானது பொதிந்துள்ளது. இவ் வறிவினை தகவல் மூலமும் (information) நுண்மதி மூலமும் (intelligence) அனுபவங்கள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். அறிவானது வாழ்வதற்கு, வேலை ஒன்றினைப் பெறுவதற்கு அறிவதற்கு என்ற வாறான சிந்தனை கடந்த நூற்றாண் டில் காணப் பட்டது. 21ஆம் நூற்றாண் டில் அதன் இலக்க ணம் அகல் விரி பண்பு கொண்ட தாக மாற்றப் பட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் அறிவு சார் சமூகம் அல்லது அறிவு சார் பொருளாதாரமொன்றின் இலக்கணம் யாதெனில் அறிவே உற்பத் தியின் பிரதான மூல வளம் (In the 21st centuary knowledge is the primary production resource). அறிவு ஒரு பிரதான மூலவளம் மட்டுமன்றி, அதுவே செல்வத்தினை உற்பத்தி செய்வதற்கான பிரதான கருவியுமாகும். இக் கருவியானது சமூக அசைவியக்கத் தினையும் சமூக நிலை மாற்றத் தினையும் ஏற்படுத் துவதற்கான உந்து விசையுமாகும். எனவே 21ஆம் நூற்றாண்டில் அறிவு என்பது கடந்த நூற்றாண்டில் கொள்ளப் பட்ட அர்த்தத்தில் கொள்ளப்படாது. அறிவுசார் சமூ கம் அல்லது அறிவு சார் பொருளாதாரமொன் றின் இலக்கணம் இதுவே.

**A.C.ஜோர்ஜ்**
*சேவைக்கால ஆலோசகர்,*
*யாழ்ப்பாணக் கல்வி வலயம்.*

("அகவிழி" ஜுன் 2005இதழிலிருந்து...)

■

திருமதி. த. செல்லத்தம்பி
வவுனியா புளியங்குளம்.
இந்துக்கல்லூரி

# வாசிப்பை மேம்படுத்துவதில் ஆசிரிய நூலகரின் பங்கு

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். ஆம் வாசிப்பதற்கு நூலகம் தேவை. நூலகத்தை நேசிக்கும் மனத்தை ஏற்படுத்த எப்படி நல்ல நூல்கள் தேவையோ அதைவிட ஆசிரிய நூலகர் தேவை என்பது மிக முக்கியமானது. ஆசிரிய நூலகர் என்பது ஒரு நவீனத்துவ எண்ணக்கரு என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில் கற்பித்தல் தொழிலுடையவரே ஆசிரியர். கற்பிக்கும் ஒருவருக்குத்தான் கற்பித்தல் தகுதி அதாவது கற்க வைக்கும் முறைகள், கற்றலைத் தூண்டும் தூண்டற் திறன், வளம் என்பன கைவரும் என்பதன் வினையடியாக வந்ததே. ஆசிரிய நூலகர் எனும் சொல்லாகும். இது ஒரு வளமுடைய எண்ணத்தோடு பின்னி நிற்கும் எண்ணத்தைப் புலப்படுத்தி நிற்கும் சொல்லுமாகும்.

கற்பித்தலுக்கான தந்திரோபாயங்கள் கற்பிக்கும் பாடத்திட்டம் பற்றிய அறிவும், தகவல் பெற்றுக் கொள்ளும் முறைகள் என்பன கல்வித்துறையிலும் நிர்வாகத் துறையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவைப் பெறத்தகும் ஏதுக்களாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. இதனால் ஆசிரிய நூலகர் என்பவரே நூலகத்தை இலக்குத் தவறாது நடத்தவல்லவராகின்றார். கற்றல் என்றதும் ஒருவர் எதனைக் கற்பது என்று கேள்வி எழுவது இயல்பு. கற்கும் நூல்களைத் தெரிவு செய்து கற்பதால் பூரணம் அடையப் பெறத்தக்க கல்வி ஞானத்தைத் தரவல்ல நூல்களைத் தெரிவு செய்து கற்கச் செய்தல் ஒரு கற்பித்தல் முகாமையாகலாம். இத்தகைய ஒரு பங்களிப்பை ஆசிரிய நூலகரே வழிவழியாக வழிகாட்டும் வல்லமை அல்லது எண்ணக்கரு உடையவராகிறார்.

பாடத்திட்டங்களுள் உள்ளடங்கிய வகையிலான தகவல் எழுத்தறிவு, நிர்வகித்தல், வளங்கள் பற்றிய உள்ளார்ந்த அறிவைப் பெற்றிருத்தல் ஆசிரியருக்கு இலகுவானது. பாடத்திட்டங்கள் அதற்கான வளங்களை வழங்கும் வலுவுடையன. ஆசிரிய நூலகர் கற்பித்தல் செயற்றிறன் போலவே நூல்கள் பற்றிய அறிவினையும் அவற்றை விமர்சிக்கும் ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு எல்லாவகையான தகவல்களையும் கண்டறிந்து மதிப்பிடவும் தெரிந்து கொண்டால்தான் சுயமான கற்கையாளர்களை உருவாக்குதலுக்கு உதவியாக இருக்க முடியும்.

இங்கு தகவல் பற்றிய தெளிவும் முக்கியமாகின்றது. அதனால் தகவல்களைக் கண்டறிவதும், கண்டறிந்தவற்றைப் பகுத்துப் பிரித்துப் பயனுடையதாக்கும் திறன் என்பவற்றை எல்லாம் ஆசிரிய நூலகர் கொண்டிருப்பது அவசியமாகும். இதனால் மாணவரின் அறிவு நிலையை இனங்காணவும் மாணவரின் தன்மை நிலையினையும் புரிந்து கொண்டு



செயற்பட ஏதுவாகும். இது ஆசிரிய நூலகர்களுக்கான ஒரு துணைக் கற்பித்தல் முறையாகும். இத்தகு கற்பித்தல் முறை மாணவரையோ, நூல்கள் படிப்பவரையோ சிறந்த ஒரு வாசகராக்கி அதன்மூலம் அவரது வளவிருத்தியை ஏற்படுத்திவிட இலகுவாகிவிடும்...

அத்தோடு மாணவர் ஆக்கங்கள் பருவ இதழ்கள் புதினப் பத்திரிகைகள், குழந்தைகட்கான அறிவியல் வெளியீடுகள் என்பவற்றைக் கொண்டதாகவும் நூலகம் இருத்தல் அவசியமாகும்...

ஆசிரிய நூலகர்கள் பாடசாலையின் தேவைகளோடும் பாடத்திட்டத் திற்குள்ளேயானதுமான நூலகத்தை மட்டும் கொண்டிருக்க விடமாட்டார்கள். ஏனெனில் ஆசிரியராக இருக்கும் ஒருவரின் நூலகத் தேவையின் ஆழம் நுகரும்போது அதிகரிக்குமேயன்றி நிறைவுறுவது குறைவானதேயாம். இலக்கிய நாட்டத்தில் ஈடுபடும் ஒருவரை எடுத்துக்கொண்டால் இலக்கிய உலகின் புகழ் பூத்த ஒருவரது படைப்பு எல்லைகளைக் கடந்து காலங்களை வென்று நிற்பதைக் காணும்போது அதனைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவே இருக்கும். இதேபோலவே கலையியல் மாணவர் விஞ்ஞானவியல் மாணவருக்கான நிலையும் இருக்கும். இதனால் இந்நூலகத்தில் காலத்தால் முந்தியது முதல் பிந்தியது எனவரும் அனைத்து நூல்களையும் நூலகம் கொண்டு தேவையை ஈடு செய்யத்தக்கதான நிலையில் வைத்திருந்தால் அதுவே நூலகத்தின் நிறைவும் வாசிப்பின் நலனும் ஆகும்.

நூலகம் என்பது ஒரு சஞ்சீவினி. நூலகம் ஒரு களஞ்சியம். நூலகம் ஒரு மருத்துவ நிலையம். இப்படிப் பலவாறாக விதந்தோதத் தகுந்ததொரு நூலகத்தில் ஆசிரிய நூலகரின் பங்களிப்பும் நிறைவானதாகவும் ஒரு நூல் வழங்கும் வழங்கல் போன்றதாகவும் அமையுமேயானால், நூலக பாவனையும் நூலக நடைமுறையும் வளர்ச்சி காணும். ஆசிரிய நூலகரும் தனது சேவையின் தேவை கருதிய நிலையில் ஒரு உன்னதமான மனித விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பாரிய பணியில் வெற்றி பெற்று வாசிப்பினது நன்மையையும் அறுவடையினையும் வாசிப்பவன் விரைவாகப் பெற முடியும். வாசிப்பும் நூலகமும் மனிதனைப் பூரணமடைய வைப்பதன் வெற்றியும் இதுவேயாம். ■



**நீங்கள் அனுப்பிய வெள்ளிமலை 02 வாசித்தேன். திரு. ஶ்ரீதரன் எழுதிய கட்டுரையும் மற்றும் விடய தானங்களும் ஆக்கபூர்வமானவை பெறுமதிமிக்கவை.**
**கரவெட்டி.** குப்பிளான். ஐ. சண்முகன்

## அகவரிகள்

வெள்ளிமலை சஞ்சிகையின் வரவுகண்டு மனம் மகிழ்கின்றேன். காலத்தின் தேவை கருதி சுன்னாகம் பொது நூலகத்தின் நற்சேவையாக இதனை வளர்த்தெடுத்தல் சமுதாயத்தில் பொறுப்பாகும். இலைமறை காய்களென மறைந்திருக்கும் பிரதேச ஆற்றல்களை வெள்ளிமலைக் குன்றேற்றி ஒளிவீச வைக்கப் பாடுபடும் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இலக்கிய வானில் ஏற்கனவே அறிமுகமானவர்களுடன் வளரும் புதியவர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் தந்து வளர்த்தெடுப்பீர்களென நம்புகின்றேன்.
கந்தரோடை.
மு. சின்னராசா

# வாசிப்பும் சமூக மேம்பாடும்

ஸ்ரீ. அருளானந்தம்
முதுநிலை உதவி நூலகர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஆய்வுக்கட்டுரைகள், அன்றாடச் செய்தி இதழ்கள், சுவரொட்டிகள், பொது அறிவுப் போட்டிகள், மேடைச் சொற்பொழிவுகள் என்று கல்விசார் நடவடிக் கைகள் அனைத்திலும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு வாசகம் **"வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்"** என்பதாகும். இந்த வாசகம் ஐந்து நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தது என்பதும் மனித சமூகத்தை நீண்டகாலம் ஆக்கிரமித்திருந்ததும் விவசாயத்தை முதன்மையாகவும் நிலத்தை மூலவளமாகவும் கொண்டதுமான நிலபிரபுத்துவ சமூக அமைப்பு நிலைகொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் தான் தோற்றம் பெற்றது என்பதும் ஆச்சரியத்துக்குரியதொன்று. இந்த வாசகமும் "அறிவே ஆற்றல்" என்ற புகழ் பெற்ற வாசகமும் 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ மேதை பிரான்ஸில் பேகனுக்குரியவை. இரண்டு வாசகங்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு.

உலகின் அதிவளர்ச்சியுற்ற சமூகங்களுக்கிணையான எழுத்தறிவு வீதத்தைக் கொண்டவர்களும் மிக நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தை உடையவர்களுமான ஈழத் தமிழ்ச் சமூகத்தில் மேற்குறிப்பிட்ட வாசகங்களினது முழுமையான அர்த்தம் 21ம் நூற்றாண்டுக்குள் நுழைந்த பின்னர்தான் உணரப்பட்டிருக்கிறது. இதனையே 2003இல் தொடங்கப்பட்ட பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்களின் தோற்றம், நூலக வாரங்கள், தேசிய நூலக ஆவணவாக்க சபையினால் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வாசிப்பை ஊக்குவிப்பதற்கான சகல வழிமுறைகளும் முடுக்கிவிடப்பட்டிருத்தல் போன்ற தேசிய ரீதியிலான நிறுவனமயப்படுத்தப்பட்ட திட்டங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. தராதரப் பத்திரங்களைக் குவிக்கும் கல்விச் சமூகமாக மட்டும்தான் நாம் இருக்கின்றோம், அறிவுடைய சமூகமாக இல்லை என்ற கசப்பான யதார்த்தம் அறிவுக்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு எம்மை இட்டுச் சென்றிருக்கிறது.

## அறிவே ஆற்றல்

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் அறிவு எனச் சொல்லப் படுகின்றது. பலம் என்பது இயற்கை வளத்தாலோ, பணபலத்தாலோ அளவிடப் படுவதில்லை. உலகின் வளர்ச்சியுற்ற சமூகங்கள் அனைத்தும் அறிவு என்ற அத்திவாரத்தின் மீதே வளர்ச்சி என்ற கட்டிடத்தை எழுப்பியுள்ளன. அறிவுக்கு அடிப்படையாக இருப்பது வாசிப்பு.

கண்டவை, கேட்டவை, படித்தவை, உணர்ந்தவை எனப் புலன்களால் பெற்ற அறிவைப் புலனுக்குப் புறம்பாக உள்ள பகுத்தறிவின் துணைகொண்டு அலசி ஆராய்ந்து, ஒப்புநோக்கி, உண்மை கண்டு, புதிய கருத்துக்களை உருவாக்கி, அவற்றை மேலும் ஆய்வு செய்து, சரிபார்த்து, கோட்பாடு கண்டு,



சட்டமாக்கி உலகை வழிடத்தும் ஆற்றலைப் பெறுவதற்கு அறிவுசார் சிந்தனை அவசியமாகும். அறிவுசார் சிந்தனையை உருவாக்குவதற்குப் பரந்த வாசிப்புத் திறன் முக்கியம். தான் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்து தன்னை விடுவிப்பதற்கு உதவுகின்ற தனித்துவமான, தனக்குத்தானே நீதிபதியாகக் கூடிய வல்லமையை அளிப்பது இந்தப் பரந்துபட்ட வாசிப்புத் திறனே. வாசிப்பதன் மூலமோ, கேள்வி ஞானத்தாலோ நாம் பெறும் தகவலை தகவலாகவோ வைத்திருக்காது அறிந்து கொண்டவற்றை ஆய்வுக்குட்படுத்தி ஆராய்ந்து செல்லும் போதுதான் "அறிவு" எமக்குள் ஊறும். இதையே "கற்றனைத்து ஊறும் அறிவு" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" ஆகிய குறள்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. கல்லுதல் என்ற பொருள் கொண்ட கல்வி என்பதும் இதையே உணர்த்தி நிற்கிறது.

தனிமனித வளர்ச்சிக்கு அறிவு எந்தளவுக்கு அடிப்படையாக உள்ளதோ சமூக வளர்ச்சிக்கும் அடிப்படை அறிவே. இந்த அறிவுங்கூட தன்னை வளர்ப்பதை மட்டும் கருத்தில் கொள்ளாது தனது சமூகத்தையும் வளர்க்கும் உணர்வைத் தரும்போது சமூக மேம்பாடு என்பது சாத்தியமாகும்.

## கல்வியும் அறிவும்

"ஒரு மனிதன் கற்பது எவ்வாறு எனக் கற்றுக்கொள்வதே கல்வியின் இலக்காகும். கற்றுக் கொள்வதற்கான ஆற்றலானது அறிவை விட முக்கியமானதாகும். அறிவு, கால்திற்கொவ்வாததாகப் போனாலும் கற்கும் திறனானது அனைத்து அறிவுகளுக்குமான திறவுகோலாக விளங்குகிறது". என்ற கூற்று அறிவைவிட கல்வி முக்கியம் என்ற கருத்து நிலையைத் தருகின்றது. அப்படியாயின் பாடசாலைகள் ஏன் அறிவுக்கான திறவுகோலாகச் செயற்பட முடியாதுள்ளது என்ற வினா எழுவதும் இங்கு தவிர்க்க முடியாததாகிறது.

கற்றல் என்பது வாழ்க்கையினின்றும் எழும் ஒன்று. வாழ்க்கை அனுபங்களின் ஒரு பகுதியை மட்டுமே பாடசாலைகள் மனிதனுக்கு வழங்க முடியும். தொழில் நோக்கம், அறிவு நோக்கம், ஒருமைப்பாடுடைய ஆளுமையை வளர்த்தெடுக்கும் இசைந்த வளர்ச்சி நோக்கம், ஒழுக்க நோக்கம், ஓய்வு நோக்கம், சமூக நோக்கம் எனப் பலதரப்பட்ட நோக்கங்களையும் சந்தித்திருக்கும் இன்றைய கல்வி முறையானது செயற்பாட்டளவில் செய்துள்ள சாதனைகள் மிக மிக குறைவு. "மனிதனை மனிதனாக உருவாக்குவதே உண்மைக் கல்வியின் நோக்கம்" என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனை. "உடல் உள்ளம் ஆன்மா என்பவற்றின் சிறப்புமிக்க பண்புகளை வெளிக்கொணர உதவுவது கல்வி" என்ற காந்தியின் சிந்தனை வெறும் சுலோகங்களாக மட்டுமே படிக்கப்படுகின்றன. கல்வித் திட்டங்களில் ஏற்படுத்தும் மாற்றங்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சியோ அவர்களிடம் மனமாற்றத்தை கொண்டு வருவதற்கான தூண்டுதல்களோ மிகக்குறைவு. வறுமை, வேலையின்மை போன்ற பொருளாதாரக் காரணிகளின் தாக்கம் மிக அதிகமாக உள்ள எமது தேசத்தில் கல்வியின் முழு நோக்கமாகவே உள்ளது.

மேலை நாட்டு அறிவியல் கண்டுபிடிப்புகளை பயன்படுத்துவதற்கான தேடலில் வாழ்வின் பெரும் பகுதி கழிந்துவிட இக்கண்டுபிடிப்புகளின் உண்மையான பயன்பாடு என்ன......? இதன் நன்மைகள் தீமைகள் எவை.......? போன்றவற்றை அறிவதற்கான வாய்ப்புகளை இழந்து விடுகின்றோம்.

போட்டி மிக்க தொழில் சந்தையில் நின்றுபிடிப்பதற்கேற்ற வகையில் தான் எமது நகர்வுகள் இருப்பதன் காரணமாக வாழ்க்கைப் படிப்பிற்கான கால அவகாசமோ சிந்தனையோ எம்மிடம் அருகி வருவதே கண்கூடு. தொழில் சந்தையில் போட்டி போடக்கூடிய வல்லமையைத் தரும் பாடசாலைகளை நோக்கி தமது பிள்ளைகளை நகர்த்தும் பெற்றோர்கள், பாடசாலைகளைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரப்படுத்தும் கல்வித் திட்டங்கள், அந்தஸ்து மிக்க வாழ்க்கைக்குரிய மூலதனமாகக் கல்வியை கருதும் எமது சமூகத்தின் மனப்பாங்கு என்பன மாறும்வரை பாடசாலைகள் அறிவுக்கான அடித்தளங் களாக இருக்கும் வாய்ப்பு சாத்தியமற்றதொன்றாகும். பரந்துபட்ட வாசிப்பால் மட்டுமே அறிவுக்கான அடித்தளம் போடப்பட முடியும் என்பது உண்மையானால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் என்ற முக்கூட்டுச் சக்திகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டினூடாகவே அறியப்பட முடியும்.

## வாசிப்பைத் தூண்டும் காரணிகள்

### வாசிப்புச் சூழல்

பிறக்கும் எந்தக் குழந்தையும் தாயிடமிருந்தே பெரும்பாலானதைக் கற்கிறது. மனித வாழ்க்கையில் பெரும்பகுதி குடும்பம், சுற்றுப்புறச் சமூகம் என்ற வட்டத்திற்குள்ளேயே கழிகிறது. “குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள். அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை” எனக் கூறும் பெஸ்டலோசி என்ற தலைசிறந்த கல்வியாளரின் கூற்று மனித வாழ்க்கையில் குடும்பமும் சுற்றுப்புறச் சமூகமும் வகிக்கும் பங்கைத் தெளிவாகக் காட்டப்போதுமானது. (சந்தானம் -1987). பார்த்துச் செய்தல் குழந்தையின் பிரதான பண்பு என்பதனால் தேடல் உணர்வுக்கான களம் இங்கிருந்தே ஆரம்பிக்கிறது.

ஆனால் துரதிருஸ்டவசமாக இன்றைய தகவல் தொழிநுட்பயுகம் மேல்குறிப்பிட்ட சூழலை அடியோடு மாற்றியமைத்துவிட்டது. ஒரு புறம் நேரம் இல்லை என்ற கோஷமும் மறுபுறத்தில் நேரம் போவதே தெரியாமல் தொலைக்காட்சியே கதி என்று கிடப்பதும் தான் குழந்தைகளுக்கு நாம் தரும் சூழலாக மாறிவிட்டது. வாசிக்க விருப்பம்! ஆனால் நேரம்தான் கிடைப் பதில்லை என்பதெல்லாம் வெறும் நொண்டிச் சாக்கு. கிணற்றடியில் செலவழிக்கும் நேரம், வேலிப்போட்டியில் மினைக்கெடும் நேரம், தொலைக்காட்சித் தொடர்களுக்குள் இம்மை மறுமையின்றி ஆழ்ந்து அமிழ்ந்திருக்கும் நேரம், போன்றவற்றில் சிறிதளவு மிச்சப்படுத்தினாலும் போதும் நேரம் தாராளமாகக் கிடைத்துவிடும். மிக முக்கியமானது வாசிக்க வேண்டும் என்ற உணர்வு மட்டுமே. எம்மைச் சுற்றி எப்போதும் நூல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுதல், நூல் எதுவும் வாசிக்கலாம் வீட்டை விட்டு எக்காரணம் கொண்டு வெளியே போவதில்லை என்று பிடிவாதமாக இருத்தல்.



படுக்கைக்கு அருகில், கைப்பையில், குசினி இறாக்கையில் என்று முக்கியமான இடங்களில் படிக்க விரும்பும் நூலை வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இத்தகைய உணர்வை உருவாக்கிக் கொள்ளலாம்.

### வாசித்தல் இலக்கு

ஒரு நாளில் எவ்வளவு நேரம் வாசிப்பதற்கு ஒதுக்குவது என்பது மட்டுமன்றி குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு நூல்களை வாசிப்பது என்பது தொடர்பான இலக்கு ஒன்றையும் அமைத்துக்கொள்ளுவது வாசிப்பைத் தூண்டக்கூடியது. இந்த இலக்கானது ஒரு நாளில் ஒரு மணிநேரம் வாசிப்புக்கு ஒதுக்குதல் என்பதாகவோ, மாதத்துக்கு ஒரு நூல் என்பதாவோ அல்லது வாரம் ஒரு நூல் என்பதாகவோ இருக்கலாம். இலக்கை அமைக்கும் வரையில் கடும் சிரமமாகவே இருக்கும். இலக்கை உருவாக்கிவிட்டால் வாசிக்காமல் விடுவது வாழ்க்கையையே தொலைத்துவிடுவது என்பதாகவே மாறிவிடும் அபாயமும் உண்டு. வாசிப்பை மேம்படுத்துவதற்கான முதலாவது படிநிலை இதுவே. வாசித்த நூல்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயார் செய்து கொள்வது இனிமேல் முக்கியமானது. பதிவை மேற்கொள்ளும் செயற்பாட்டில் சிலருக்கு நாட்குறிப்பேடு, சிலருக்குக் குறிப்பெழுதும் கொப்பி, இன்னும் சிலருக்கு படிப்பு மேசைக்கு எதிரே இருக்கும் சுவர், இன்னும் சிலருக்கு குளிர்சாதனப் பெட்டி பதிவை எங்கே சேமிப்பது என்பது முக்கியமன்று. பதிவைத் தயாரிக்கும் உணர்வே முக்கியமானது.

இனி வாசிக்கப் போகும் நூல்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயார் செய்து கொள்ளுதல், நல்ல நண்பர்கள், சக அலுவலர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் போன்றோர் நல்ல நூல்களின் தெரிவுக்கு எப்போதும் உதவுவார்கள், பத்திரிகைகளில், செய்தித்தாள்களில் வெளிவரும் நூல்விமர்சனங்கள், நூல் வெளியீட்டு விழாவின் மதிப்புரைகள் போன்றன நல்ல நூலைத் தெரிவு செய்ய உதவும்.

வாசிப்பைத் தூண்டக்கூடிய மிகப் பொருத்தமான இடம் நூலகங்களே. நூலகங்கள் அறிவுப் பதிவேடுகளின் சுரங்கம் எனப்படுகிறது. “கடலைப் போன்றது நூலகம், மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம். சிப்பி, சங்கு. சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம், குளிப்போர் குளிக்கலாம், காற்று வாங்க விரும்புவோர் காற்று வாங்கலாம், மீனினங்களைப் பிடிக்க விரும்புவோர் அவற்றைப் பிடிக்கலாம். முத்தெடுக்கலாம் செல்கின்றவரது நோக்கம் எதுவோ அதனை அவர் நிறைவேவேற்றிக் கொள்ளலாம்” என்ற தேர்ந்த வாசகர்களுள் ஒருவரான குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் கூற்று இங்கு கருத்திற் கொள்ளப்படக்கூடியது. (சண்முகலிங்கம். ம. 2005)

வாசகர் வட்டங்களுடன் இணைந்து கொள்வது வாசிப்பைத் தூண்டக்கூடியதொன்று. வாசகர் வட்டம் என்னும்போது பொதுவான பொருட் துறைகளில் ஆர்வமுள்ளோரை ஒன்று சேர்த்து அவர்களுக்கென வாசிப்பு வட்டங்களை உருவாக்குதல் ஆகும். வாசிப்பு வட்டங்களுக்கும் தேவையான நூல்களையும் வாசிப்பு வட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான இடத்தையும் தேர்ந்தெடுத்து வாசிப்பு வட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற வழிவகுக்கலாம். வாராந்த மாதாந்த ரீதியில் நடைபெறும் இத்தகைய

கருத்தூட்டல்களுக்கும் உதவுமுகமாக நூலகங்கள் தமக்கென சிறிய ளவிலாவது கருத்தரங்கு மண்டபம் ஒன்றையும் கொண்டிருக்குமாயின் வாசிப்பு வட்டம் நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பேயே அவற்றுடன் தொடர்பான நூல்களை அம்மண்டபத்தின் ஒரு பகுதியிலேயே காட்சிப்படுத்தின் வாசகர்களுக்கு இலகுவாக இருக்கும். பெரும்பாலான பொதுநூலகங்கள் வாசகர் வட்டங்களை சிறப்பாக நடத்திவருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## வாசிக்கும் நேரம்

ஒவ்வொரு நாளும் ஒரு ஒழுங்கில் குறித்த நேரத்தை அமைதியாக வாசிப்பதற்கு ஒதுக்குவதற்கு அவசியமாகும். வாசிக்கும் காலமானது தினமும் 10 - 15 நிமிடங்களாக இருக்கலாம். அல்லது கூடிய நேரமாக கிழமைக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களாக அமையலாம். தேர்ந்த எழுத்தாளர்களிடம் கேட்டால் குறைந்தது இரண்டு மணி நேரம் வாசிப்பில் செலவிடுவதாகக் கூறுவார்கள். அதேசமயம் புத்தகத்துக்குள் நுழையாமலேயே 24 மணிநேரமும் புத்தகமும் கையுமாகத் திரிபவர்களும் எம்மிடம் உண்டு. பாடசாலை மட்டத்தில் மாணவர்களைத் தாமாகவே தமக்கு விரும்பியவற்றை தெரிவு செய்து தத்தமது விருப்பப்படி வாசிக்க அனுமதிக்க வேண்டும். வாசிப்பதற்கு போதிய புத்தகங்கள் இல்லாத பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேறுபட்ட வகுப்புகளிற்கு வெவ்வேறு நேரத்தில் வாசிப்பதற்குரிய நேரத்தை ஒதுக்கலாம்.

சுதந்திரமாக வாசிப்பதற்கான நேரத்தை நாம் தேடிக்கொள்ளாதுவிடின் அல்லது பாடசாலை மட்டத்தில் வாசிப்பதற்கான நேரத்தை ஒதுக்குதலை ஒரு முக்கிய விடயமாகக் கருதாவிடின் வாழ்நாள் பூராக வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்வதை நாம் இழந்துவிடுவோம். பெற்றோரைப் பொறுத்து இருவருமே வேலைக்குச் செல்பவர்களெனில் பிள்ளைகளின் வாசித்தலை மேற்பார்வை செய்வதற்கான நேரம் அரிதாகவே இருக்கும். இன்னொரு வகையில் மாணவர்களின் பெரும்பாலான நேரம் தனியார் வகுப்புகளிலும் பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளிலும் செலவழிக்கப் படுவதனால் மாணவர்களிற்கு மனச் சந்தோசத்திற்காக வாசிக்கக் கிடைக்கும் நேரம் அற்றுப்போகிறது.

## வளமான வாசிப்பு

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான காரணி எதை வாசிப்பது என்பது தான்..... நூல்கள் வியாபாரமயப்படுத்தப்பட்டிருப்பதும், ஏனைய பொருட்களை விடவும் நூல்களின் விலை ஒப்பீட்டளவில் குறைந்து கொண்டு போவதும், ஒரே நூலைத் தரங்குறைந்த தாளில் அச்சிட்டுப் பெருந்தொகையில் மலிவுப் பதிப்புகளாக விற்கக்கூடிய வசதியும், படித்து முடிந்ததும் குப்பைக்கூடைக்குள் போடக்கூடியளவுக்கு உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நூல்களின் உற்பத்தியும், புத்தகங்கள் புனிதமானவை என்ற கருத்துநிலையைத் தகர்த்து விட்டன. குப்பைக்குள் குன்றிமணிகளைத் தேடிப் பொறுக்கவேண்டிய நிலையிலிருக்கும் இன்றைய தலைமுறையினருக்குக் கண்டதும் கற்கப் பண்டிதனாவான் என்ற பழமொழி பொருத்தமற்றதொன்று கருத்துக்கொவ்வாத கதைப்புத்தகங்களே கதியென்று கிடப்பவர்கள் கூட வாசிப்பில் முழு நாளையே தாம் செலவிடுவதாகத் தான் வாதிடுகின்றனர். ■



# வலிகாமம் தெற்கு பிரதேச பாடசாலை நூலகங்கள் பற்றிய விபரங்கள்

இத் தகவல்கள் வலிகாமம் தெற்கு பிரதேசப் பாடசாலைகளின் அதிபர்களிடமிருந்து விபரக்கொத்து மூலம் திரட்டப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. இத் தகவல்களைத் திரட்ட அனுமதியளித்த வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்களுக்கும் உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. குபேரநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உரியகாலத்தில் தகவல்களைத் தந்துதவிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியநூலகர்களுக்கும் நன்றிகள், இவ்விதழில் இடம்பெறாத விபரங்கள் அடுத்த இதழில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**யா/ ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை**

1997ம் ஆண்டில் பாடசாலை நிருவாகத்தால் உருவாக்கப்பட்ட நூலகப் பகுதி பாடசாலை மண்டபத்துடன் இணைந்ததாகத் தொழிற்படுகின்றது. பாடசாலை சமூகத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவவல்ல 337 வரையிலான நூல்களை நூலகம் கொண்டுள்ளது. தளபாடப் பற்றாக்குறை நிலவுகின்ற நூலகச் செயற்பாடுகளை ஆசிரியை செல்வி. கு. பிரியதர்சினி மேற்கொள்கிறார்.

கவர்ச்சிகரமான முறையில் நூலக நியமங்களுக்கேற்ற நூலகத்தைத் தனியே உருவாக்க விருப்பம் கொண்டுள்ள பாடசாலைக்கு பொதுமக்களுக்கும் பழைய மாணவர்களும் கவனமெடுப்பதால் நூலகக் கட்டிடம் விரைவில் கிடைக்கக் கூடும்.

**யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலை வகுப்புகளுக்கான இடம் பற்றாக்குறையாக இருந்தபோதும் மாணவர்களின் கற்றல் வாசிப்பு வழிகளுக்காக "புத்தக மூலை" ஒன்று பேணப்படுகின்றது.

**யா/ ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் வித்தியாசாலை**

ஆரம்பப்பிரிவுகளை கொண்ட பாடசாலை வகுப்பறைகளின் மத்தியில் நூலக அமைப்பைக் கொண்டுள்ளது. மாணவர்களின் கல்வித் தேவைகட்கேற்ப 500 புத்தகங்களைக் கொண்டுள்ளது. இரண்டு தினசரிகளையும் கொண்டுள்ளது. நிர்வகிப்பதற்காக ஆசிரிய நூலகர் செல்வி. மகிந்தா தியாகராஜா கடமை யாற்றுகின்றார்.

இவர்களது வளமான எதிர்காலத்தில் தனியான நூலக அமைப்பு ஏற்படுத்துதல் குறிக்கோளாக காணப்படுகின்றது.

**யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

பாடசாலையின் அமைவிடத்தினுள்ளேயே நூலகத்திற்கென தனியான அமைப்புக் கட்டிடத்தில் 2001 ம் ஆண்டு முதல் இயங்குகின்றது. தற்பொழுது 3672 நூல்களையும் விசேட சேர்க்கைகளாக 967 சாதனங்களையும் நூலுருவற்ற சாதனங்கள் வளங்களாக 15னையும் தன்னகத்தே கொண்டுள்ள நூலக பாவனையாளர்களாக 451 எண்ணிக்கை காணப்படுகிறது. மேலும் கணனி, நிழற்படப்பிரதியாக்க வசதிகள் பாடசாலையில் உள்ளவற்றைப் பயன்படுத்தவும் ஏற்றதாக உள்ளது.

தற்காலிக நூலக ஆசிரியராக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி பவானி உமாவாகீர் கடமையாற்றுகின்றார். சிறப்பாக மாணவர்களது பிறந்தநாள் புதுவருட அன்பளிப்புக்கள் பொதுமக்கள் அன்பளிப்புகளாக நூலில் சேகரம் செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் தனியான சகல வளங்களையும் உள்ளடக்கிய வசதியான கட்டிடம் அமைத்து செயற்படும் திட்டம் கையாளப்படுகின்றது.

**யா/ ஏழாலை மகாவித்தியாலயம்**

பாடசாலையின் ஒரு பகுதியில் சிறியளவில் நூலகம் மாணவர்களது கல்வி வளமாக்க இயங்குகின்றது. 310 மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான சேவையை ஆசிரிய நூலகம் திருமதி. சி. ஜனகா அவர்களால் 2005ம் ஆண்டு முதல் இயங்குகின்றது. எதிர்காலத்தில் வளமிக்க நூலகத்தை அமைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

**யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு இணைப்பில் தனியான அமைப்பாக காணப்படும் நூலகம் 1500 நூல்களைக் கொண்டுள்ளது. 2003ம் ஆண்டில் உலகவங்கி அனுசரணையுடன் அமைக்கப்பட்ட நூலகம். நூலக ஆசிரியர் ஒருவரால் இயக்கப்படுகிறது. வாசிப்பு பகுதியில் மூன்று தினசரிகள் இடம்பெற்று சிறப்பாக காணப்படுகின்றது.

**யா/ இணுவில் இந்துக்கல்லூரி**

2001ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் 3629 நூல்களை கொண்டுள்ளது. திருமதி. பாமினி ஜீவசங்கர் ஆசிரிய நூலகராகவும் உதவியாளராக செல்வி. ஞானலோஜினி சிவராசாவும் கடமையாற்றுகின்றனர். எதிர்காலத்தில் கட்டிட வசதிகள் மற்றும் நூல்களது எண்ணிக்கைகள் வளர்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகிறது.

**யா/ இணுவில் மத்திய கல்லூரி**

1215 மாணவர்களைக் கொண்டுள்ள இப்பாடசாலை நூலகமொன்றினை பயன்பாட்டிற்கு ஏற்றவாறு பேணி வருவதும் 2448 நூல்களுடன் நூலக ஆசிரியர் ஒருவரது சேவை மூலம் சிறப்படைவதும் காணப்படுகின்றது. பயனூட்டத்திற்கு வகுப்பறை நூற்பெட்டி திட்டம் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது. (வரலாற்றுக் குறிப்பு மறுஇதழில்)

**யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை**

2004இல் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் ஆரம்ப கட்டமாக 250 நூல்களுடன் சேவை வழங்கும் நிலை காட்டப்பெற்றுள்ளது. வளர்ச்சிப் பாதையில் எதிர்காலம் தங்கியுள்ளது.

**யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம் சுன்னாகம்**

2005முதல் இயங்கும் நூலகம் 1300 நூல்களையும் புதினப்பத்திரிகையும் கொண்டதாகவும் நூலகர் திருமதி சுபாஜினி சிவகுந்தன். கட்புல செவிப்புல சாதன வசதியையும் கொண்டு மாணவர்களுக்கு சேவையாற்றுகின்றது. நூல்களின் எண்ணிக்கையை வளர்க்கும் முயற்சிகள் காணப்படுகின்றது.

**யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**

2004 முதல் 300 புத்தகங்களைக் கொண்டு திருமதி. சயந்தினி சத்தியசீலன் எனும் நூலக ஆசிரியருடன் பாடசாலை வகுப்பறை அமைப்புடன் காணப்படுகின்றது. தனியான நூலக அமைப்புக்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. ■




**Sri Lanka Book Depot**

IMPORTERS, SELLERS
&
PUBLISHERS OF BOOKS, STATIONERS



*Head Office*

**Lanka Book Depot**

F.L. 1. 14, Dias Place,
Gunasinga pura,
Colombo - 12

Tel. 2341942
தொலைநகல்: 2459431

கிளை

244, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2573

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், நாவல்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட கழிவுடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

# Hatton National Bank

*A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability*

HNBயின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"





மேற்படி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்
பதன் மூலம் உங்கள்
மழலைகளின் எதிர்காலத்தேவைகளிற்கு
அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்



HNB PATHUM VIMANA

## அடகு சேவை

இப்போது சனிக்கிழமைகளிலும்
காலதாமதமற்ற துரித சேவை



HNB Personal LOANS
*A loan as personal asyour needs*

மாதாந்த சம்பளம் பெறும்
அரச/அரச சார்பற்ற / தனியார்
ஊழியர்களிற்கு அவர்களின்
தேவைகளிற்கு முற்றிலும்
கணணி மயப்படுத்தப்பட்ட
இலகு கடன் வசதி



HNB

HNB Your Partner in Progress